# ஆழ்வார் திருவுள்ளம்

டாக்டர். கு. தாமோதரன்

பூங்கொடி
பதிப்பகம்

# ஆழ்வார் திருவுள்ளம்

டாக்டர் கு. தாமோதரன்

பூங்கொடி பதிப்பகம்

22, வடகூர் செல்வ விநாயகர் கோயில் தெரு,
மயிலாப்பூர் : : சென்னை - 600 004

முதற் பதிப்பு: டிசம்பர் 1978

உரிமை : ஆசிரியருக்கு

விலை ரூபாய் ஐந்து

அச்சிட்டோர் :
வீரபத்திரர் அச்சகம்,
சென்னை—600014.

# ஆசிரியர் முன்னுரை

தொன்று தொட்டுத் தமிழகம் போற்றி வந்த சமயங்கள் சைவமும் வைணவமும் இரண்டுமாம். பழந்தமிழர் கொள்கை சைவமே என்பது ஒரு சாரார் கொள்கை. எனினும் மிகப் பழைய தமிழ் நூல்களிலும் சிவனை — நீலமணிமிடற்று ஒருவனைப்பற்றிய குறிப்பு கட்கு எவ்வகையிலும் குறைவில்லாதவாறு மாயோனைப் பற்றிய குறிப்புக்களும் உள்ளன என்பது நடு நிலை நின்று ஆயுமவர்களுக்கு விளங்கும். ஆனால் பிற் காலத்தில் சைவசமயமே பெரிய அளவில் தமிழ்நாட் டில் பரவிற்று. ஆழ்வார்கள் இராமாநுசர் போன்ற ஆசாரியர்களின் பணியால் வைணவ பக்திநெறி இந்தியாவின் மற்ற பகுதிகளிலும் பரவியது. எனினும் தமிழ்நாட்டில் தமிழ் இலக்கியத்தில் அதன் ஊற்றம் போதிய அளவு இல்லை எனலாம். அதற்கு ஒரு காரணம் வைணவ நூல்கள்—பேருரைகள் வடமொழிக் கலப்பான மணிப் பிரவாளத்தில் அமைந்ததே எனின் அது தவறாகாது. ஒரு அரிய கருவூலம் ஏற்ற அளவு போற்றப்பெறவில்லை; பயன் கொள்ளப்பெற வில்லை.

இந்த நூற்றாண்டின் பிற்பகுதியில் வைணவ மணிப்பிரவாள நூல்களை எளிய இனிய தமிழில் தரும் பணியும் அவைபற்றிய ஆய்வுரைகளும் தோன்ற லாயின. அத்தகைய முயற்சிகளில் ஒன்றே இச்சிறு நூல். அழகிய மணவாள நாயனார் எழுதிய மறை பொருளை அருமையாக விளக்கும் 'ஆசாரிய இருதயம்' என்ற நூலின் ஆய்வுரையே ஆழ்வார் திருவுள்ளம் என்ற பெயரில் வெளிவருகின்றது. இதனையொட்டி ஆங்கிலத்தில் எழுதப்பெற்ற நூல் இரண்டு ஆண்டு

கட்கு முன்னரே திருமலை திருப்பதி தேவஸ்தானத்தாரால் 'ஆசாரிய இருதயம் ஒரு ஆய்வுரை' என்ற பெயரில் வெளியிடப் பெற்றுள்ளது. மாணவர்கட்கும் வைணவம் பற்றி அறிய விரும்பும் தமிழர்கட்கும் இத் தமிழ்நூல் பயன்படும். சமூக சமய சீர்திருத்தவாதி கட்கு ஏற்ற பல கருத்துக்கள் இதில் இடம் பெறுவதால் அவர்களுக்கும் இது ஏற்புடையதாக அமையலாம் என்பது ஆசிரியரின் நம்பிக்கை.

பன்னிரு ஆழ்வார்களும் தெய்வீகப் புலவர்கள்; அவர்கள் யாவரும் ஒரே கொள்கையை வலியுறுத்துபவரே. அதனால் ஆழ்வார்களின் தலைவரான நம்மாழ்வார் உள்ளமே மற்ற ஆழ்வார்களின் உள்ளமும். ஆழ்வார்களின் நெறியின் தனிச்சிறப்பு அவர்களின் தமிழ் அகப் பொருளைத் தம்பாடல்களில் அமைத்துச் சுவை விளக்கும் திறன், தமிழ்பால் அவருக்கு இருந்த அளவிலாக் காதல், சாதி வேறுபாடு பாராட்டாது இறையன்பை மதிக்கும் தூய உள்ளம் இன்னோரன்ன செய்திகள் இதில் விளக்கம் பெருகின்றன.

இக்கொள்கைகளை ஆய்வு முறையில் விளக்கும் அழகிய மணவாளர் நூல் ஒரு வியக்கத்தக்க இயல்புடையது. அதனை நாம் முழுமையாக உணர உதவுவது அந்நூலுக்கு மணவாள மாமுனிகள் எழுதிய பேருரையாம். அதன் நயங்கள் அரியன. அவ்வறிஞர் பெருமக்கள் வாயிலாக ஆழ்வார் உள்ளம் எத்தகைய உயர்வுடையது என்பதனை நாம் அறிய முடிகின்றது. பொருள் பெரியது; என் முயற்சி சிறியது. ஆன்றோர் குற்றம் களைந்து குணம் கொண்டு மகிழ்வார்களாக.

அன்பன்,
கு. தாமோதரன்

# அணிந்துரை

காலந்தோறும் கோலம் புதுக்கி நிற்பது தமிழ். இம் மொழியில் காலந்தோறும் இலக்கியங்கள் அவ்வக்காலச் சூழ் நிலைகளுக்கேற்ப இலக்கியம் முகிழ்க்கின்றது. பழங்கால இலக்கியங்களின் பிழிவாகக் காதலும் போரும் விளங்க, இடைக்கால இலக்கியங்களின் பிழிவாகச் சமயமும் சமய நெறிக் கொள்கைகளும் துலங்கின. சங்க காலத்தை அடுத்த சங்கம் மருவிய காலத்தில் நல்ல இலக்கியங்கள் தோன்றுவதற் குரிய அரசியல், சமுதாயச் சூழ்நிலைகள் அமையவில்லை. களப்பிரர்கள் இக்காலத்தே தமிழகத்தை ஆண்டதும், 'மன்னன் எவ்வழி மக்கள் அவ்வழி' என்ற முதுமொழிக் கேற்பச் சமுதாயம் அமைந்திருந்ததும் தரமான இலக் கியங்கள் திறமாக வளரத் துணைசெய்யாமற் போய்விட்டன.

சிம்மவிஷ்ணு பல்லவன் தொடங்கி நல்லதோர் அரச பரம்பரை தமிழகத்தில் உருக்கொண்டது. மகேந்திர வர்மன் ஆட்சிக்காலத்தில் சமயமும் கலைகளும் தமிழகத்தில் தழைத் தன. தொடக்கத்தில் சமணனாகவிருந்த மகேந்திரவர்ம பல்லவன் திருநாவுக்கரசர் திருத்தொண்டால் சைவநெறி பரப்பும் தொண்டனானான். 'சைவ சமயத்தின் இரு புண்ணிய கண்கள்' எனத் திகழ்ந்த சம்பந்தரும் நாவுக்கரசரும் நற்றமிழ்த் தொண்டும் சமயத்தொண்டும் ஒருசேரச் சிறக்கச் செய்தனர். பிற்காலத்தில் சுந்தரர் திருத்தொண்டும் சேர்ந்தது.

இதே காலகட்டத்தில் ஆழ்வார்களின் அருந்தொண்டு தமிழகத்திற்குவாய்த்தது. 'காப்புமறந்தறியேன், கண்ணனே என்றிருப்பேன்' என்று வாழ்ந்த முதலாழ்வார்கள் தொடங் கிப் பின்வந்த ஆழ்வாராதிகள் திருமால்நெறி சிறக்கப் பாடு பட்டனர். நீலமேனி நெடியோனைத் தம் கோலக் கவிதை களால் பாடினர். மால்நெறி பாடிய இம்மயக்கறு மொழி யினர் மேல்நெறி இதுவென மக்களுக்கு உணர்த்திக் காட்டி னர். எளிய தமிழில் இனிய கவிதைகளை யாத்த இவர்களால் வைணவ சமயத்தோடு உடன் தமிழ்மொழியும், தமிழிசை யும், தமிழ்க் கலைகளும், தமிழ்ப் பண்பாடும் வளர்ந்தன.

மாயவனை யன்றி எவரையும் சிறிதும் ஏத்தாத நா படைத்தவரான இவர்கள் ஞாலம் உய்யக் கோலத் திருமாலை-கொண்டல் வண்ணனைப் பாடினர். தமிழ் பக்தியின் மொழியாயிற்று.

இத்தகு பெருமை வாய்ந்த ஆழ்வார் திருவுள்ளத்தை அறிந்து கொள்ளுதல் அறிஞர் மனத்திற்கு உவப்பையும், பாமரர் மனத்திற்கு ஆறுதலையும் ஒருங்கே தருவதாகும். திருமாலின் தீதில் நன்னெறியை வளர்த்த ஆழ்வார்கள் உள்ளம் இத்தகையன என்பதனைக் கள்ளமின்றிக் காட்டுவன, அவர்களுக்குப் பின்வந்த ஆசாரியர்கள் எழுதியுள்ள விளக்கங்களாகும். அவ்வாறு வைணவ சம்பிரதாயத்தை விளக்க எழுந்த நுண்பொருள் விளக்கங்களுள் சிறந்தது **'ஆசாரிய இருதயம்'** என்னும் அருமை பெருமை சான்ற நூலாகும். முதலாசாரியர் என்ற நம்மாழ்வாரைக்கொள்ளும் மரபு வைணவர்களுடையது; ஏனெனில் ஆழ்வார்களுள் நம்மாழ்வாரே முதன்மையானவர். மற்ற ஆழ்வார்களை 'அங்கங்கள்' என்றும், நம்மாழ்வாரை 'அவயவி' என்றும் வழங்கும் வழக்குண்மை அறிக. நம்மாழ்வாரின் உள்ளக்கருத்துகளையே தெள்ளத் தெளிவாக வெளியிடும் நூல் 'ஆசாரிய இருதயம்' என வழங்கப்படுவது பொருத்தந்தானே! ஆயினும் இந்நூலில் பிற ஆழ்வார்களின் உள்ளக் கிடக்கையும் புலப்படுத்தப்படுதலால் இந்நூலினை 'ஆசாரியர்களின் திருவுள்ளம்' என்றும் வழங்கலாம் என்பர் ஆன்றோர். ஆயினும் நம்மாழ்வாரின் திருவுள்ளம் இந்நூலாற் பெரிதும் விளக்கமுறுதலால் 'நம்மாழ்வார் திருவுள்ளம்' என்று வழங்குதலும் சாலப் பொருத்தமாகும் என்பர். இதற்குக் காரணம் காட்டும்பொழுது, இந்நூல் திருவாய்மொழியையே விரிவாக எடுத்து விளக்குதலையும், 'மாறன் மனம்' என்னும் பெயராலும் இது வழங்கப்படுதலையும் காட்டுவர். அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் எழுதியுள்ள இந்நூலின் கருத்தமைதிகளும் பொருளழகுகளும் போற்றிச் சுவைத்தற்குரியனவாகும்.

ஈட்டின் உரைப்போக்கினையொட்டி 'ஆசாரியஇருதயம்' எழுந்தது. ஆசாரிய இருதயத்தின் கருத்துச் சிறப்பினை

விளக்க டாக்டர் ஞ. தாமோதரன் அவர்களின் இந்நூல் எழுந்துள்ளது எனலாம்.

சில சொற்களுக்கு இந்நூலாசிரியர் கொண்ட உரை நயத்தினை இந்நூல் நன்கு புலப்படுத்துகின்றது. 'மறையாய் விரிந்த துளக்கமில் விளக்கில் கொளுத்தின' என்னும் சொற்றொடர், செய்யுட் கருத்தை விளக்கி நிற்கும் இனிய சொற்றொடரில்-'சூர்ணை'யில் வருகின்றது. 'விளக்கு' என்ற சொல் இறைவனைக் குறிப்பதாக முன் பாசுரங்களுக்கு உரைவகுத்த பெருமக்கள் கொண்டனர். ஆயினும் இவ்வாசிரியர் 'எல்லாச் சொற்களுக்கும் வித்தான அகரத்தையே மறையாய் விரிந்த விளக்'கென்று கொள்கிறார். ''அகரத்திற்கும் எம்பெருமான் பொருளாயிருப்பவன் என்ற காரணத்தால் 'விளக்கு' என்பது இலக்கணையால் இறைவனை உணர்த்துவதெனக் கூறுவதாகக் கொள்ளல் வேண்டும்'' என்று இந்நூலாசிரியர் எடுத்துக் காட்டியிருக்கும் கருத்து விளக்கம் கருத்திற்கு விருந்தாயமைகிறது.

'தமிழ்மொழி பற்றிய ஆசிரியர் கருத்து' என்னும் கட்டுரையில் அமைந்துள்ள பின்வரும் பகுதி கருத்திற் கொள்ளத்தக்கதாகும்.

> ''கவிச் சக்கரவர்த்தியாரான கம்பரும் 'என்றுமுள தென்தமிழ் இயம்பிஇசை கொண்டான்' என்று அகத்தியரைச் சொல்லும் முறையால் 'தமிழ் என்றுமுள்ளது. அநாதி' என்பது தெளிவிப்பர். ஆழ்வார் பாடல்களைச் சான்று காட்டித் தம் கருத்தை நிலைநாட்டுகின்றார் நம் ஆசிரியர். இறைவனைப் பற்றிப் பேசும் ஆழ்வார்கள், அவன் பலபல வடிவங்களில் அமைந்திருப்பதாகக் கூறுவார்கள். சில இடங்களில் அவ்விறைவன் தமிழும் வடமொழியுமாய் இருப்பதாகப் பேசப்பட்டுள்ளது. 'செந்திறத்த தமிழோசை வடசொல் லாகி' என்று திருமங்கை மன்னர்பாடல் கூறுவதை ஆசிரியர் எடுத்துக் காட்டுகின்றார். இதன்கண் தமிழும் வடமொழியும் சேர்த்துச் சொல்லப்பட்டுள்ளமை, அவை இரண்டும் ஒத்த தன்மையன என்பதனை உணர்த்தும். 'ஒத்தன

வேனும், அவற்றுள்ளும் தமிழே ஏற்றமுடையது' என்பது, 'செந்திறத்த தமிழ் என்று அடைமொழி கொடுக்கப்பட்டும், இரண்டிலும் முதலிற் சொல்லப் பட்டும் இருப்பது காட்டும் என்பது விளக்கப்படு கின்றது.''

நூலாசிரியருடைய நடைச்சிறப்பிற்குப் பின்வரும் பகுதி யினைச் சான்று காட்டலாம்.

''திருவாய்மொழி: திருமால் தன்னைத் தானே கவிபாடிக் கொள்ளும் முறையில் இப்பாடல்கள் நம்மாழ்வார் வாயிலாக வந்தன. முன்னர் இருந்த கருத்துகளே இவர் மூலம் வெளிவந்தன என்பர். இதனையே வேதம் தமிழில் வந்தது என்றும் கூறுவர். ஆழ்வார் இறைவனைப் பாட வேண்டும் என்று எண்ணியும் தமிழில் இதனைத் தர வேண்டும் என்று திட்டமிட்டும் இந்நூல் இயற்றப்பட்டது அன்று. நீர் பாலாய், பால் நெய்யாய், நெய் அமுதமாய், அதனால் நிறைந்ததோர் ஏரி கரைபொருது நெளிந்து உடைபடும். அதுபோன்று ஆழ்வாருக்கு இறைவன் ஞானம் அருளினன். அது பரபக்தி வடிவு பெற்றது. அப்பரபக்தி, பரஞானமாயிற்று. பரஞானம், பரம ஞானமாய் மலர்ந்தது. அமுதக் கடலானது, தான் உள்ள இடத்தை அழித்துவிடாமல் இருப்பதற்காக வெள்ளமெடுப்பது போன்று, ஆழ்வார் உள்ளம் வெடித்து விடாமல் இருப்பதற்காக, அவர்தம் ஆர்வம் பாடல்கள் வடிவாய் வெள்ளமிட்டு 'அவாவில் அந்தாதி' என்று பக்தியின் வலிமையால் பிறந்த அந்தாதியான ஆயிரம் என்ற சிறப்புடைய நூலாயிற்று. 'உணர்ச்சியில் பிறப்பது கவிதை' என்ற இலக்கணப்படி எழுந்தன இக் கவிதைகள் என்பதே இதன் பொருள்''.

'விதி முதலியன பற்றிய விளக்கம்' என்ற கட்டுரை, சாதி சமயக் சழக்கற்ற இறைவன் திருவடிப் பேற்றினையே பற்றுக்கோடாகக் கொண்டு உலக உயிர்கள் உய்ய வேண்டும்

என்னும் உயரிய கோட்பாட்டினைப் பின்வருமாறு விளக்கி யிருக்கக் காண்கிறோம்.

> ''ஆழ்வார் பன்னிருவருள் பல சாதியினரும் உளர். அவர்களில் தலைவராம் நம்மாழ்வார் நாலாம் வருணத்திற் பிறந்தவர்; அவர்தம் பிறவியை ஆராயலாகாது என்பதை இவ்வாசிரியர் வற்புறுத்துகின்றார். இன்பமாரியான ஆழ்வார்தம் பிறவியை ஆராய்வது இல்லங்களில் வைத்து வணங்கும் இன்பப் பொருளான இறைவன் உரு 'எந்த உலோகத்தால் ஆனது?' என்று ஆராய்வதை ஒக்கும். மற்றும் இறைவன் மொழி என்று சொல்லும்படி இருக்கின்ற இன்ப வாழ்வான, திருவாய்மொழி எந்த மொழியில் அமைந்தது என்று ஆராய்வதையும் அது ஒக்கும். இம்மூன்று செயல்களும் மிகப் பாவமானவை என்பதும் செய்யத்தகாதன என்பதும் அவர் அறுதியிட்டு உரைக்கும் கருத்தாம். இச்செயல், ஒருவன் தன்னைப் பெற்ற தாயின் பிறப்பு உறுப்பினை ஆராய்வதனை ஒத்ததாகும் என்று வரும் வடமொழிச் சுலோகம் ஒன்று இங்கு எடுத்துக்காட்டப்படுகின்றது.
>
> நாலாம் வருணத்தவரான ஆழ்வாரால் செய்யப் பட்டது என்ற காரணத்தால் அவர்தம் பாடல் ஏற்றுக் கொள்ளப்படவில்லையானால், மீனவர் குலத்துதித்த மச்சகந்தியின் மைந்தரான வியாசர் கூறிய ஐந்தாம் வேதமான பாரதம் தள்ளத்தக்கது ஆதல் வேண்டும். அவ்வாறே இடைக்குலத்துதித்த கண்ணன் கூறிய கீதை என்ற அறுமூன்று அத்தியாயங்களைக் கொண்ட உபநிஷத் நூலும் தள்ளத்தக்கதாதல் வேண்டும் (சூ. 76). இவை ஒருவருக்கும் உடன்பாடல்ல. இரு நூல்களும் யாவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டவையே. எனவே, ஆழ்வார் பாடல்களை மட்டும் ஏற்றுக் கொள்ளாமை, ஒவ்வாத செயலாம். நூல் செய்த ஆசிரியனது பிறவி அடிப்படையில் அதை ஏற்றுக் கொள்ளுதலும் தள்ளுதலும் செய்யத்தகாதன என்பது போதரும்''.

இப்பகுதியினை இன்றைய பகுத்தறிவாதிகள் படித்துத் தங்களுக்கும் முன்னமே சாதிகள் இல்லை என்ற கருத்தும், பிறப்பால் உயர்வில்லை, வாழும் சிறப்பால் உயர்வுண்டு என்ற கருத்தும் விளக்கமுறுதலைக் கண்டு வியப்பர்.

சுருங்கச் சொன்னால் இந்தக் கட்டுரை தனியாகப் பல படிகள் அச்சிடப் பெற்று நாட்டு மக்கள் அனைவருக்கும் வழங்கப்பெற வேண்டும் என்று நான் திண்ணமாகக் கூறுவேன்.

அடுத்த கட்டுரை 'ஆழ்வார் கூறும் சமயக் கொள்கைகளும் தத்துவ விளக்கமும்' என்னும் பெயரினதாகும். இக் கட்டுரையில் சாத்திர நெறிக்கும் திருமந்திர நெறிக்கும் இடையே காணும் வேறுபாடுகளை ஆசிரியர் பட்டியலிட்டுக் காட்டியுள்ளார். சாத்திரங்களிலே கூறப்படும் 'சாதன பத்தி' சாத்திய பத்தி ஆகிய இரண்டனையும் விளக்குகின்றார். இவ்விரண்டிலும் சேராத ஆழ்வார்தம் பத்தியைப் பின் வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

> "அது திருத்துழாய்க்கு மணம்போல, ஆழ்வார் பிறந்தபோது அவருடன் ஒக்கப் பிறந்தது; விட நினைத்தாலும் விடவொண்ணாதபடி உடன்வந்தது: அநுபவிக்கத் தக்க பொருளை விரும்பியவாறு அநுபவிக்காதபோது உணவு பெறாத நிலையில் பசி போன்று கஷ்டத்தையும் நோயையும் பெறும்படி செய்வது; அவனை அநுபவிக்க வேண்டுமென்ற ஆசையால் வற்றாத இயல்புடைய ஆன்மாவையும்குறித்து வரும்படி செய்வது;இன்பமான அவனைக் காண வேண்டுமென்று அலமறும்படி செய்வது; அதற்கு மேலும் இதர உபாயங்களையெல்லாம் விட்டு அவனையே உபாயமாக உறுதியுடன் பற்றியிருக்கும் இவரை 'குதிரியாய் மடலூர்தும்' என்று விடத்தக்க உபாயத்திலே இழியுமாறு செய்கையாலே விடத் தக்கதில் நிலையாக நிற்கும் கேட்டைப் பெறச் செய்யும் தன்மையது".

அடுத்ததாக அமைந்துள்ள 'தமிழ் அகப்பொருள் முறையும் உள்ளுறைப் பொருளும்' எனும் கட்டுரை நூற் சிறப்பிற்கு முடிமணியாக விளங்குகின்றது.

'பெண்ணுதற் சிறப்பு' ஏன் என்று கேட்டு ஆசிரியர் எடுத்துக்காட்டும் கீழ்க்காணும் விளக்கம் உளங்கொளத் தக்கது.

> ''ஆழ்வார் ஏன் பெண்தன்மை ஏறிட்டுக் கொள்ள வேண்டும் என்றால், அவர் வலிந்து அம்மாற்றம் பெறுதல் இல்லை. அந்நிலை தானாக வந்தடைகின்றது. இறைவனது ஆண்மையும் வடிவழகும் சீல குணமும் படுத்தும் பாடு அது. இறைவனுடைய தலைவன்முன் எல்லா உயிர்களும் பெண் தன்மை அடைந்து விடுகின்றன. உயிரின் — சேதனின் — இயல்பு 'அவனுடைமையாம் தன்மை யாதலின்' பெண் தன்மை இயல்பாக வந்து விடுகின்றது. 'பெண்களுக்கு மோட்சநிலை இல்லை' என்ற நூற்கருத்து உண்டு; ஆனால், இங்கு ஆழ்வார் பெண் நிலையடைந்து இறைவனை அநுபவித்தலை நாம் காண்கின்றோம். இராமாவதாரத்தில் முனிவர்களாய் இருந்தவர்களே இராமன் அழகில் ஈடுபட்டு அவனை வேண்டிக் கொண்டு, அவன் கண்ணனாய் அவதரித்தபோது கோபியர்களாக அவதரித்தார்கள் — அவனைக் கூடி மகிழ்ந்தார்கள் என்பர். அது ஏற்றுக் கொள்ளப்படுமானால் ஆழ்வார் அப்போதே பெண்ணிலையடைந்து இறைவனை அநுப விப்பது அதனினும் சீரிதேயன்றோ?

மேலும், ''அருளிச் செயலில் தலைமகளின் உடல் உறுப்பு களாக எடுத்துச் சிறப்பித்துக் கூறும் ஒவ்வொன்றுக்கும் உட்கருத்து உண்டு'' என்று ஆசிரியர் கூறி, அதற்கு ஆசிரியர் எடுத்துக் காட்டியிருக்கும் விளக்கங்கள் சீரியனவாயுள்ளன.

இக்கட்டுரை ஆசிரியரின் பரந்துபட்ட அறிவையும், நுண்மாண் நுழைபுலத்தையும் நுவல்கின்றதெனலாம்.

'திருவாய்மொழியில் காணும் தத்துவக் கருத்துக்கள்' என்னும் கட்டுரை நூலின் இரண்டாம் பகுதியில் முதற்கண் அமைந்துள்ளது. இக்கட்டுரை, இறைவன் குணங்களையும், ஆழ்வார் பெற்ற அநுபவத்தினையும் அழகுற விளக்கு கின்றது.

'ஆழ்வார் செய்யும் உபதேசங்கள்' என்னுங் கட்டுரையில் வரும் ''தம்மினும் இறைவன்பால் மிக்க ஈடுபாடுடையது தம் நெஞ்சு என்பது அவர் கருத்து ஆதலால், தம் மனத்திற்கு முதலில் 'பணி நெஞ்சே!' என்று ஆணையிட்டார்'' என்று ஆசிரியர் குறிப்பிட்டிருக்கும் பகுதி நெஞ்சையள்ளும் நீர்மைத்தாகும்.

நூலின் இறுதிக் கட்டுரையான 'ஐய வினாக்களும் அவற்றின் விடைகளும்' எனக் கட்டுரை, உள்ளத்தில் உளவாய ஐயப்பாடுகளை அகற்றும் அரிய நோக்கில் அழகுற எழுதப்பட்டிருக்கிறது எனலாம்.

இந்நூலாசிரியர் டாக்டர் கு. தாமோதரன் அவர்கள் எழுத்தெண்ணிப் படித்தவர். எதனையும் நுணுகி ஆராயும் திறன் படைத்தவர். அதிலும் குறிப்பாக வைணவ இலக்கியங்களில் பெருந்தேர்ச்சி வாய்ந்தவர். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் அருந்தமிழ்ப் பணியாற்றிய இவர், வைணவ இலக்கியங்களில் ஆய்வு மேற்கொண்டு 'டாக்டர்' பட்டம் பெற்றவர். எனவே இயல்பாக எழுந்த பற்றுடன் ஆராய்ச்சிப்புலமையும் வாய்த்துவிடவே இவர் அத்துறையில் ஒரு நிபுணராக (**Authority**) விளங்குகிறார். திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவராக இருந்து தமிழ்ப்புலமை நடாத்தும் இவர் அஞ்சாமையும் துணிவும் மிக்கவர். கற்க வேண்டுவன கற்று, நிற்க வேண்டிய நெறியில் நிற்பவர்; சான்றோர்களைப் பரவிப் போற்றி அவர் நெறி பற்றும் புலமையாளர். இவ்வாறு பல்லாற்றானும் பொருத்தம் வாய்ந்த இவர் எழுதியுள்ள இந்நூல் புலமைக்குக் கிடைத்த பரிசெனலாம். வைணவ இலக்கிய உலகிற்கு மேலும் புத்தொளி கூட்டும் இந்நூலினைத் தமிழ்கூறு நல்லுலகு விரும்பி வரவேற்குமாக! நூலாசிரியர் நண்பர் டாக்டர் கு. தாமோதரன் அவர்களுக்கு என் நெஞ்சு நிறைந்த பாராட்டுகள்!

''தமிழகம்''<br>சென்னை 600 029<br>12—12—1978.

சி. பாலசுப்பிரமணியன்<br>தமிழ்த்துறைப் பேராசிரியர்—தலைவர்<br>சென்னைப் பல்கலைக் கழகம்

# ஆழ்வார் திருவுள்ளம்

## முன்னுரை

**'ஆசாரிய இருதயம்'** என்னும் நூல் **ஸ்ரீ** வைஷ்ணவ சம்பிரதாயத்தை விளக்க எழுந்த இரகசியக் கிரந்தங்களுள் சிறந்தது. 'ஆச்சாரியரது திருவுள்ளம்' என்பது இச்சொற்றொடரின் பொருள். வைணவர்களுக்கு ஆசாரிய பரம்பரை ஒன்று உண்டு. ஆசாரியர்கள் ஆழ்வார்களுக்குப் பின் வாழ்ந்தவர்கள். ஆழ்வார்களின் அருளிச்செயலில் ஈடுபாடு கொண்டு, திருமாலின் **தீதில் நன்னெறியை** வளர்த்தவர்கள். சான்றோர், அப்பரம்பரை இறைவனிலிருந்தே தொடங்குவதெனக் கூறுவர். எனினும், நிலவுலகில் வாழ்ந்த ஆசாரியர்களுள் நம்மாழ்வாரையே முதலாசாரியர் என்று கொள்ளுவதுண்டு. ஆழ்வார்கள் பதின்மருள் நம்மாழ்வாரே முதன்மையானவர். அவருடைய உள்ளக் கருத்துகளையே தெளிய வெளியிடுவதால் இந்நூலுக்கு **'ஆசாரிய இருதயம்'** என்னும் பெயர் வழங்குகிறது என்பர் பெரியோர். அவரது கருத்து மட்டுமன்றி, எல்லா ஆசாரியர்களுடைய திருவுள்ளக்கருத்துகளையும் தொகுத்துரைப்பது இந்நூலாதலால், இதை **'ஆசாரியர்களின் திருவுள்ளம்'** என்றும் கூறலாம். எனினும், மற்ற ஆசாரியர்களும் முதலாசாரியரான நம்மாழ்வாரை ஒட்டியே பேசுவதாலும், மற்ற ஆழ்வார்களை நம்மாழ்வாருக்கு அங்கங்கள் எனக் கூறுதல் மரபாதலால், **'நம்மாழ்வார் திருவுள்ளம்'** எனக் கொள்வதே சாலவும் பொருத்தமாம்.

இந்நூலும் நம்மாழ்வார் திருவாய்மொழியையே விரிவாக எடுத்து விளக்குதலும், **'மாறன் மனம்'** என இது வழங்கப் பெற்றிருத்தலும் அதனை வலியுறுத்துவனவாம்.

இந்நூலின் ஆசிரியர், அழகிய **மணவாளப் பெருமாள் நாயனார்** என்பவர். இவர், திருவாய்மொழிக்கு அமைந்த தெள்ளிய விரிவுரையாகிய **'ஈடு'** என்ப்பெறும் **'முப்பத்தாறுயிரப்படி'**யை நாடறிய எழுதிய **வடக்குத் திருவீதிப்பிள்ளை** என்பவருடைய இளைய மைந்தர். பல இரகசிய விளக்க நூல்களை இயற்றித் தென்கலை வைணவத்தை நிலைநாட்டிய **பிள்ளை லோகாசாரியருக்கு** இளவல். இவர்தம் வாழ்வும் வரலாறும் குறித்து நமக்கு விளக்கமாக ஒன்றும் தெரியவில்லை. **'முடும்பை'** என்பது இவர் பிறந்த ஊர். தம் தமையனுரைப் போலவே இவரும் பிரமசாரியராகவே தம் வாழ்வைக் கழித்தவர். இவர் வாழ்ந்த காலம், 14 ஆம் நூற்றுண்டு என்பது தெரிகின்றது. இவர் தம் தந்தையாருடன் திருவரங்கத்தில் வடக்குத் திருவீதியில் வாழ்ந்திருத்தல் வேண்டும். இவர் சில ஆண்டுகளே வாழ்ந்தார். இவருடைய ஆழ்ந்த புலமையும், வடமொழி தென்மொழி அறிவும், இறை ஈடுபாடும் இவர்தம் நூல்களாலும் உரைகளாலும் விளங்கும். **'அருளிச் செயல் ரகஸ்யம்'**, **'ஆசாரிய ஹிருதயம்'** என்னும் இருநூலும் இவர் இயற்றியவை. **ஸ்ரீ** ஆண்டாளுடைய திருப்பாவைக்கு ஆறுயிரப்படி வியாக்கியானம், அமலனுதி பிரான் வியாக்கியானம், கண்ணிநுண்சிறுத்தாம்பு வியாக்கியானம், ஆகிய மூன்றும் இவர்தம் உரைகள். **'பட்டோலை'** என்பதோர் இரகசிய நூலும் இவர் செய்ததாகக் கூறுவர். இவர்தம் நூல்கள் வாயிலாகவே இவரைப்பற்றி நாம் அறிந்து கொள்ள இயல்கிறது.

'ஆசாரிய ஹிருதயம்' என்னும் நூல் உபநிடதங்கள், இதிகாச புராணங்கள், ஆழ்வார்களின் அருளிச்செயல், ஆசாரியர்களின் பாசுரங்கள் இவற்றின் திரண்ட வடிவமாம் என்றுல், அது தவறுகாது. ஒருவர் தாம் சொல்ல விரும்பும் கருத்தைத் தம் சொற்களாற் சொல்லி, அதனை நிறுவ

எடுத்துக்காட்டுகள் தருவது ஒருமுறை. அப்படியல்லாமல், அறிஞர் பெருமக்கள், புலவர்கள், முனிவர்கள், ஆழ்வார்கள் என்ற இன்னோரன்னவர் பாசுரங்களில் வரும் சொற்றொடர் களையும் சொற்களையும் எடுத்து ஒன்றாக இணைத்து அதனால் ஒரு பொருள் விளங்கும்படி செய்வது இவர் மேற் கொண்டுள்ள புதுமையானதோர் உத்தியாகும். இந்நூலில் எடுத்தாளப் பெற்றுள்ள சொல் அமைந்த நூல்கள்: இராமா யணம், பாரதம், உபநிடதங்கள், கீதை, மனுஸ்மிருதி, விஷ்ணு புராணம் முதலிய புராணங்கள், வேதம், **ஜிதந்தா**, ஆழ்வார்களின் அருளிச்செயல், இராமநுச நூற்றந்தாதி, ஆளவந்தார் தோத்திரம், இராமாநுசர் நூல்கள், கூரத்தாழ் வான் பனுவல்கள், பட்டர் பாசுரங்கள், பாகவதம் என்பன வாம். இவ்வாசிரியரின் உபய வேதாந்தப் புலமையை இஃது ஒருவகையாக விளக்குமன்றோ?

## நூல் தோன்றக் காரணம்

அருளிச் செயலுக்கு விளக்கவுரை தந்தவர் பலர். திருவாய் மொழிக்குப் பற்பலர் தந்த வியாக்கியானங்கள் உள்ளன. **திருக்குருகைப்பிரான் பிள்ளான்** என்பார் இயற்றிய **ஆறாயிரப்படி**யும், **நஞ்சீயர்** இயற்றிய **ஒன்பதினா யிரப்படி**யும், **பெரியவாச்சான் பிள்ளை** இயற்றிய **இருபத்து நாலாயிரப்படி**யும், **நம்பிள்ளை** என்பவர் சொல்லியதை **வடக்குத் திருவீதிப்பிள்ளை** என்பார் இயற்றிய **'ஈடு'** என்னும் **முப்பத்தாறாயிரப்படியும், பாதிகேசரி அழகிய மணவாளசீயர்** இயற்றிய **பன்னீராயிரப்படி**யும் ஆகிய இந்த ஐந்து வியாக்கி யானங்களும், முப்பத்தாறாயிரப்படிக்குச் **சீயர் அரும்பதம், அடைய வளைந்தான் அரும்பதம்'** என்னும் இரு குறிப்புரை களும் இன்று உள்ளன. இவர்களுள் **பெரியவாச்சான் பிள்ளையே** அருளிச் செயலின் எல்லாப் பகுதிகட்கும் உரை இயற்றியவர். அவரே **வியாக்கியானச் சக்கரவர்த்தி** என்று பாராட்டப் படுகின்றார்.

அருளிச்செயல் நாலாயிரமும் தொகுத்த **நாதமுனிகள்** காலம் தொடங்கி **'உடையவர்'** என வழங்கப்படும் **இராமானுசர்** காலம் வரையும் உரைகள் வழிவழி வாய்மொழியாகவே சொல்லப் பெற்று வந்தன என்றும், உடையவரின் காலத்தில் யாவருக்கும் பயன்பட அவை எழுத்துருவம் பெறவேண்டும் என்ற நல்லெண்ணத்தால் அவர் அதற்கு இசைந்தார் என்றும் சொல்லப்படுகின்றது. திருக்குருகைப் பிரான் பிள்ளான், இராமானுசர்தம் நெருங்கிய சீடர்; அவருக்கு மானத புத்திரர் எனக் கருதப்பட்டவர். அவர்தாம் இராமானுசர்தம் இசைவின் பேரில் முதல் உரையை எழுதினார். ஒரே உரை எழுதிவிட்டால் 'இவ்வளவுதான் இதன் பொருள்', என்று குறையறிவுடையார் நினைக்கக்கூடுமென்ற கருத்தாலேயே இராமானுசர் முதலில் இதற்கு இசையவில்லை. எனினும், முதல் உரை இயற்றப்பட்ட பின்பே அதனைப் பின்பற்றிப் பின்வந்தவர்கள் முன்னதனினும் விரிவான வகையில் தத்தம் அறிவும் அனுபவமும் பத்தியும் தோன்ற விரிவுரை எழுதலாயினர். அதனால் இலக்கியச் சுவையோடு தத்துவ விளக்கமும் ஒருங்கிணைந்து வளர்ந்தது. சமய நூல்களில் வைணவ நூல்களுக்கே—சிறப்பாகத் **திருவாய்மொழிக்கே**—இப்படிப் பல உரைகள் இயற்றப்பட்டன. அவற்றில் பல ஐதிகங்களும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. அனுபவம் பெற்ற பெருமக்களால் செய்யப்பட்டவையாதலால், அவ்வுரைகள் படிப்பார்க்கு இறைவனிடம் ஈடுபாடு விளைப்பனவாயின. உரையியற்றியவர்கள், வடமொழி தென்மொழி இரண்டும் கற்று வல்லவர்களான பேரறிஞர்களாகையால், அவை இருமொழி கலந்த **மணிப்பிரவாள நடையில்** அமைந்துள்ளன.

இவ்வுரைகளில் **'ஈடு'** எனப்படும் உரை, தனிச் சிறப்புடையதெனக் கருதப்படுகிறது. அண்மையில் இது தமிழாக்கமும் செய்யப்பட்டுள்ளது. சொற்செட்டும் பொருட்செறிவும் உடையது இவ்வுரை. இதன்கண் பல மேற்கோள்கள் காட்டி, அவற்றுக்கெல்லாம் அவ்வாசிரியர்

சிறந்தவுரை எழுதிக்கொண்டு போகின்றார். ஒரு திருவாய்மொழியோடு மற்றொரு திருவாய்மொழிக்கும், ஒரு பாசுரத்தோடு மற்றொரு பாசுரத்திற்கும் தொடர்பு கூறிச் செல்லும் முறை, மிக வியக்கத்தக்கதாக இருக்கிறது. பல இடங்களில் பதசாரம் கூறும் முறை, மிகவும் சுவை பயப்பதாய் உள்ளது. இவ்வுரையைப் '**பகவத் விஷயம்**' என்று வழங்குவது வைணவ மக்கள் மரபு. இதில் ஆளவந்தார் கூறும் பொருள்களும், அதற்கும் மேலாக இராமானுசர் எடுத்து விளக்கிய நயங்களும், மற்றும் வேறு ஆசாரியர்களும் அன்பர்களும் கூறிய உரை வேறுபாடுகளும் ஆங்காங்கே எடுத்துக் காட்டப்படுகின்றன. நஞ்சீயருக்கு ஆசிரியர் **பட்டர்.** அவர் கூரத்தாழ்வானுக்குப் புதல்வர். தத்துவ ஆராய்ச்சியில் நின்ற **சீயரை** ஆழ்வார் அருளிச்செயலின் அருமையைக் காட்டி இலக்கியச் சுவைக்கு ஈர்த்தவர் இவரே. இந்த ஞானப் பரம்பரையே இதனைச் சொற்பொழிவாகவும் உரையாகவும் மேலும் வளர்த்தது. பட்டர் கூறும் உரைகள் எண்ணியெண்ணி மகிழத்தக்க நயம் மிக்கனவாகும்.

ஈட்டு உரையின் போக்கினை ஒட்டியே **ஆசார்யஹிருதயம்** எழுந்தது. அந்த உரைகள் இருக்கவும், இந்த நூல் எழுதவேண்டிய தேவை என்ன என்ற கேள்வியும் எழுகின்றது. நம்பிள்ளை என்னும் பெரியவர் சொற்பொழிவு செய்து வருகையில், பெரியவாச்சான் பிள்ளை, வடக்குத்திருவீதிப் பிள்ளை என்னும் அவர் சீடர்கள் அதனை எழுதியந்தனர். அதில் வடக்குத் திருவீதிப் பிள்ளை எழுதியதையே சிறந்தது என அவர் தேர்ந்தெடுத்தாராம். ஆயினும், 'உரைகள் வழங்கத்தொடங்கின் ஆழ்வாரின் மூலநூல் படிக்கப்படாமல் போய்விடுமோ!' என்று அஞ்சி அதனைப் பெற்றுத் தம் பூசையில் வைத்துவிட்டாராம் நம்பிள்ளை. அவர்தம் ஆசாரிய பத்தி அத்தகையது. இவ்வாறு ஈடு பிறர்க்குக் கிட்டாமல் இருந்த நிலையிலேதான் ஈட்டின் கருத்துகளையும் முறையையும் பெரிதும் தழுவிய இந்த ஆசாரிய ஹிருதயம் எழுந்தது என்று காலஞ்சென்ற

**டாக்டர் கே. எஸ். கிருஷ்ணர்** கருதினர் என்று **டாக்டர் தெ. பொ. மீ.** அவர்கள் தெரிவித்துள்ளார்கள். திருவாய்மொழியையும் ஆழ்வார் திருவுள்ளத்தையும் நன்கு புரிந்துகொள்ளுவதற்குப் பரந்து விளங்கும் ஈட்டு உரையைக் காட்டிலும் சுருக்கமான முறையில் தெளிவுற விளக்கும் நூல் இது என்பதில் சிறிதும் ஐயமில்லை. இது ஒரு திறனாய்வு நூலைப் போன்றும் திகழ்கின்றது. அவ்வியப்பை வருகின்ற பக்கங்களில் நன்கு அறியலாம்.

முன் ஆசாரியர்கள் கூறும் பொருள்கட்கு மாறுனதும், ஆனாலும் முரணில்லாததுமான புதுப்பொருள்களைச் சில இடங்களில் இந்நூலாசிரியர் தம் சூர்ணைகளில் அமைத்துள்ளார். அவற்றுள் சில இடங்கள் இங்கு எடுத்துக் காட்டப்படுகின்றன:

செய்யுட்கருத்தை விளக்கி நிற்கும் இனிய சொற்றொடரைச் சூர்ணை என வழங்குவர்.

(1) முதற் சூர்ணையில் 'மறையாய் விரிந்த துளக்கமில் விளக்கில் கொளுத்தின' என்னும் சொற்றொடர் வருகின்றது.

'மிக்கானை **மறையாய் விரிந்த** விளக்கை'[1] என்பது திருமங்கையாழ்வார் பாசுரம். 'தோன்று சோதி மூன்றுமாய்த் **துளக்கமில் விளக்கமாய்**'[2] என்றருளிச் செய்திருப்பவர் திருமழிசையாழ்வார். இவ்விரு தொடர்களில் ஒவ்வொரு பகுதியை எடுத்து இணைத்து 'மறையாய் விரிந்த துளக்கமில் விளக்கு' என்றமைத்தார் இவ்வாசிரியர். முன் பாசுரங்கட்கு உரை வகுத்தவர்கள் 'விளக்கு' என்பது இறைவனைக் குறிப்பதாகவே கொண்டுள்ளனர். எல்லாச் சொற்களுக்கும் வித்தான அகரத்தையே மறையாய் விரிந்த விளக்கென்று இவ்வாசிரியர் கொள்வது உரையால் விளங்குகின்றது. 'விரிந்த என்ற' என்ற சொல்லாட்சி, இவர் கொள்ளும் பொருளின் பொருத்தத்தை உணர்த்தும். அகரத்திற்கும் எம்பெருமான் பொருளாயிருப்பவன் என்ற காரணத்தால் 'விளக்கு' என்பது இலக்கணையாய் இறைவனை உணர்த்துவதெனக் கூறுவதாகக் கொள்ளல் வேண்டும்.

(2) 50 ஆம் சூர்ணையில் 'பண்ணார்பாடல் பண்புரை இசைகொள் வேதம் போலே' என்ற தொடர் வருகின்றது. 'பண்ணார்பாடல்' என்பதற்குப் 'பண்ணோடு சேர்ந்துள்ள இசையையுடைய திருவாய்மொழி' என்பது பொருளாகும். இத்தொடர் திருவாய்மொழியில் வருவது.[3] 'பண்புரை இசை கொள் வேதம்' என்பது பண்புரைவேதம், இசைகொள்வேதம் என்று பொருந்தும். அருளிச் செயலிலும் அதன் உரை களிலும் 'பண்புரை வேதம்' என்ற தொடர் எங்கும் வர வில்லை. ஆனால் 'பண்புடை வேதம்'[4] என்ற தொடர் எடுத் தாளப்பட்டுள்ளது. 'பண்புரை' என்பது, பண்ணை-இசையைப் புரைந்திருக்கின்ற—பண்ணுக்கு ஆதரவாயிருக்கின்ற வேதம் என்னும் பொருள் தரும். இது ஒரு புதிய ஆட்சி என்றே உரையாசிரியரும் எடுத்துக் காட்டுகின்றார்.

'இசைகொள் வேதம்' என்ற தொடர், பெரிய திருவாய் மொழியில் வருவது.[5] இது சாம வேதத்தைக் குறிக்கின்றது. அதனைக் குறிக்க வேறு பெயர்களை வேறிடத்திலிருந்து எடுத்து ஆளாது இத்தொடரினை எடுத்தது ஒரு காரணம் பற்றியேயாகும். திருவாய்மொழி இசையையுடையது, பண்ணும் இசையும் சாம வேதத்திற்கும் உண்டு என்று அறி விக்கவே 'பண்புரை இசைகொள் வேதம்' என்றார் போலும்!

(3) சூர்ணை 75ல் 'இன்ப மாரியில் ஆராய்ச்சி' என்ற தொடர் வருகின்றது. 'அடியார்க்கு **இன்ப மாரியே**'[6] என்பது திருவாய்மொழிப் பாசுரப்பகுதி. இந்த உலகமெல்லாம் தனக்கு உரிமையானது என்று சொல்லும்படி நின்ற இறைவனைப்பற்றி வளப்பமான தமிழ் நூலைச் செய்தற்கு நான் புண்ணியத்தைச் செய்தவன். இந்நூல் 'அடியார்க்கு இன்பத்தை உண்டாக்கும் மழையாகும்—மேகமாகும்' என்பது அதற்கு முன்னோர் வகுத்துள்ள உரை. இது தமக்கு இனிப்பதனால் மற்றவர்கட்கும் அவ்வாறே இனிக்குமென்பது ஆழ்வார் எண்ணம்.

'இன்ப மாரி' என்ற இத்தொடர், இந்நூலில் 'அடிய வர்க்குத் திருவாய்மொழி வாயிலாக இன்பத்தைப் பொழியும் மேகமான ஆழ்வார்' என்ற பொருளில் ஆளப்படுகின்றது. திருவாய்மொழி பரமாக ஈடு கூற, ஆழ்வார் பரமாகக் கொண்டு இவர் பொருள் அமைக்கின்றார். இவ்வாறு ஆழ் வார் பாடல்களுக்கு முன்னோர் கொண்ட பொருளுக்கு மாறான பொருள் இவர் அமைத்துக் காட்டலை நாம் காண் கின்றோம்.

திருவாய்மொழியின் நாலாம்பத்து ஐந்தாம் திருவாய் மொழியின் மற்றப் பாடல்களை நோக்கும்போது 'இன்ப மாரியே' என்பதற்கு 'நான் அடியவர்க்கு இன்ப மாரி ஆயினேன்',[8] என்று ஆழ்வார் தமக்குள் மகிழ்வதாகக் கொள்ளும் பொருளே, பொருத்தமுடையதாகவும் சிறப் புடையதாகவும் தோன்றுகின்றது. அப்பாடலின் அவதாரி கையில் அதன் உரையாசிரியர் இப்பொருளையும் குறித்தல் அறியத்தகும்.

(4) சூர்ணை 99, இறைவனை அடைதற்குச் சாதன மாகக் கொண்டொழுகும் சாதன பத்தியின் இயல்பை விளக்குகின்றது. அதில் முறைப்படி இறை வழிபாடுசெய்து, அவனை இடையறாது நினைப்பதனால் அந்தக்கரணங்கள் தூயராகப் பெற்று, இந்திரியங்களை அடக்கி, அவற்றை இறைவனைப் பற்றியதாகிய செந்நெறியிலே நிறுத்தி, அவற்றின் போக்கினைத்தடுத்து, ஐந்துவகைத் துன்பங்களையும் போக்கி, 'விளக்கினைக் கண்டு' என்பது வருகின்றது.

'விளக்கினை விதியில் காண்பார்'[7] என்பது திருமங்கை மன்னன் பாசுரம். அங்கு 'விளக்காகிய இறைவன்' என்றே பொருள் கொள்ளப்பட்டுள்ளது. ஆனால் ஆசாரிய இருதயத் தில் மணவாள மாமுனிகள் 'ஆத்தும தரிசனம் செய்து' என்றே பொருள் கொள்ளுகின்றார். அதற்குரிய காரணத்தையும் அவர் அங்கு எழுதியுள்ளார்.

(அ) அதே சூர்ணையில் பிற்பகுதியில் 'அரும் பெருஞ் சுடரைக் கண்டு' என்றும், 'கனவில் மிக்க தர்சன சமமாய்' என்றும் வரும் தொடர்களால் இறைவனைக் காணுதல் பற்றிச் சொல்லுகையால் இங்கு 'விளக்கினைக் கண்டு' என்பது ஆன்மாவினைக் காணுதல் அல்லது அறிதல் என்றே கொள்ள வேண்டும்.

(ஆ) மற்றும் ஆசாரிய இருதயக்காரர் அப்பொருளே கொள்ளுகின்றார் என்பது முன் சூர்ணை 23ல் 'விதியில் காணும் பிரதம மத்யம தசைகள்' என்று அவர் தாமே கூறுவதனாலும் வலியுறும். 'சாத்திரங்களில் சொல்லிய விதிமுறைப்படி கேட்டல், இடைவிடாது நினைத்தல் இவற்றால் காணுகின்ற முதல் நிலையான அடிமைத்தன்மையும், இடைநிலையான அனுபவிக்கும் தன்மையும்' என்பது அதன் பொருள். இந் நிலைகளை அடைவது ஆன்மா ஆகையால் 'விளக்கினைக்கண்டு' என்ற இவ்விடத்திலும் விளக்கு என்று ஆசிரியர் குறித்தது ஆன்மாவினை என்றுதான் கொள்ள வேண்டியுள்ளது. இதுவும் பெரியவாச்சான் பிள்ளை அவர்கள் காணும் பொருளுக்கு மாறாக இவ்வாசிரியர் கொள்ளும் பொருள் என்பது தெளிவு.

(5) சூர்ணை 184 வளம் மிக்க வாட்டாற்றில் காணும் அர்ச்சாவதாரச் சிறப்பை விளக்குவது. அடியவர்களுக்கு முத்தியைக் கொடுக்குமளவில் அவர்கள் விதித்தபடி நிற்கிற 'ஆச்ரித பாரதந்தரியம்' அங்கு அளவற்ற வகையில் ஓடும் என்கின்றார். 'மோக்ஷ தானத்தில் பிரணத பாரதந்தர்யம் வளமிக்க நதியிலே கரை புரளும்' என்பது சூர்ணை. பிரணத பாரதந்தர்யமாவது, அடியவர் விரும்புகிறவாறு நடந்து கொள்ளும் தன்மை. அஃதாவது, அவர்கள் உடைமையாம் தன்மையை இறைவன் அடைதல்.

திருவாய்மொழியில் 'அருள் தருவான் அமைகின்றான் அது நமது விதிவகையே'[8] என்ற பகுதிக்கு முன்னோர்கள் கூறும் உரை, 'நமது புண்ணியத்திற்குத் தகுதியாக அவன் அருள் தருவான்' என்பது. ஸ்ரீ உடையவர் அது கேட்டு இது

முன் பாசுரங்களில் வரும் பொருளுக்கு ஏற்றவாறு இல்லையாகை யால், 'நாம் விதித்தபடியே செய்வானாய் இருந்தான்' என்று அருளிச் செய்தாராம். ஈடு இவ்விரு பொருள்களையும் தரு கின்றது. இவ்வாசிரியர் உடையவர் கூறும் பொருளே பொருத்தமுடையது எனக் கொண்டு அதனையே தம் நூலில் குறித்தலைக் காணுகின்றோம்.

(6) சூர்ணை 205 ஆழ்வாருடைய உபதேசம் பயனுடைய தாயிற்று என்பதை விளக்க எழுந்தது. அதில் புகழில் விருப்பமும் செல்வ ஆசையும் பிறர் போற்ற வேண்டுமென்ற அவாவும் இன்றி மலர்நாடி ஆட்செய்ய உலகர் யாவரும் திருந்தினர். அதனால் உலகினர் நல்வாழ்வு பெறவில்லையே என்று இவர் கொண்ட வருத்தமும், தமக்குப் பேச்சுத் துணை யில்லாமையால் வந்த ஏக்கமும், அவன் மென்மைத் தன்மை யறிந்து பரிவு காட்டுவதற்கு ஒருவருமில்லையே என்ற இழவும் தீரப் பெற்றன என்கின்றார். இங்கு 'மலர்நாடி' என வரும் தொடர் 'நறிய நன்மலர் நாடி'[9] என வரும் திருவாய்மொழிச் சொற்றொடராகும். இதற்கு ஈட்டிலும் மற்ற உரைகளிலும் 'மணமுடையதாய் நன்றாயிருப்பதான மலர்கள் போலே யிருக்கின்ற சொற்களை ஆராய்ந்து சொன்ன ஆயிரம்' என்னும் பொருள் உள்ளது. நூலின் சிறப்புக் கூறுவதாகவே இத்தொடர் அமைந்துள்ளது. அப்பொருளை இங்குக் கொள்ள இயலவில்லை. எனவே, 'ஆத்தும மலர்களைத் தேடி' என்று கொள்ளுதலே ஆசிரியர் நினைவாய் இருத்தல் வேண்டும். ஆத்தும மலர்களைத் தேடிக் கைங்கரிய வடிவமாக இவர் உபதேசிக்கையால் நாடெல்லாம் திருந்திற்று என்று கொள்ளல் வேண்டும்.

# தமிழ் மொழி பற்றிய ஆசிரியர் கருத்து

இக்காலத்தில் நமது நாட்டில் மொழிப்பற்றுக் குறித்தும் மொழியின் தூய்மை குறித்தும் பலவாறு பேசப்படுகின்றது. வேற்று மொழிச் சொற்களைச் சேர்த்து எழுதுகின்றவர்களுக்குத் தம் மொழியின்பால் அன்பில்லை என்றும், அவர் செயல் மொழியைக் கெடுப்பதாகுமென்றும் ஒரு கருத்து நிலவுகின்றது. அதனுல், மொழிக்கு நன்மையா தீமையா என்பது இன்றைய நம் ஆராய்ச்சிக்கு அப்பாற்பட்டதாகையால், அதனை விடுத்து, 'இருமொழியும் கலந்து எழுதியுள்ள இந்நூலாசிரியர் போன்றவர்களின் தமிழ்ப்பற்று எத்தகையது? அவர்கள் தமிழ்மொழிபற்றிக் கொண்டிருந்த கருத்து என்ன?' என்பதை இங்கு ஆராய்ந்து அறிவது இன்றியமையாததாகும்.

இந்நூலாசிரியருக்கு முன் வாழ்ந்த ஆசாரியர்கள் வடமொழியில் நூல்களும் உரைகளும் எழுதியவர்களாயிருந்தாலும், 'கோயில்' நடைமுறைகளை ஒழுங்கு செய்த இராமனுசர் தமிழிற்குத் தனி ஏற்றம் அங்கு அமைத்திருப்பதை இங்கு நாம் நினைவு கொள்ளல் வேண்டும். அங்கே வடமொழி வேதங்களும் தமிழ் வேதங்களாய நம்மாழ்வார் நூல்களும் ஒப்ப மதிக்கப்பட்டன; ஓதப்பட்டன. மற்ற ஆழ்வார் பாசுரங்களுக்கும் ஏற்ற இடம் அளிக்கப்பட்டது. நாள் தோறும் முறைப்படி கோயிலில் திருவாய்மொழி ஓதப்படுவது மட்டுமன்றித் **'திருவாய்மொழித் திருநாள்'** என்னும் விழாவும்

ஆண்டுதோறும் மார்கழி மாதத்தில் வைணவக் கோயில்களில் ஏற்பாடு செய்யப்பட்டு எண்ணூறு ஆண்டுகளாக நடைபெற்று வருகின்றது. அருளிச் செயல் நாலாயிரமும் **'பகற்பத்து விழா, இராப்பத்து விழா'** என இரு பிரிவுகளாக்கி ஓதப்படுவதும், விரிவுரைகள் படிக்கப்படுதலும், அபிநயங்கள் பிடித்துக்காட்டுதலும், அதற்கு **அரையர்கள்** அமைக்கப்பட்டிருத்தலும், அவர்களுக்குக் கோயிலில் முதன்மையான சிறப்பு வழங்கப்படுதலும் அறியத்தக்கன. இம்முறை **நாதமுனிகள்** காலந்தொடங்கியே வந்தது எனலும் உண்டு. திருவரங்கம் பெரிய கோயிலில் இன்றும் நடைமுறையில இதனைக் காணலாம். **அழகிய மணவாள நாயனார்** தம் நூலில் தமிழ்பற்றிக் கூறும் கருத்துகளை இனிக் காண்போம்.

## தமிழ்பற்றிய குறிப்புகள்

தமிழைத் **'திராவிடம்'** என்ற சொல்லால் குறிக்கின்றார் இவ்வாசிரியர் (சூ 40). 'திராவிடம்' என்பதற்கு இன்றுள்ள பொருள்,ஒரு மொழிக்குழுவிற்குப்பெயராய் இருப்பது, மொழி நூல் இயற்றிய பேரறிஞர் **கால்டுவெல்** என்பார் காலத்தில் அமைந்தமை இவரால் நிலைநாட்டப்பட்டது. நம் ஆசிரியர் கூறுவதே பழம் பொருள். இவர் வடமொழியாகிய சம்ஸ்கிருதத்திற்கும் தமிழிற்கும் உள்ள தொடர்பு பற்றிப் பேசுகையில் இரண்டும் இரு வேறு பிரிவுகள் என்கின்றார். இரண்டும் ஒத்த சிறப்புடையன என்பதையும் விளக்குகின்றார். தமிழுக்கு **'ஆகஸ்தியம்'**, என்பது ஒரு பெயர். அதற்கு 'அகத்தியரால் செய்யப்பட்டது' என்று பொருள் கொண்டு, 'ஒரு முனிவரால் உண்டாக்கப்பட்ட மொழியை அநாதியான வடமொழிக்கு ஒப்பாகக் கூறுவது எவ்வாறு பொருந்தும்?' என்ற கேள்வியை எழுப்பி, விடையும் தருகின்றார் (சூ. 41). 'அகத்தியரால் வெளிப்படுத்தப்பட்டது என்பதால், தமிழ் அப்பெயர் பெற்றதேயன்றித் தமிழ் அகத்தியர்க்கு முன்னும் உள்ளதே. அதுவும் அநாதி ஆனதே' என்பதே அவர் தரும் விடை. இவ்வாறே வேதப்பாடல்கள் எல்லாம் இருடிகள் வழியே

வெளியானதைக் காணலாம். கவிச்சக்கரவர்த்தியாரான கம்பரும் '**என்றுமுள** தென்தமிழ் இயம்பிஇசை கொண்டான்' என்று அகத்தியரைச் சொல்லும் முறையால் 'தமிழ் என்றுமுள்ளது. அநாதி' என்பது தெளிவிப்பர். ஆழ்வார் பாடல்களைச் சான்று காட்டித் தம் கருத்தை நிலைநாட்டுகின்ருர் நம் ஆசிரியர். இறைவனைப்பற்றிப் பேசும் ஆழ்வார்கள் அவன் பலபல வடிவங்களில் அமைந்திருப்பதாகக் கூறுவார்கள். சில இடங்களில் அவ்விறைவன் தமிழும் வடமொழியுமாய் இருப்பதாகப் பேசப்பட்டுள்ளது. 'செந்திறத்த தமிழோசை வடசொல் லாகி' என்று திருமங்கை மன்னன் பாடல்[2] கூறுவதை ஆசிரியர் எடுத்துக் காட்டுகின்ருர். இதன்கண் தமிழும் வடமொழியும் சேர்த்துச் சொல்லப்பட்டுள்ளமை, அவை இரண்டும் ஒத்த தன்மையன என்பதனை உணர்த்தும். 'ஒத்தனவேனும், அவற்றுள்ளும் தமிழே ஏற்றமுடையது' என்பது, '**செந்திறத்த** தமிழ்' என்று அடைமொழி கொடுக்கப்பட்டும், இரண்டிலும் முதலிற் சொல்லப்பட்டும் இருப்பது காட்டும் என்பது விளக்கப்படுகின்றது.

தமிழிலும் வேதம் உண்டு என்பர் இந்நூலாசிரியர். '**வடமொழி மறை**'[3] என்று வரும் தொடர் அக்கருத்தை வலியுறுத்தும் என்கிருர். தென்மொழியாய தமிழிலும் மறையில்லை என்ருல், வடமொழிமறை என்று அடை கொடுத்துச் சொல்ல வேண்டாவன்ருே? மறைகள் அநாதியானவை: அவை பிரமா மூலமாக வந்தன. அதே போன்று, ஆழ்வார்மூலம் தென்மொழிமறை எழுந்தது. கருத்துகள் என்றும் உள்ளனவே. ஞானம்—உண்மை ஞானம்—என்றும் உள்ளது. நூல் வடிவில் பாராத போது அஃது ஆண்டவன் திருவுள்ளத்திற்கிடந்தது எனலாம்; இருடிகளும் கவிகளும் அதனை வெளிப்படுத்துவதால் அவ்வுண்மைகளை அவர்களோடு இணைத்துக் கூறும் வழக்கம் உண்டு. '**நியூட்டன் நியதிகள்**' அல்லது '**சட்டங்கள்**' அவர் வெளியிட்டது. உண்மையானுலும், அவருக்குமுன் இயற்கையில் அவை விளங்கவில்லை என்று கூற இயலாது. அவர் அதன் இருப்பினை முதலிற் கண்டு

விளக்கியதால், அவர் பெயரால் அந்நியதிகள் இன்று வழங்கு தலை இங்கே மனங்கொளல் தகும். **சுவாமி விவேகாநந்தர்** இத்தகைய விளக்கம் தந்துள்ளார். இதனுல், மொழிப் போராட்டமின்றி உண்மைகளை அனைவருக்கும் உரிமை யாக்கும் பரந்த மனப்பான்மை தெரிகின்றது.

'தமிழ்மாமுனி திக்கு சரணயம்' என்ற குறிப்பு, சூர்ணை 91ல் வருகின்றது. **வண்தமிழ் மாமுனி**[4] என்று அகத்தியரைக் குறிக்கின்ருர் **குலசேகர ஆழ்வார்**. அந்த முனிவர்க்கு இருப் பிடமாதலால், தென்திசை யாவர்க்கும் புகலிடமாயது என்பது கூறப்படுகின்றது. அத்தகைய சிறப்புக் கூறப்படு தற்குக் காரணம், அவர் தமிழ் மாமுனிவராய் இருப்பதுதான். தமிழ் நூல்களின் மரபே இங்கு விளக்கப்படுவது தெளிவு.

தமிழிலே அமைந்த ஆழ்வார் பாடல்களின் பெருமை பெரிதும் விரிவாக இந்நூலில் எடுத்துக் காட்டப்படுகின்றது. அவை **'திவ்வியப்பிரபந்தம்'** என்றும் (சூ. 44), **'அருளிச் செயல்'** என்றும் (சூ. 63) குறிக்கப்படுகின்றன. நம்மாழ் வாருடைய நூல்கள் நான்கும் நான்கு வேதங்கள் ஆகு மென்றும், திருமங்கையாழ்வருடைய நூல்கள் ஆறும் 'சிக்ஷை, வியாகரணம், நிருக்தம், சந்தம், கற்பம், சோதிடம் ஆகிய ஆறு அங்கமும் ஆகுமென்றும், மற்ற ஆழ்வார் எண்மரின் நூல்களும் எட்டு உபாங்கங்கள் ஆகுமென்றும் சொல்லப்படுகின்றன. மங்கை மன்னனுடைய நூல்களின் போக்கு, நம்மாழ்வாரின் நூல்களின் போக்கைப் பெரிதும் ஒத்திருப்பதால், அவற்றை **'அங்கங்கள்'** என்பர். மற்றவர் நூல்களும் அப்பொருள்களையே வெளிப்படுத்துபவையாய் அவற்றை விளக்கம்செய்வதற்கு உறுப்பாவதால், அவை **'உப அங்கங்கள்'**—துணை உறுப்புகள் எனப் படுகின்றன (சூ. 43). வேதம் தோன்றிய பின்னரே அங்கம் முதலியன தோன்றின என்ருலும், முதலும் விளக்கமும் ஒன்ருய் இயைந்து பொருள் விளக்கம் பெற்று உயிரோடு நிலவும் ஒருறுப்பாய் ஒளிர்வதனை உளத்தே கொண்டு இவ்வாறு விளக்குவது தவறன்று. நம்மாழ்வார் பாடல்களே முழு வடிவம் தர வருகின்றன.

அந்த உயிர்ப்பில் முன்னோர் விளக்கங்கள் என்றுமுள உண்மையின் விளக்கங்களாதலின், ஒன்றுய்த் திரண்டு திகழ்கின்றன. எனவே, வரலாற்றோடு முரணுமாறு இல்லை. மரக்கட்டை முன்னே அமைந்து கிடந்ததேனும் செம்மையாக்கப்பட்ட மரத்தாலான மேசை முதலியன முன்னதான மரத்தினும் சிறப்புப் பெறுதலை இங்கு நினைதல் தகும்.

## தமிழ் மறையின் ஏற்றம்

வேதங்களுக்கு உள்ள எல்லா இலக்கணங்களும் தகுதிகளும் ஆழ்வார் நூல்களுக்கும் உண்டு. சாத்திரம் என்ற சிறப்பு, இறைவனின் ஆணையாய் நிற்கும் தன்மை, குற்றமற்ற இயல்பு, செவி வழியாக வரும் தன்மை, உண்மைத் தன்மை, அநாதியாயும் அழிவில்லாததாயும் இருத்தல் ஆகிய இவ்வியல்புகள் யாவும் இரண்டுக்கும் ஒத்திருக்கின்றமை எடுத்துக்காட்டப்படுகின்றது. வேதங்களுக்கு, பிரமன் செய்வோன் (கருத்தா) ஆனது போல, தமிழ் மறையாய இதற்கும் ஆழ்வார் கருத்தா ஆவர்.

தன் தந்தையான எம்பெருமானிடத்தில் நான்முகன் வேதங்களை ஓதி உணர்ந்து, அவற்றைத் தன் மூத்த புதல்வனை **உத்திரன்** முதலியவர்க்கு ஓதுவித்தான். அதுபோன்றே தம் தந்தையான எம்பெருமானிடத்திலே ஆழ்வாரும் வேதங்களைக் கற்று அவற்றை **மதுர கவிகள்** போல்வார்க்குப் பயிற்றுவித்தார். வேதம் முதலில் ஓதுகின்றவர்களையிட்டுப் பெயர் கூறப்படும். அதனுல், ஆழ்வார் அருளிய வேதமும் **'சடகோபன் சொல்'**[5] என்னும் பெயர் பெற்றது.

திருவாய்மொழி இசையோடு கூடியது. எனவே அது இசைமிக்க சாம வேதத்தை ஒப்பது. இருக்கு வேதமே சாமமாய் விரிந்தது. அது போன்றே **திருவிருத்தம்** நூறுமே திருவாய்மொழி ஆயிரமாய் விரிந்தது. சாம வேதத்திலும் **சாந்தோக்கியம்** என்னும் பிரிவை ஒக்கும் திருவாய்மொழி (சூ. 52, 53). வேதத்திற்கு ஒப்பாதலே அன்றி வேதத்தை

விளக்கும் வேத உப பிரம்மணத்திற்கு ஒப்பான தன்மையும் திருவாய்மொழிக்கு உண்டு (சூ. 54).

வேதத்தில் இறைவனின் இயல்பு, பண்பு, விபூதி (இருப்பு), செயல் யாவும் சேர்த்துச் சொல்லப்பட்டிருக்கும். ஆனால், இயல்பையும் பண்பையும் முதன்மையாகவும் விரிவாகவும் விளக்குவது வைணவாகமங்களுள் ஒன்றான **பாஞ்சராத்திரம்;** விபூதியை முதன்மையாக விளக்கி உரைப்பது **புராணம்;** அவன் செயல்களை முதன்மையாக விளக்குவது **இதிகாசம்**. அதே போன்று இறைவனது திருவுருவ அழகினை விளக்குதலை முதன்மையாகக் கொண்டது **திருவாய்மொழி**. அவ்வகையில் பாஞ்சராத்திரம் முதலியன போன்று இதுவும் ஓர் உப பிரம்மணம் ஆகும். அந்த உப பிரம்மணங்கள் (விளக்க நூல்கள்) யாவற்றிலும் இதற்கு உள்ள ஏற்றம் அவை அவை தோன்றிய முறையை நோக்க விளங்கும்.

நெஞ்சில் தோன்றும் குணத்திற்குத் தக்கவாறெல்லாம் வருணிக்கும் இராசத தெய்வமான நான்முகனுடைய அருளால் அவதரித்தது வால்மீகியின் நூல். தாமச தெய்வமான **உருத்திரன்**, தான் திருமாலை வணங்கும் முறையைக் கூற, அதனைக்கேட்ட இருடிகளுள் ஒருவனான புலத்தியருடைய மிக்க அருள் அடியாகப் **பராசர பிரபந்தம்** எழுந்தது. மற்ற முனிவர்களின் நூல்களும் இவ்வாறே உண்டாயின. ஆனால், ஆழ்வார் திருவாக்கு, பரம சாத்வீக தெய்வமான **திருமால்** அருள் கொண்டு பாடப்பட்டது. அதனை ஆழ்வார் பாடல்களே காட்டுகின்றன. 'தன்னை வைகுந்தனாகத் தன்சொல்லால் தானே துதித்து'[6] (சூ. 57) என்கையால் இது மிகச் சிறப்பானது என்பதனை அறியலாம்.

இருடிகளிலும் ஆழ்வார்க்குள்ள சிறப்பினை விளக்குவன சூர்ணைகள் 58 முதல் 62 முடிய உள்ள ஐந்தும்.

நூலின் சிறப்பை நோக்கும்போதும் இத்திருவாய்மொழி அருளிச் செயலின் சாரமாய் விளங்குவதை அறியலாம். திருமால் பற்றிய செய்திகளன்றிப் புறச்செய்தியொன்றும்

கலவாத தூய்மையது இந்நூல். இருடிகளின் நூல்களில் குருவின் நூலுக்கும் சீடனின் நூலுக்கும் வேறுபாடுகள் காணப்படும். ஆனுல், ஆழ்வார்களின் பாடல்கள்யாவும் ஒரே கருத்துக் கொண்டவை: பேசிற்றே பேசும் ஏககண்டர் கள் இவர்கள். எனவே, வேதங்களிலும் உபபிரம்மணங்களிலும் ஐயத்திற்கிடமான பொருள்களே, இவர் தம் மொழியின் துணே கொண்டு ஐயம் திரிபின்றி உறுதி செய்தல்வேண்டும். இந்நூலுக்கு மாறுபட்டவை மனுவின் நூலுக்கு மாறு பட்டவை கழிக்கப்படுமாறுபோல ஒதுக்கப்படும்.

மூன்ருவதாக, வேதம் பரத்துவம் பற்றியும் பாஞ்சராத் திரம் (ஓதினுய் நீதி) வியூகம் பற்றியும் கேட்ட மனு எனப் பட்ட மனு முதலிய ஸ்மிருதிகள் அந்தர்யாமியாய் நின்ற பரவிய நிலே பற்றியும் படுகதை எனப்பெற்ற இதிகாசங்கள் அவதாரங்களேப்பற்றியும் பேச எழுந்ததுபோன்று, பண்ணிய தமிழில் ஆகமூர்த்தியான அர்ச்சாவதாரம் பேசப்பட்டது என்பது வேறும் ஒரு முறை. அதன்படி வேதமே திராவிட மாக்கப்பெற்றது நம்மாழ்வாரால் என்பது உணர்த்தப் பெற்றது. 'வேதம் வேறுநிலே பெற்றதால் கலங்கிப் பொருளே விளக்கும் தன்மை குன்றப்பெருதோ!' என்ற ஐயம் எழுதல் இயல்பு. சொல்வோன் சிறப்பால் அது கலக்க மடைவதற்கு மாருகத் தெளிவு பெற்றது என்றும், ஆழ் பொருளேயும் தெளிவுற விளக்கும் இயல்பினது ஆயிற் றென்றும் ஆற்றினே எடுத்துக் காட்டாகக் காட்டி விளக்கு கின்ருர் ஆசிரியர். மேலும், அதனுல் (1) எல்லோருக்கும் பயன்படுதல், (2) எவரும் எளிதில் பயன் கொள்ளுமாறு அமைதல் ஆகிய இரண்டு பெரும்பயன்களும் ஏற்பட்டன என்பது உதாரணங்களோடு விளக்கப்படுகின்றன (சூ. 72, 73, 74).

**மொழி வேற்றுமை பாராட்டலாகாது**

எம்மொழியில் ஒரு நூல் இருக்கின்றது என்று பார்ப்பது கூடாது. இறைவனேப்பற்றியது கொள்ளத்தக்கது என்றும் அல்லாதது தள்ளத்தக்கது என்றும் கருதல் வேண்டும். அவ்

வாறன்றி, மொழி அடிப்படையில் கொள்ளுதற்கும் தள்ளுதற்கும் உடன்பட்டுத் தமிழ் ஆகையாலே இந்நூல் கொள்ளத் தக்கதன்று என்பது சரியன்று. அந்த அடிப்படையை மேற்கொண்டால், புறமதத்தவர் செய்த நூல்களும் பொய்யை மெய்யாகக் காட்டும் நூல்களும் சம்ஸ்கிருதத்தில் உள்ளமையால், கொள்ளவேண்டும் என்பது ஆகும். அதனால் கேடே விளையும். 'வடமொழியில் அமைந்து கடவுளை உள்ளவாறு அறிந்தவர்களால் செய்யப்படுவதாக உள்ளனவும் நினைக்கவும் தகுதியற்றதான கீழ்மையான மானிடர்களைப்பற்றிய துதியாயின் அவை விடத்தக்கன; தெற்கில் உள்ளவர்களால் பேசப்படும் '**தென்னுரை**' எனப்படும் தமிழில் அமைந்தவற்றுள்ளும் இறைவன் புகழ் கூறுவன உயர்ந்தன. அவை கொள்ளத்தக்கன.'[7] என்று அறிபவர் அமரராவர்; அறியாதவர், வேதங்களும் அங்கங்களும் அமரக்கற்ற அறிஞராயினும் அந்தணராயினும் தகரவிழுவர் என்று ஆசிரியர் கூறும் பகுதி அந்நாள் நிலைமையை நமக்குத் தெளிவுறக் காட்டும். தமிழை மதியாதவர்—எதையும் தமிழில் படிக்க வேண்டுவதில்லை; வடமொழி வேதம் அறிதல் போதும் என்ற கொள்கையராய் ஒரு சாரார் இருந்தனர் என்பதும், அவர் தம் கருத்துப் பெரிதும் தவறுடையது என்று நம் ஆசிரியர் கண்டிக்கிறார் என்பதும் தெளிவு.

தமிழில் அமைந்த திருவாய்மொழியை அனைவரும் ஓதலும் உணர்தலும் வேண்டுமென்ற ஆர்வமே, இந்நூலாசிரியர் இந்நூல் எழுதுதற்கான காரணம். வேதங்களிலும் உபநிடதங்களிலும் புராண இதிகாசங்களிலும் காணும் அனைத்தும் ஆழ்வார் பாடல்களில் இருப்பதை இவர் விளக்கக் காண்கிறோம். இறைவனிடத்தும் அவன் அடியவரிடத்தும் அவர்களை அவன்பால் சேர்ப்பிக்கும் தமிழ்ப் பாடலிடத்தும் இவர் கொண்டிருந்த காதல் அளவிடற்கரியதென்பதும் விளங்குகின்றது.

**திருவாய்மொழியும்-கீதையும்: ஒற்றுமையும் வேற்றுமையும்**

**கீதை:** கண்ணபெருமானால் அருச்சுனனுக்கு உரைக்கப்பட்ட நூல்; 18 அத்தியாயங்களை உடையது; பலநெறிகளை

யும் அழகுற எடுத்து விளக்குவது; சுருங்கிய அளவினது; எல்லாச் செய்திகளையும் தன்னுட் கொண்டதாய் விளங்குவது. 'வேதத்தின் முடிவு-சாரம்' என்று போற்றிக் கொண்டாடப்படுவது.

**திருவாய்மொழி:** திருமால் தன்னைத் தானே கவிபாடிக் கொள்ளும் முறையில் இப்பாடல்கள் நம்மாழ்வார் வாயிலாக வந்தன். முன்னர் இருந்த கருத்துகளே இவர் மூலம் வெளிவந்தன என்பர். இதனையே வேதம் தமிழில் வந்தது என்றும் கூறுவர். ஆழ்வார் இறைவனைப் பாடவேண்டும் என்று எண்ணியும் தமிழில் இதனைத் தரவேண்டும் என்று திட்டமிட்டும் இந்நூல் இயற்றப்பட்டது அன்று. நீர் பாலாய், பால்நெய்யாய், நெய் அமுதமாய், அதனால் நிறைந்ததோர் ஏரி கரைபொருது நெளிந்து உடைபடும். அதுபோன்று ஆழ்வாருக்கு இறைவன் ஞானம் அருளினன். அது பரபக்தி வடிவு பெற்றது. அப்பரபக்தி, பரஞானமாயிற்று. பரஞானம், பரம ஞானமாய் மலர்ந்தது. அமுதக் கடலானது, தான் உள்ள இடத்தை அழித்து விடாமல் இருப்பதற்காக வெள்ளமெடுப்பது போன்று, ஆழ்வார் உள்ளம் வெடித்துவிடாமல் இருப்பதற்காக, அவர்தம் ஆர்வம் பாடல்கள் வடிவாய் வெள்ளமிட்டு **'அவாவில் அந்தாதி'**[3] என்று பக்தியின் வலிமையால் பிறந்த அந்தாதியான ஆயிரம் என்ற சிறப்புடைய நூலாயிற்று 'உணர்ச்சியில் பிறப்பது கவிதை' என்ற இலக்கணப்படி எழுந்தன இக்கவிதைகள் என்பதே இதன் பொருள்.

தோற்றமும் அவற்றின் பொது இயல்புகளும் இவ்வாறு இருக்க, உள்ளமைந்த பொருளால் இவ்விரு நூல்களும் ஒத்தனவாய் அமைதலை நாம் காண்கின்றோம். முன்னது தத்துவ ஞானத்தை அறிவுறுத்தும் நூல்; பின்னது பக்தியை வெளியிடும் நூல் என்று பொதுவாக எண்ணத் தோன்றும். திருவாய்மொழி பத்திநூல் மட்டுமன்று; தத்துவ ஞானமும் கூறுகின்றது என்பதனை ஒப்புமை கூறத் தொடங்கும் சூர்ணையின் தொடக்கத்திலேயே ஆசிரியர் உணர்த்துகின்றார்.

திருவாய்மொழியின் முதல் நடு இறுதி மூன்று இடங்களி லிருந்து மூன்று பாடலை எடுத்துக்காட்டி ஆழ்வார் இறைவ னின் இயல்பை நன்கு அறிந்தவர் என்பது உணர்த்தப் பட்டுள்ளது. மேலும், ஆழ்வார் ஒரு ஞானியார். அவர் சிந்தை செய்தது நிறைந்த ஞானமூர்த்தியை; அவர் கண்டு கொண்டது ஞானப்பிரானை; உபதேசம் செய்தது 'ஞானப் பிரானை ஞானத்து வைம்மின்' என்பது. எனவே, திருவாய் மொழி ஒரு ஞானநூலும் ஆகும் என்பது காட்டப்படுகின்றது.

பின்னர்க் கீழ்க்காணும் 18 பொருள்களையும் சொல்லு தலில் இரண்டிற்கும் ஒற்றுமை உள்ளமையை உணர்த்து கின்றார். அவையாவன:

1-2-3. உண்மைப் பொருளினைப் பகுத்தறியும் ஆராய்ச்சி, இறைவன் உயிர் இவற்றிடையே உள்ள வேறுபாடு, உயிர் களுக்குள் உள்ள வேறுபாடு, அறிவுள்ளவை அறிவற்றவை இவற்றிடை உள்ள வேறுபாடு.

4. உயிரின் நிலைத்த இயல்பும் உடலின் அழியும் தன்மையும்.

5. எல்லாவற்றையும் நடத்துகின்ற இறைவனின் தலைமைத் தன்மை-நியாய மகத்துவம்.

6. அதே சமயத்தில் அடியவர் உள்ளத்தே உறைதலும் அவதாரம் எடுத்தலும் ஆகிய அவனது எளிமைத்தன்மை.

7. ஏற்றுக்கொள்ளும் போது யாவரையும் ஒரே தன்மை யாகக் கொள்ளும் சமத்துவத் தன்மை

8. ஆணவமாகிய குற்றம்

9. பொறிகளின் வலிமை

10. பொறிகளினும் மனத்திற்குள்ள முதன்மை

11. புலனடக்கும் முறை

12. வழிபடுவோரின் வகை

13. அசுரர் அமரர் என்னும் வேறுபாடு
14. இறைவன் உலகு பல உடையனுதல்
15. இறைவனுடைய விசுவரூபக் காட்சி
16. அங்கங்களோடு கூடிய பத்தி
17-18. இருவகையான பிரபத்தி

இப்பதினெட்டுப் பொருள் பற்றியும் கீதையும் பேசுகின்றது; திருவாய்மொழியும் செப்புகின்றது. ஒரே பொருளை ஒரே தன்மையாக விளக்கும் இவ்விரு நூல்களும் ஒத்தன என்பதற்குத் தடை யாது இருக்க இயலும்?

## திருவாய்மொழியின் ஏற்றம்

### 1. ஆக்கியோன்

'தத்துவம்' என்று இறைவன் குறிக்கப்படுவான். அவனுல் உபதேசம் செய்யப்பட்டது கீதை. 'தத்துவத்தைக் கண்டவர்களான — அறிந்தவர்களான — ஞானியர் உனக்கு உபதேசம் செய்வார்கள்' (கீதை 4-34) என்று கீதையில் கொண்டாடப்படும் தத்துவத்தை உணர்ந்தவர்களில் தலைவரான ஆழ்வார் அருளியது திருவாய்மொழி. தன் பெருமையை இறைவன் தானே சொல்லுதலினும் பிறர் சொல்லுவதன்றோ ஏற்றம்! அதுவே எல்லோருக்கும் நம்பிக்கையை ஊட்டும். அந்த வகையில் நோக்குகையில் திருவாய்மொழியின் ஏற்றம் புலப்படும்.

### 2. தோன்றிய நோக்கம்

கீதை, 'ஐவரான பாண்டவர் வெற்றிபெற வேண்டும்; நூற்றுவர் மடியவேண்டும்', என்ற நோக்கத்தோடு எழுந்தது. திருவாய்மொழி, 'ஊரும் நாடும் எல்லாம் எம்பெருமான் பக்கல் நெஞ்சு தோற்கும்படியாகவும், 24 தத்துவங்

களான அசத்திலும் 25 ஆம் தத்துவமான ஆன்மாவின் அனுபவத்திலும் பற்று முடியும்படியாக அருளிச் செய்யப் பட்டது. இரண்டும் வீடு பேறளிக்குமாயினும், வீடு பேறளிக் கும் பொருட்டாகவன்றி வேறு ஒன்றின் பொருட்டாகத் தோன்றிய கீதையினும் திருவாய்மொழி ஏற்றமுடைமை தெளிவு.

### 3. தொடக்கநிலை, முடிவுநிலை இவற்றால் மாறுபட்டுள்ள சிறப்பு

கீதையில் உபதேசம் தொடங்கும்போது, 'நான் உன்னு டைய சீடன்: உன்னைச் சரணடைந்த என்னை ஏவுக!' என்று **அருச்சுனன்** பணிய, அதனால் உபதேசிப்பவனின் விருப் போடு—உகப்போடு—கீதை தோன்றியது. முடிவில் அருச் சுனன்பால் மன ஒருமைப்பாடு காணாமையால், விருப்பக் குறை ஏற்பட்டது. இதை **அநு கீதை**யில் காணலாம். திருவாய்மொழியிலோ என்னில், பராமுகமா-கவிருப்பமற்றவ ராக—இருப்பாரை நோக்கி ஆழ்வாரின் உபதேசம் தொடங்கு கின்றது. அருள் உள்ளம் மிக்க அவர், 'ஏ பாவம் பரமே!'[9] (என்ன அருமைப்பாடு! இவர்கட்கு உபதேசம் செய்ய நேர்ந்ததே!) என்று வெறுப்போடு தொடங்குதலினால், உபதேசம் உகப்பின்றித் தொடக்கம் ஆயிற்று. அறிவுரை கேட்டு உலகம் முழுவதும் திருந்திவிட்டபடியால், யாவரை யும் கண்டு மகிழ்ந்து, 'பொலிக! பொலிக! பொலிக!'[10] என்று வாழ்த்துக் கூறுகின்றார். 'உற்றேன் உகந்து'[11] என்று உகப் போடு முடிக்கின்றார். சித்த தர்மத்தின் அளவும் உபதேசம் பலன் அளிக்கவில்லை கீதையில்; அருச்சுனன் போர் செய்யும் நிலைமையே ஏற்பட்டது. திருவாய்மொழியில், பலன் முழுவதும் கைகூடிய உகப்புஉளது. எனவே, இதுவும் திருவாய்மொழியின் ஏற்றத்துக்குரிய காரணங்களுள் ஒன்று தலில் தடையில்லை.

### 4. கூறப்படும் பொருளில் மேன்மை

கீதையில், 'என்னையே சரணமாக அடைவாய்'[12] என்று சித்த தர்மத்தைப் பற்றும்படி விதித்தலே உள்ளது. திருவாய்

மொழியில் 'திருநாரணன்தாள் காலம்பெறச் சிந்தித்து உய்மினோ!'[14] என்று விதியும், 'அடியேன் உன் அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே!'[11] என்று தன் நடைமுறையும் ஆகிய இரண்டும் கூறப்பட்டுள்ளன. எது சிறப்புடையது என்பதை எடுத்து ஆராயவும் வேண்டுமோ?

## 5. பிரமாணமாக ஏற்றுக்கொள்ளப்படும் பெருமை

'ஆதியம் பகவன் வணக்குடைத் தவநெறி'[15] என்றும், 'ஞானவிதி'[16] என்றும், 'பண்டே பரமன் பணித்த பணி வகை'[17] என்றும் வரும் பாசுரப் பகுதிகளில் ஆழ்வார் கீதையைப் பிரமாணமாகக் கொள்ளுகின்றார். அதனால், கீதைக்கு உயர்வு வருகின்றது. **புத்த முனியாயும் கபிலமுனியாயும்** நின்று இறைவன் அருளிய நூல்களும் வைதிகரால் ஏற்றுக் கொள்ளப்படாமையால், அவை பிரமாணமல்லவாயின. அவை போற்றப்படுதல் இல்லை. 'கீதைக்குப் பெருமை ஆழ்வார் அதனை ஏற்றுக்கொண்டமையாலே', என வேண்டும். ஆழ்வார் செயலுக்கு வேறு பிறர் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற நியதி இல்லை. எனவே, இந்த வகையில் நோக்கும் போதும் திருவாய்மொழியின் ஏற்றம் விளங்கும்.

இவ்வாறு தமிழில் அமைந்த திருவாய்மொழியின் ஏற்றத்தை ஐந்து வகை **ஏதுகளைக்** காட்டி நிறுவுகின்றார் ஆசிரியர்.

# சாதி முதலியன பற்றிய விளக்கம்

'சாதி ஆச்சிரம தீக்ஷைகளில் பேதிக்கும் தருமங்கள் போலே' என்பது 31ஆம் சூர்ணையில் வரும் ஓர் உவமை. இதனுல் பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் என்னும் நான்கு சாதி வேறுபாட்டையும், பிரமசரியம் இல்லறம் வானப்பிரத்தம் துறவறம் என்னும் நான்கு ஆச்சிரமங்களையும், **சோதிஷ்டோமம்** முதலிய தீக்ஷைகளையும் இந்நூலாசிரியர் உடன்படுகின்றுர்: அந்த அந்தச் சாதி ஆச்சிரமங்கட்குக் கூறப்படும் தருமங்கள் அவரவர்களாலே செய்ய வேண்டுபவை என்ற வேதக் கருத்தினை இவர் ஏற்றுக்கொள்ளுகின்றுர் என்பது தெளியலாம்.

பிராமணியம் என்றும் வைணவத்துவம் என்றும் இரு நிலைகளை (சூ. 37) இவர் குறிப்பிடுகின்றுர். இவ்விரண்டிலும் வைணவத்துவமே முக்கியமானது என்றும், வைணவத்துவம் பெருதபோது பிராமணியம் ஐயப்படும் தன்மையதாய்விடும் என்றும் கூறுகின்றுர் (சூ. 38). இதனுல், திருமால் வழிபாட்டிற்கு முதன்மை வழங்குவது தெரியவரும். 'பிறப்பால் வந்த சாதியால் உயர்வு தாழ்வு இல்லை; திருமால் அடியவர், அடியார் அல்லாதவர் என்பதாலேயே உயர்வு தாழ்வு அமைகின்றன' என்று ஆழ்வார்கள் கூறுவதையே இவ்வாசிரியர் தம் கொள்கையாக வற்புறுத்தி உரைக்கின்றுர். வைணவத்துவம் கைகூடுவது 'சந்தங்களாயிரமும் அறியக் கற்று வல்லாராணுல்' (சூ. 37), என்பதால் தமிழில் அமைந்த **திருவாய்மொழி**யான சந்தங்களாயிரத்திற்கும் இவர் தரும்

ஏற்றம் விளங்கும். இஃதுணராதாரை 'அயற்சதுப்பேதிமார்' என்கின்றார் ஆசிரியர். **'சதுர்வேதி'** என்பது நால் வேதம் உணர்ந்தாரைக் குறிக்கும் சொல்; **'சதுப்பேதி'** என்பது, அதன் திரிபே; தமிழ் நால் வேதம் அறியாதவர் 'அயல் சதுப் பேதிமார்' எனப்பட்டனர். இத்தொடர் ஓரளவு இகழ்ச்சிப் பொருளில் வழங்கப்பட்டிருத்தலும் கூடும்.

ஆழ்வார் பன்னிருவருள் பல சாதியினரும் உளர். அவர் களில் தலைவராம் **நம்மாழ்வார்** நாலாம் வருணத்திற் பிறந் தவர்; அவர் தம் பிறவியை ஆராயலாகாது என்பதை இவ் வாசிரியர் வற்புறுத்துகின்றார். இன்பமாரியான ஆழ்வார் தம் பிறவியை ஆராய்வது இல்லங்களில் வைத்து வணங்கும் இன்பப் பொருளான இறைவன் உரு 'எந்த உலோகத்தால் ஆனது?' என்று ஆராய்வதை ஒக்கும். மற்றும் இறைவன் மொழி என்று சொல்லும்படி இருக்கின்ற இன்ப வாழ்வான திருவாய் மொழி எந்த மொழியில் அமைந்தது என்று ஆராய் வதையும் அது ஒக்கும். இம் மூன்று செயல்களும் மிகப் பாவ மானவை என்பதும் செய்யத்தகாதன என்பதும் அவர் அறுதி யிட்டு உரைக்கும் கருத்தாம். இச்செயல், ஒருவன் தன்னைப் பெற்ற தாயின் பிறப்பு உறுப்பினை ஆராய்வதனை ஒத்ததாகும் என்று வரும் வட மொழிச் சுலோகம் ஒன்று இங்கு எடுத்துக் காட்டப்படுகின்றது.

நாலாம் வருணத்தவரான ஆழ்வாரல் செய்யப் பட்டது என்ற காரணத்தால் அவர் தம் பாடல் ஏற்றுக் கொள்ளப்படவில்லையானால், மீனவர் குலத்துதித்த **மச்சகந்தி** யின் மைந்தரான **வியாசர்** கூறிய ஐந்தாம் வேதமான **பாரதம்** தள்ளத்தக்கது ஆதல் வேண்டும். அவ்வாறே இடைக்குலத்துதித்த **கண்ணன்** கூறிய கீதை என்ற அறு மூன்று அத்தியாயங்களைக் கொண்ட உபநிஷத் நூலும் தள்ளத் தக்கதாதல் வேண்டும் (சூ. 76). இவை ஒருவருக்கும் உடன்பாடல்ல. இருநூல்களும் யாவராலும் ஏற்றுக் கொள்ளப் பட்டவையே. எனவே, ஆழ்வார் பாடல்களை மட்டும் ஏற்றுக் கொள்ளாமை, ஒவ்வாத செயலாம். நூல் செய்த ஆசிரி

யனது பிறவி அடிப்படையில் அதை ஏற்றுக் கொள்ளுதலும் தள்ளுதலும் செய்யத்தகாதன என்பது போதரும்.

வியாசர், கண்ணன் ஆகிய இவர் தம் பிறப்பிலும் ஆழ்வார் தம் பிறப்பு சிறந்ததாதலை அவர்களைப் பெற்ற தாய்மார், அவர் பிறப்பிடம், அவர்க்குரிய ஆறு, துறை, ஊர் இவை முதலியவற்றின் வேறுபாடுகளை எடுத்துக்காட்டி அழகுற விளக்குகின்றார் ஆசிரியர் (நூற்பா 77, 78, 79, 80).

தேவர்க்கும் தேவனான இறைவன், உலகினைக் காத்தற் பொருட்டு மானிடனாய் அவதரித்தான். அவன் இராமாவதாரத்தில் இராவணனைக் கொன்றான். அப்போது பிரமன் முதலான தேவர்கள் அவனைப் பார்த்து, 'நீவிர் நாராயணராகிய தேவர்'[2] என்று புகழ்ந்தார்கள். அதற்கு அவன், 'நான் என்னை மனிதனெனவே நினைக்கின்றேன்; தயரதன் பிள்ளையாகிய இராமன் நான்'[3] என்று விளக்கினான். கோவர்த்தன மலையைத் தூக்கித் தங்களைக் காத்த வியக்கத்தக்க செயலைக் கண்ட ஆயர்கள் பலவாறு அவனைப் புகழ, அதைப் பொறாமல், யான் தேவனும், கந்தருவனும், இயக்கனும், அசுரனும் அல்லேன்; இடையர்களுக்கு உறவினனாய்ப் பிறந்த என்னை வேறாக நினைக்கவும் கூடாது' என்று அறிவுறுத்தினான் தேவனான அவன், உலகில் பிறந்ததனாலேயே உயர்ந்தவனாகின்றான்; பிறவிகளினாலேயே அவன் குணங்கள் ஒளி பெறுகின்றன. ஆகையால் பிராமணத் தன்மைக்கு எல்லை நிலமான பிரமனாய்ப் பிறத்தலும் அடிமைத் தன்மைக்குப் பகையான ஆணவத்திற்கு ஏதுவாகையாலே அஃது ஆன்மாவுக்கு இழிவைச் செய்வது என்று இகழத்தக்கதாகும். இறைவனுக்குச் செய்யும் தொண்டின் சுவை அறிந்தவர்க்குப் '**பண்டை நாளாலே**' (9-2-1) என்னும் திருவாய்மொழியில் கூறப்படும் செருக்கற்றதும் இறைவனது கைங்கரியத்திற்கு ஏற்றதுமான குடிப்பிறவியே ஆன்மாவிற்கு ஒளியைச் செய்வது. அதுவே பரமபதத்தில் மேற்கொள்ளும் உடல் போன்றதுமாகும்.

ஆழ்வாரது பிறவியால் உலகிற்கு ஏற்பட்ட நன்மைகள் மிகப்பலவாம் (நூ. 82, 83). இறைவன், சாபத்தால் இழி

வடைந்த யதுகுலத்தை உயர்த்த ஆயர்குலத்தில் கோபாலனுய்ப் பிறந்தான். பிரளய வெள்ளத்தில் மூழ்கிய பூமியை மேலே கொணரக் கேழல் ஆனுன். அவ்வாறே, 'நாங்கள் உயர்குலத்தவர்கள்' என்ற பற்றுதலாலே கீழ்மை யடைந்தவர்களை அந்நிலையிலிருந்து மாற்றி உயர்வடையச் செய்வதற்காகவே அகங்காரத்திற்குக் காரணமல்லாததான நாலாவது வருணத்தில் ஆழ்வார் பிறந்தார். 'பிறவியால் வரும் அகங்காரம் கூடாது' என்பதை இது தெளிவுற உணர்த்தும்.

'பிறப்பில் உயர்வு தாழ்வு இல்லை; அவ்வாறு கொள்ள லாகாது' என்பதைப் பல எடுத்துக் காட்டுகள் மூலம் ஆசிரியர் விளக்குகின்முர் (நூ. 85). அவற்றை முறையே காண்போம்:

(1) "என் அடியவர்பால் அன்பும், என் வழிபாட்டில் உகப்பும், தானே என்னை வழிபடுதலும், என்பக்கல் ஆரவார மற்றிருக்கையும், என் கதையைக் கேட்பதில் ஈடுபாடும், பத்தியின் காரியமான குரல் தழுதழுத்தலும், கண்ணீர் பெருக்குதலும், மயிர்க்குச்செறிவதும், இடையருது என்னை நினைப்பதும், என்னிடமிருந்து வேறு பயன்களைக் கொள்ளா மையும் ஆகிய இவ்வெட்டுவகைப் பத்திகள் எந்த மிலேச் சனிடமிருக்கிறதோ"* என்கிறபடி இழிகுலத்தவனுனுலும் இந்த எட்டுவிதப் பத்தியை உடையனுனல் அவன் உத்தமப் பிராமணன்; முனிவன்; செல்வம் மிக்கவன். அவனே துறவி; அவனே பண்டிதன்; அவனுக்கு ஞானம் அளிக்கத்தக்கது, அவனிடமிருந்து ஞானம் கொள்ளத் தக்கது, அவனும் என்னைப் போற்றுவது போன்றே போற்றத் தக்கவன்," என்று கூறியவாறு அவன் வழிபடப்பெறுவான். 'அவனுடைய திருவடிகளைக் கழுவிய நீரானது ஒப்பற்ற தீர்த்தம்; அவன் அமுது செய்த மிச்சில் மிகத் தூயது" என்று கொள்ளப்படும். இது இறைவன் அருளிய திருமுகப்பாசுரம். இக்கருத்தே பொருந்த ஆழ்வார்கள் அருளிய பாசுரங்களும் இங்கு நினைவு கொள்ளத்தக்கன:

''பழுதிலா ஒழுக லாற்றுப் பலசதுப் பேதி மார்கள்
இழிகுலத் தவர்க ளேனும், எம்அடி யார்க ளாகில்,
தொழுமினீர் கொடுமின் கொண்மின்!''[5] (திருமாலை, 42)

''போனகம் செய்த சேடம் தருவரேல் புனிதமன்றே''[6]
(திருமாலை, 41)

''கடல் மல்லைத் தலசயனத் துறைவாரைக்
கொண்டாடும் நெஞ்சுடையார் அவரெங்கள்
குலதெய்வமே''[7] (பெ. தி 2-6-4)

(2) விசுவாமித்திரர் இராமபிரானைத் துயில் எழுப்பினார்; பெரியாழ்வார் ஆயரேற்றை அம்மம் (முலை) உண்ணத் துயில் எழுப்பினார்; தொண்டரடிப் பொடியாழ்வார் அரங்கத் தம்மானைத் துயில் உணர்த்தினார். இவர்களோடு நிலைக்கச் சொல்லும் தன்மையரான நான்கு சாதியிலும் இழிந்த **நலமொன்றுமில்லாத சண்டாளராய்ப்** பிறந்து,திருங்குறுங்குடி நம்பியைத் திருப்பள்ளி உணர்த்தியும், 'சக்கரத் தண்ணல் மணிவண்ணற்கு ஆள்' என்று பயன் கருதாது பாடுதல் தொழிலில் சேர்ந்தும், 'எம் தொழுகுலம் தாங்களே' (3-7-8) என்று நம்மாழ்வார் போன்றவர்களாலே ஆதரிக்கும் ஏற்றத் தைப் பெற்றும் வாழ்ந்த அடியவர் **நம்பாடுவான்** என்பவர்.

சரவகுலத்திற் பிறந்தவன் 'வேடன்' **சோம சர்மா** என்ற பிராமணன், அவன் தான் தொடங்கிய வேள்வியை முறை யாக நடத்தி முடிப்பதற்குமுன் இறந்து போயினன். அதனால் பிரமராட்சதனாய்ப் பிறந்து அலைந்து திரிந்தான். அவன் சண்டாளனான நம்பாடுவானைப் பார்த்து, 'நீ உன் பாட்டின் பெருமையால் இப்பாவத்திலிருந்து என்னை மீட்கும் தகுதி யுடையவன்,' என்று சொல்லிச் சரணடைந்தான். '**கைசிகம்** என்னும் பண்ணின் பலத்தால் இந்தப் பாவத்திலிருந்தும் விடுவிக்கின்றேன்' என்று பாடி, பிராமணனுடைய வேள்விக் குறையால் வந்த இராட்சதத் தன்மையைப் போக்கி

யாகத்தை முடித்தார் 'நம்பாடுவான்' என்னும் இழிகுலப் பிறப்புடைய பக்தர். இது **கைசிக புராணத்**தால்[8] அறிவது.

(3) வேடர் குலத்தில் பிறந்தவராகையாலே 'ஏழை ஏதவன் கீழ் மகன்'[9] என்னும்படி பிறவி, தொழில், அறிவு இவற்றுல் இழிந்தவரான **குகப்பெருமாள்,** அயோத்தியர் கோமானுகையால் இவை எல்லாவற்றுலும் உயர்ந்தவராயிருக்கின்ற அளவுமன்றிக்கே தருமத்தோடு ஒன்றின தன்மையாலே 'வானோர் தலைமகனு'யிருக்கின்ற இராம பிரானுக்கு 'உகந்த தோழன் நீ' என்று சொல்லும்படி ஒத்த தோழனுனுன். இராம பிரானே அவனைப் பார்த்து 'உம்பி எம்பி,' என்கையாலே இவர் தம்பியான **இலக்குவனு**க்கு முன் பிறந்தவரானுர். இவ்வாறு தம்மை ஏற்றுக்கொண்ட அன்று இரவே, பெருமாள் பள்ளிகொண்டிருந்தகாலை அவர் அழகில் ஈடுபட்டுக் கண்ணுறக்க மற்றுக் கையும் வில்லுமாய்க் காத்து நின்ருர் இளையபெருமாள். பின்னர்ப் **பரதன்** பிரிவுத்துன்பத்துடன் சித்திரகூடத்திற்கு வந்தபோது தம்பியான இளைய பெருமாளுடைய அடிமைத் தன்மையின் சிறப்பியல்பை அவனுக்கு எடுத்துரைத்தார் குகப்பெருமாள். இப்படித் தாழ்குலத்திலே பிறந்தும், தன் பத்தியின் ஈடுபாட்டின் சிறப்பாலே இராமபிரானுடைய இக்குவாகு வமிசத்திலே ஒருவர் ஆனுர் குகப்பெருமான். இது திருமங்கை மன்னர் பாடலிற் கண்டதாகும். கவிச்சக்கரவர்த்தியாரான கம்பரும் இவ்வாறே கூறுவர்.

(4) 'தூது வானரத்தின் வாயில் **மொழிந்து**'[10] என்கிற படி பிராட்டிக்குத் தூது மொழியை அனுமானிடம் சொல்லி யனுப்பிய இராமபிரான், தசரதன் பிள்ளையான இராமபிரான் **சபரி**யினுல் வழிபடப்பட்டான்.'[11] வான்மீகம் கூறுகிறபடி சபரி கையில் நல்ல விருந்துண்டான்.

பாண்டவருக்குத் தூது சென்ற கண்ணன், வீடுமர் துரோணர் முதல்யவர் மாளிகைகளை விட்டு, 'பயனை எதிர் பாராததால் தூய்மையுடையதும் குணமுடையதுமான விதுர

னுடைய அன்னத்தை உண்டான்;'[12] என்று பாரதம் கூறுகிற படி பிறவியில் பெருமையில்லாத விதுரர் திருமாளிகையில் குணத்தோடு கூடிய விருந்துண்டான். தூது **வந்த** குரங்கான திருவடி, 'சீதாதேவியார் பார்க்கப்பட்டாள்[13] என்ற பிரியத் தாலே 'உதவி விரும்பிச் சுக்ரீவனும் அரசை வீடணனும் ஒரு பயனும் கருதாது அனுமானும் கைங்கரியம் செய்தனர்; ஆதலால், அனுமானுடன் உண்பது தக்கது'[14] என்று எண்ணி' 'கோதில் வாய்மையிேைனாடும் உடனே உண்பன் நான்'[15] என்றபடி பெருமாள் அனுமானுடன் உணவுண்டார். கீழ்க்குலம், குரங்கு, காற்றின் மகன் என்று அவன் விலக்கப் படவில்லே. இவ்வெடுத்துக் காட்டுகள் பலகாலம் பலராலும் எடுத்து ஆளப்படுவதுண்டு. அவர்கள் கண்ணன் இராமன் முதலானோர் பெருமையையும் எளிமையையும் உணர்த்த எடுத்தாள்வர். இவ்வாசிரியர் குகன், சபரி, விதுரன், அனுமன் என்னும் இவர் தம் குலம் இகழப்படாது, இவர் தம் பத்தியால் இவர்கள் மற்றவர்களினும் உயர்வாக மதிக்கப் பட்டமையை விளக்க இவற்றை எடுத்துக் காட்டுவது அறிதற்பாலது.

(5) ஒரு பிறவியில் இரு பிறவி ஆனோர் இருவர்; கண்ண பிரானும் திருமழிசைப்பிரானும். அவர்தம் செய்தி சொல்லப் படுகின்றது இங்கு. யதுகுலத்தில் பிறந்து ஆயர் குலத்தில் அக்குலத்தவனைப்போல வளர்ந்த கண்ணனுக்குத் தருமர் தாம் செய்த இராசசூய யாகத்தில் முதல் தாம்பூலம் வழங்கி மரியாதை செய்தார். ருஷியின் மகனாய்ப் பிறந்து மற்றோ ரிடத்திலே பொருந்தாதாரிடத்திலே பிரம்பன் குடியிலே அந்த இனத்தராய் வளர்ந்த திருமழிசைப்பிரானுக்குப் பெரும்புலி யூரில் உள்ள பிராமண உத்தமர்கள், தாங்கள் செய்த யாகத்தில் முதல் மரியாதை கொடுத்தார்கள்.

(6) பாண்டவர் ஐவரில் முதல்வரான தருமபுத்திரர், விதுரர்க்கு அவர் தம் ஞானமிகுதியைக் கண்டும் அசரீரி மொழி நினைத்தும் ஐயப்படாமல் இறுதிக்கடன் செய்தார். தசரதர் மக்கள் நால்வரில் முதல்வரான பெருமாள் உடன்

பிறந்த இளையபெருமாள் உடன் இருக்கச் செய்தேயும் அவரை செய்யச் சொல்லாது தானே தம்பொருட்டு உயிர்விட்ட கழுகரசனை சடாயுவுக்கு இறுதிக்கடன் செய்தார். பெரிய நம்பி, திருக்கோட்டியூர் நம்பி, பெரியதிருமலை நம்பி என்னும் மூவர் ஆளவந்தாருக்குச் சீடர். இம்மூவரும் உடையவர்க்கு ஆசாரியராகும் பேறுபெற்றவர். இம்மூவரில் முதல்வரான பெரியநம்பி, கீழ்க்குலத்திற் பிறந்தவரான மாறனேரிநம்பிக்கு ஆளவந்தார் கட்டளையின்படியே இறுதிக்கடன் செய்தார். இவை பிறவி காரணமாக நல்லோர் விடப்படாமல் பெருமை செய்யப்படுவர் என்பதை வலியுறுத்தும்.

(7) புஷ்ய மண்டபம் என்னும் 'சிந்துபூ மகிழும்,' (23—3) திருவேங்கடமலையில் குயவனுய்ப் பிறந்து பானைகள் செய்யும் போது மிகுந்ததாகிய மண்ணைப் பூவாகத் திருத்திப் பணிப் பூவும் கையுமாகத் திருவேங்கடநாதனை வழிபட்ட **குறும்பறுத்த நம்பியை** அந்நாட்டின் அரசனை தொண்டைமான் சக்ரவர்த்தியார் பின்பற்றினர். **தியாகமண்டபம்** என்னும் கச்சிப்பதியில் திருவாலவட்டமும் கையுமாய்ப் பேரருளாளனுக்கு அந்தரங்கராய் நின்ற **திருக்கச்சி நம்பிகளாகிய** குலச்சிறப்பில்லாதாரை வைதிக உத்தமரான **உடையவர்** பின்பற்றினர். **போக மண்டபமான** திருவரங்கம் பெரிய கோவிலில் வீணையும் கையுமாய்ப் பெரிய பெருமாளுக்கு அந்தரங்கராய் வாழ்ந்த **திருப்பாணழ்வாரை** உலோக சாரங்க மாமுனிவர் என்னும் அந்தணர் சார்ந்து ஒழுகினர். இம்முறைகளை அறிபவர் எது உயர்பிறவி எது தாழ் பிறவி என்பதை நன்கு அறிவர்.

(8) யாகம் எனப்படும் திருவாராதனத்தில் **பிள்ளை உறங்கா வில்லிதாசர்** என்பவரைத் தொடுதலால் தமக்கு உடல் தூய்மை அமையுமென்று கொண்டார்; **'அநுயாகம்'** எனப்படும் பிரசாதம் கொள்ளுதலில் **பிள்ளையேறு திருவுடை தாசர்** கரம்படுதலால், அன்னம் தூய்மை பெறுகின்றதென்று கொண்டார் **நம்பிள்ளை. வடக்குத் திருவீதியில்** புதிதாகக் கட்டிய நம் வீட்டில் குடிபுகும்போது **பிள்ளை வானமாமலைத் தாசர்** நடத்தலாலே தம் புது வீட்டைத் தூய்மையுடைய

தாக்கிக்கொண்டார் **நடுவில் திருவீதிப் பிள்ளைபட்டர்**. இந்த ஞானம் மிக்க பெரியோர்களின் ஒழுக்க முறையை அறிந்தவர்களுக்கே உலகில் எந்தப் பிறவி உயர்ந்தது, எப் பிறவி தாழ்ந்தது என்பது விளங்கும். மற்றவர் உயர்வு தாழ்வு என்று கொள்வன தவறுடையன என்பது இதனால் விளங்கும்.

## வருணம், ஆச்சிரமம், ஞானம், அநுட்டானம் இவற்றின் உயர்வும் தாழ்வும்

இறைவனுக்கு அடிமைத் தொழில் செய்வதே ஆன்மாவிற்குரிய சிறப்பியல்—இலக்கணம் என்பதை அறிந்து, அதற்கு ஏற்பக் கொள்ளத் தக்கனவும் தள்ளத் தக்கனவும் பகுத்தறிகின்ற அறிவினைப் பெறாதவர், உயர் பிறவி எது? தாழ் பிறவி எது? என்பதை அறியார். இறைவனோடு தொடர்பற்றது எதுவாயினும், அது இழிவானது. ‘எந்த மறையவன் நான்கு வேதங்கள் அறிந்தவனாயினும், வாசுதேவனை இறைவனை அறியாமலிருக்கின்றானோ, அவனே வேதங்களாகிற சுமையால் அழுந்துகின்ற பிராமணக் கழுதை’[61] என்றபடி வேதத்தின் உட்பொருளான இறைவனை அறியாதவன், வேதம் அறிந்திருப்பினும், குங்குமத்தின் மணம் அறியாத குங்குமம் சுமந்த கழுதைக்கு ஒப்பாவன்; அவன் வருணம் உயர்ந்தது அன்று.

‘மன்னரே! நாய் தின்னும் புலையனும், திருமால் பத்தனானால், பிராமணனிலும் மேலானவன்; துறவியேயாயினும் திருமால் பத்தியில்லாவிடில் நாய் தின்னும் புலையனினும் கீழானவன்,’[17] என்றபடி, இறுதி ஆச்சிரமத்தைச் சேர்ந்தவனானாலும் இறைபத்தி இல்லாதவன் புலையனினும் கீழ்மையன் என்பதை ஆச்சிரமம் தன்னளவில் உயர்ந்ததன்று என்பது விளக்கப்படுகின்றது.

எக்கருமம் உலக பந்தத்தின் பொருட்டு இல்லையோ அதுவே நற்கருமம்; எந்த வித்தை மோட்சத்தின்பொருட்டு ஆகின்றதோ, அதுதான் வித்தை; பொருள் இன்பங்களின் பொருட்டுச் செய்கிற வியாபாரமானது, உடலுழைப்பே

ஆகின்றது. வேறு வித்தையானது திறமான இந்திர ஜால வித்தைபோலப் பயனற்றது'[18] என்பதனுல், 'இறைவனைப் பொருளாக உடைமையால் மோட்சத்தை வேண்டுவதே வித்தை; அல்லாதது செருப்புத் தைக்கக் கற்றதைப் போன்றது,' என்று வித்தையின் தன்மை விளக்கப்படுகின்றது.

'எந்த நாராயணனுடைய திருவடித்தாமரையிணைகளின் நினைவில்லாமல் செய்யும் வேதப் பயிற்சி காட்டில் அழுதல் போன்றதோ, வேதத்திற் கூறப்படும் நாட்கடனுய விரதங்கள் தசை குறைதலே மட்டும் பலனுக உடையனவோ, குளம் வெட்டல் முதலியவெல்லாம் சாம்பலில் செய்த ஆகுதியோ, தீர்த்தங்களில் நீராடல் யானை முழுகுவது போன்றதோ அந்த நாராயணன் என்ற தேவன் வெல்க'[19] என்றபடி இறைவன் நினைவு இல்லாதவர்களுடைய தருமங்களும் ஒழுகலாறுகளும் சாம்பலில் இட்ட ஆகுதி போன்ற பயனற்றவை ஆம்.

'எல்லோருடைய பாவங்களையும் போக்குவனவும் நலங்களைக் கொடுப்பனவும் ஆன கண்ணபிரானுடைய குணம் செயல் அவதாரங்களுடன் சேர்ந்த சொற்கள் உலகை வாழச் செய்கின்றன; ஒளிபெறச் செய்கின்றன; தூயதாக்குகின்றன; அவைகளால் விடப்பட்டவை பிணத்திற்குச் செய்யப்பட்ட அலங்காரங்களே என்று கருதப்படுகின்றன!'[20] என்றும், 'திருமால் பத்தியில்லாதவனுடைய வேதமோதுதலும் நாலறிவும் ஜபமும் தவமும் முதலானவை, உயிரற்ற உடலுக்கு உலகத்தவர் மகிழும்பொருட்டுச் செய்த அழகுபோன்றவை[21] என்றும் சொல்லுகிறபடியே இறைவன் தொடர்பற்ற பேச்சுகளும், இறைபத்தியில்லாதவனுடைய கல்வி ஒழுக்கங்களும் பிணத்திற்குச் செய்த அலங்காரங்கள் போன்றவை என்பதாம்.

இறைவன், அவதாரங்களால் தேவனும் மனிதனும் ஆகின்றுன்; இறையடியார்களும் சாதியினுலும் நடவடிக்கைகளாலும் குணங்களாலும் அப்படியே ஆகின்றுர்கள். இதில் ஒரு குறையுமில்லை. ஆனுல், இப்படி அவதரிப்பது எல்லா

வகையிலும் உயர்ந்தது; ஏதனுலென்ருல், அது இவ்வுலகின் நன்மைக்காக நடைபெறுவதால். இறைவன் அடியவர்களல்லாத பிறரிடத்தில் உள்ள கல்வியாலும் தொழில் திறனுலும் ஆய மேன்மை, விதவைக்குச் செய்த அலங்காரம் போலே நிந்தனைக்குரியதாம்.[22] இறைவன் தொடர்பே திருமாங்கல்யம் போன்றது; அது இல்லாதபோது அவர்களது மேன்மையை விதவையின் அலங்காரம் போன்றது என்று மேலோர் இகழ்வர்.

ஆகவே, இறைவன் தொடர்புடைய வருணம், ஆச்சிரமம், கல்வி, செயல் ஆகியவைகளே உயர்வுடையன என்பதும், அத்தொடர்பில்லாத நிலையில் உயர்வுடையதாக மக்களால் எண்ணப்படும் வருணம் முதலானவை தாழ்வுடையனவாகவே மேலோர்களால் கொள்ளப்படும் என்பதையும், அவர் உயர்வால் பயனில்லை; அவை இகழத்தக்கவை என்பதையும் ஆசிரியர் ஐயத்திற்கு இடமின்றி விளக்குகிருர்.

**'உயர்ந்த பிறவி எது?' என்பதன் விளக்கம்**

ஆன்மாவின் சிறப்பியல்பான இறைவனுக்கு அடிமை செய்யும் தன்மைக்கு ஏற்றதான பிறவி எதுவாயினும், அதுவே உயர்ந்த பிறவி என்பதைப் பெரியோர்களின் செயல்களையும் பேச்சுகளையும் சுட்டிக் காட்டி விளக்குகிருர் ஆசிரியர் (நூ. 87).

இறைவன் கண்வளர்தற்கு ஏற்றதான அரவணையாயும், அவன் ஏறி ஊர்தற்கு ஏற்றதான கருடப் புள்ளாயும், அவன் விரும்பி அணிதற்குத் தகுதியான திருத்துழாயாயு மிருக்கும் விலங்கு பறவை தாவரப் பிறவிகளைப் பெருமக்களாகிய நித்தியசூரிகள் இறைவனுக்குத் தொண்டு செய்யும் இச்சையாலே மேற்கொண்டார்கள்.

'உயிர்களுக்குத் தலைவனுன பிரம்மனுடைய அல்லது பசுபதியான சிவனுடைய செல்வங்களை நான் விரும்பவில்லை;

யமுனைக் கரையில் கடம்ப மரமோ, குருந்த மரமோ ஆகக் கடவேன்',[23] என்கிறபடியும்;

'எந்த மகளிர் விடமுடியாத தங்கள் சுற்றத்தார்களையும் பெரியோர் சென்ற நெறியையும் துறந்து வேதங்களால் தேடப்படுபவனுன கண்ணன் சென்ற வழியைப் பின் தொடர்ந்தனரோ, அம்மகளிரின் பாத தூளிபட்ட பிருந்தா வனத்திலுள்ள சிறு செடி கொடிகளில் ஏதேனும் ஒன்ருகக் கடவேன்', [23a] என்றபடியும்:

'கோனேரி வாழும் குருகாய்ப் பிறப்பேனே!'[24]

'மீனுய்ப் பிறக்கும் விதியுடையே னுவேனே!'[25]

'செண்பகமாய் நிற்கும் திருவுடையே னுவேனே!;[26]

'தம்பகமாய் நிற்கும் தவமுடையே னுவேனே!'[27]
எம்பெருமான் பொன் மலைமேல் ஏதேனும் ஆவேனே!'[28]

என்று திருமலையோடு தொடர்புடைய பறவை, விலங்கு, தாவரப் பிறவிகளில் ஏதேனுமொன்ருவேனுக என்ருர் **குலசேகரர்**. 'உன் தொண்டு புரிதலுண்டாகிய இன்ப மொன்றிலேயே விருப்புடையவர்களுடைய திருமாளிகை களிலே புழுவாகிய பிறவியேனும் எனக்கு உண்டாகட்டும்'[29] (ஆள. ஸ். 55) என்றபடி இறைவனுக்குத் தொண்டிலேயே இன்பம் கொள்ளும் விருப்புடையரான ஸ்ரீவைணவர் திருமாளிகைகளிலே பிறப்பும் இறப்பும் ஆம்படியான புழுப் பிறவியே எனக்கு உண்டாக வேண்டும்', என்கிருர் **ஆளவந்தார்**.

இவ்வாறு இறைவன் அடிபடவும், அவனை அணைந்தார் அடியில் பொடிபடவும் அவன் உகந்தருளின நிலத்திலே யாதல் அவனடியார் விரும்பிய நிலத்திலேயாதல் வாழு தற்குப் பிறக்கிற புள் விலங்கு தாவரப் பிறவிகளில் பெரியோர்களான **சுகமுனிவர், உத்தவர், குலசேகரப் பெரு மாள், ஆளவந்தார்** வேண்டினுர்கள் என்பது தெரிகின்றது.

**விளக்கம்**

உலகில் விலங்கு பறவை தாவரப் பிறவிகள் மொழியாலும் உடலாலும் ஏற்படுகின்ற குற்றங்களின் பலனாக வருவன என்று நூல்கள் சொல்லுகின்றன. ஆனால், இங்கு இறைவன் விருப்பப்படி அவனுக்குப் பயன்படத்தக்க இப் பிறவிகளை நித்தியசூரிகள் விரும்பி ஏற்பார்கள் என்றும், கைங்கரியத்தை இன்பமென அறிகின்றவர், முக்தி விரும்புவோர் இறைவன் தொடர்பும் அவனடியார் தொடர்பும் கொண்ட விலங்கு தாவரப் பிறப்புகளை வேண்டுவார்கள் என்பதும் கூறப்படுகின்றது. ஆகையால், கைங்கரியம் செய் தற்கு ஒத்த பிறவியே உயர்ந்தது என்பது விளங்கும். மரம், பறவை, புழு முதலானவற்றை மக்களினும் உயர்வுடையன என மதிக்க முடியாதுதான், எனினும் அவையும் மாண்புடையனவாகின்றன இறைபணியில் ஈடுபடும்போது. உலகத்துப் பிறவிகளில் உள்ள உயர்வு தாழ்வுகள் பொருட்படுத்தத் தகாதவை; அதுபற்றி இழிவில்லை என்பதை உணர்த்துவதே இதன் கருத்தாம்.

**வருணம் முதலானவை மாறும் தன்மையனவா?**

இறைவனுக்கு அடிமை செய்தலே ஆன்மாவின் சிறப்பியல். அதற்குப் பகையான ஆணவத்திற்குக் காரணமாக உள்ளமையால் வருணம் விடத்தக்கது. கருமத்திற்கு உட்பட்டதாகையால் காரணத்திற்கு ஏற்ப மாறுபடுவதாயிருக்கின்றது அது. எனவே முத்தி விரும்புவோரான பெரியோர் வருணம் முதலியவற்றை ஆதரியார். வருணம் மாறுபடும் தன்மையது என்பது கீழ்வரும் நிகழ்ச்சியால் நன்கு விளங்கும்:

அரச குலத்திற் பிறந்த **விசுவாமித்திரன்** பிரமரிஷி ஆக விரும்பினன்; நெடுங்காலம் தவம் செய்து, **வசிட்டன்** உதவியால் மறைமுனிவன் ஆயினன். அவ்வசிட்டனை அவமதித்த காரணத்தால், இட்சுவாகு குல மன்னனை திரிசங்குவை வசிட்டன் புதல்வர் சண்டாளனுமாறு சாபமிட்டனர்.

அத்திரிசங்கு மன்னனை அவன் அணிந்திருந்த வாரையே வேள்வி உறுப்பாகக் கொண்டு வேட்டுத் தன் தவ வலிமையால் விசுவாமித்திரன் துறக்கமேறப் பண்ணினன்.

இவை புராணம் கூறும் செய்திகள்.

ஓர் அரசன் நல்வினைச் சிறப்பால் அந்த உடலிலேயே மறை முனிவன் ஆயினன்; வேறு ஓர் அரசன், தன் தீவினை வலிமையால் அந்த உடலோடே சண்டாளனாயினன்; மற்றும் அரசத் தன்மை போய் பிரம ரிஷியானவன் அரசகோலம் நீங்கிச் சண்டாளன் வடிவாய் நிற்கின்றவனை அந்தக் கோலத் தோடே வேள்வி செய்து துறக்கத்திலே ஏற்றினான்; இச்செயல்களால் வருணம் கருமத்திற்கு ஏற்ப மாறும் தன்மையது என்பது குன்றிலிட்ட விளக்குப் போன்று தெளிவாம்.

(நூ. 89).

## இறைபத்தி உடையவரே உயர்ந்தவர்; பிறப்பு உயர்வு தாழ்வு அங்கில்லை

'இறை பத்தர் சூத்திரர் அல்லர்; அடியவரான பிராமணரென நினைக்கத் தக்கவர்; எல்லா வருணங்களிலும் எவர் இறை பத்தி இல்லாதவரோ, அவரே சூத்திரர்,'[30] (பாரத—ஆச்வ—118-32) என்பதால் இறைபத்தி இல்லாதவர் விடத் தக்கவர் என்பது விளங்கும்.

'மன்னனே' நாய் இறைச்சி தின்பவனும், திருமாலிடம் பத்தி உடையவன் ஆனால், பிராமணனைக்காட்டிலும் மேலானவன்,'[31] எனவரும் பிரமாணத்தால், இறைவனிடம் செலுத்தும் பத்தியான செல்வமுடையவர்களே கொள்ளத் தக்கவர்கள். இவ்வுண்மை அறிபவர்கள், பரமபதத்தை அடைவார்கள். அப்படி அல்லாது அடியவர் பிறப்பை ஆராய்பவர் 'அமரவோ ரங்கமாறும்'[32] என்ற பாட்டின் நிலையை வைணவர்களைப் பிறப்பு முதலியன காட்டி இகழ்வாராகில், அவர்கள் வேறு காலத்தில் வேறு நாட்டில் அன்றிக்கே அப்போதே அவ்விடத்திலேயே, தாம் உயர் பிறப்பினராயினும் சண்டாளரேயாவர்.

இவ்வாறு பெரியார்களுடைய ஒழுகலாற்றையும் நூல்கள் கூறும் செய்திகளையும் எடுத்துக் காட்டிப் பிறவி காரணமாக எவ்விதக் குறைபாடும் எவர்க்கும் இல்லை; பிறவியால் உயர்வு தாழ்வு பாராட்டலாகாது; தெய்வ பத்தி யாவரையும் உயர்வுடையராக்கும் என்று சாதிபற்றி உயர்வு தாழ்வு இன்மையையும் கடவுள் முன்னிலையில் யாவரும் ஒரு தன்மையரே என்பதையும் அழுத்தம் திருத்தமாக இவ்வாசிரியர் விளக்குகிறுர்.

## சாதிபற்றிய விளக்கம்

**குறிப்புகள்:**

1. பிரமாணம்—பழைய பாடல்—ஆ. ஹி. சூ. 75
2. ஸ்ரீராமாயணம் யுத். 120:13
3. ,, ,, 120:11
4. பகவத் சாத்திரம்
5. திருமாலை—42
6. ,, 41
7. பெரிய திருமொழி 2-6-4
8. கைசிக மஹாத்மியம்
9. பெரிய திருமொழி 5-8-1
10. ,, 2-2-3
11. ஸ்ரீராமாயணம் பால கா. 1:57
12. பாரதம்—உத்யோகபர்வம்
13. ஸ்ரீராமாயணம்—பால கா. 1:78
14. பாத்மோத்ர புராணம்
15. பெரிய திருமொழி 5-8-2
16. பிரமாணம்—பழைய பாடல்
17. பிரமாணம் ,,
18. விஷ்ணு புராணம்—1-19-41
19. முகுந்தமாலை—25
20. பாகவதம்—10-18-12
21. பிரமாணம்—பழைய பாடல்
22. பிரமாணம் ,,

22a. பிரமாணம் ,,

23. பாகவதம்—10-48-61
24. பெருமாள் திருமொழி—4-1
25. ,, 4-2
26. ,, 4-4
27. ,, 4-5
28. ,, 4-10
29. ஆளவந்தார் தோத்திரம்—55
30. பாரதம்—ஆச்வ—118:32
31. பிரமாணம்
32. திருமாலை—43

## அகப்பொருள் நெறியும் உள்ளுறையும்

1. பிரகதாரணிய உபநிஷத்—6•5.5
2. அகப்பொருளும் அருளிச் செயலும் முன்னுரை பக். I
3. ,, முன்னுரை பக். XVI
4.
5. பன்னிருபாட்டியல் சூ.
6. நாச்சியார் திருமொழி 6-5
7. ,, 3-10
8. தைத்திரியோபநிடதம்
9. நாச்சியார் திருமொழி 1•5
10.
11. முமுட்சுப்படி சூ. 137, 138
12. நாச்சியார் திருமொழி, 12-2
13. திரு விருத்தம், 100
14. பெரிய திருமொழி, 9-3-4
15. நாச்சியார் திருமொழி, 5-10
16. திருநெடுந்தாண்டகம், 14
17. கண்ணிநுண் சிறுத்தாம்பு, 2

## சமய உண்மைகள்

1. பெரிய திருமொழி, 1-1-1
2. திருப்பாவை, 28
3. இரண்டாம் திருவந்தாதி, 39
4. திருப்பாவை, 22

# ஆழ்வார் கூறும் சமயக்கொள்கை களும் தத்துவ விளக்கமும்

## பகுதி 1

### ஆழ்வார் நெறியும் பிறநெறியும்

இந்நூலின் முதல் அத்தியாயங்களில் தத்துவங்களும் மதமும் பற்றிய முக்கியமான கருத்துகள் விளக்கப்படு கின்றன. பிற்பகுதியிலும் ஆங்காங்கே வரும் சில பகுதிகள் தத்துவத்தை உணரத் துணை செய்வனவாகும். சிறப்பாக ஆழ்வார் அருளிச்செயல்களும், முன் ஆசிரியர்களுரைத்த வேத உபநிஷதங்களும் இதிகாச புராணங்களும் ஆகிய இவற்றில் காணப்படும் கருத்துகளின்படியே தத்துவம் கூறப் படுகிறது. வேத உபநிடதங்களில் ஐயப்பாடுகள் தோன்றும் போது ஆழ்வார்களின் அருளிச்செயலைக் கொண்டு அவை உறுதி செய்யப்படும். இவற்றிற்கு மாறான கருத்துகள் இருப் பின், அவை தவிர்க்கப்பட்டு ஆழ்வார்தம் கருத்துகளே ஏற்றுக் கொள்ளப்படும். அதுவே, **இராமானுசர்** மேற்கண்ட நெறி என்பதைச் சூர்ணை 64, 65, 66 விளக்கும்.

'இறைவன் உளன்; மனிதர் இருக்கின்றனர்,' என்னும் செய்தி முதற்சூர்ணையிலேயே சொல்லப்படுகிறது. இறைவன் கருணை வடிவினன்; மனிதர் இருளாற் சூழப்பட்டுள்ளனர் என்னும் இரண்டு கருத்துகளும் அதிலேயே குறிக்கப்படு கின்றன. இவர்கள் இருளை விட்டு நீங்க வேண்டும்;

இறைவனைக் காண வேண்டும்; அடைய வேண்டும். அதற்குக் காரணமானது அவனது கருணையே என்பதும் மிகவும் அழுத்தமாக முதற் சூர்ணையிலேயே சொல்லப்படு கின்றது. அக்கருணையினால் மக்கள் அவனைப் பற்றுதலும் இருள் உலகை விடுதலும் செய்ய—பகுத்தறிய—அவன் சாத் திரங்களை அருளினான்.

உயிர்கள்—மனிதர்கள்—அநாதியாக அசித்தோடு சம் பந்தம் கொண்டதால், அவித்தை பெற்றார்கள். அதனால் புண்ணியமும் பாவமும் ஆன செயல்கள் புரிந்தனர்; அதனால், இருள் எனப்பட்ட அஞ்ஞானம் நிரம்பிய உலகில் பிறந்தனர்; அது காரணமாக இராசத தாமத குணங்களாற் பற்றப் பட்டனர்; அதனால், அவர்கள் ஐம்பொருள் (இறைவன் நிலை, உயிர்நிலை, பகை நிலை, உபாயநிலை, மெய்ந்நிலை ஆகிய ஐந்து அறிவு) இல்லாதவர்களானார்கள்; எனவே, பல இன்பங்களிலே அகப்பட்டு எல்லையற்ற துன்பங்களுக்கு இருப்பிடமான சம்சாரத்திலே (பிறந்து இறத்தலிலே) அழுந்தினார்கள். இத் தகைய துக்கம் விடத்தக்கது என்பதை அறிதல்வேண்டும்.

உயிர்களுக்கு அநாதியாக நாராயணனோடு சம்பந்தம் உண்டு. இறைவனோடு கொண்ட அந்தச் சம்பந்தத்தால் இறைவனுக்கு உயிர்கள்பால் அருள் புரிந்த சிந்தை (சௌஹார்தம்) உண்டு. அதனால், அவன் அருள் புரிவன். அவ்வருளால் அவன் தூய்மையைச் செய்யும் கடைக்கண்ணால் காண்பன். அதன் பயனாகச் சத்துவ குணமிகுதி ஏற்படும். அதன் பயனாக உண்மை அறிவு ஏற்பட்டு ஐம்பொருள் அறிவு உண்டாகும். அதனைப் பெற்ற காரணத்தால் பேரின்பமாகிய (வீடாகிய) சுகம் கிட்டும். இச்சுகம் பற்றத்தக்கது என்பதை அறிதல் வேண்டும்.

மேற் கூறிய அசித்துச் சம்பந்தம் தன்னோடே சேர்ந்த மாணிக்கத்தை ஒளியத்தின்று உரு அழித்துத் தன்னைப்போல ஆக்கும் சிட்டம் போலத்தானும் ஆன்மாவின் சீர்மை பாராதே தன்னைப் போலாம்படி அதன் அறிவு சிறிதும் இல்

லாதபடி நின்று, அதற்கு ஒரு முடிவை உண்டாக்கும். இறைவ னேடு உள்ள சம்பந்தம், ஏதேனும் ஒரு புழுவைக் கொண்டு வந்து வைத்து ஊதித் தன்னை ஒத்ததாக்கும் **வேட்டுவேளான்** என்கிற குளவியைப்போல, பொருளல்லாததாய்க் கிடக்கிற ஆன்மாவின் சிறுமையைப் பாராதே இயல்பாகவே எங்கும் பரந்துள்ள தன்னேடு ஒத்த தன்மையை ஞானம் வழியாகப் பெறும்படி தன்னிறமாக வூதி வாழ்வாகிற சத்தை (இருப்பை) உண்டாக்கும்.

இந்த இரு சம்பந்தங்களும் ஆன்மாவிற்கு அநாதியாகவே இருக்கின்றன என்றால், ஆன்மா எந்தச் சம்பந்தத்தைப்பற்றி எவ்வாறு கடைத்தேறுவது என்னும் கேள்வி எழுகின்றது. இதில் அசித்தின் சம்பந்தம் ஆன்மாவிற்கு இயல்பாகவே உள்ளதன்று. அது பின்னர் வந்து ஆன்மாவைப் பற்றிக் கொண்டதே. 'பெருந்துயர் இடும்பையில் பிறந்து கூடினேன்', என்பதால் அது விளங்கும். அது எல்லாம் வல்ல இறைவன் போக்க, வாசனையும் இல்லாமல் போய்விடும் தன்மையது. ஆனால், இறைவனேடு கொண்ட உறவு, 'உறவேல் நமக்கு இங்கு ஒழிக்க ஒழியாது', (திருப்பாவை 28) என்றபடி உயிர் களாலும் இறைவனாலும் அல்லது இருவர் தம் உடன்பாட்டா லுங்கூட ஒழிக்க இயலாத ஒரு தொடர்பாகும். எனவே, அது தாய்க்கும் அவள் குழவிக்கும் உள்ளது போன்ற நிலையான சம்பந்தமாம்.

'ஆனால், பின்னர் வந்த அசித்துச் சம்பந்தத்தை அநாதி என்று மேலே சொல்லியது ஏன்?' என்று கேட்கலாம். பின்னர் வந்தது என்பது உண்மையானாலும், அது என்று வந்தது என்பது தெரியாமையால், 'அதையும்' என்று கூறினர் என்பதை அறிதல் வேண்டும்.

இந்த இறைவனேடு கொண்ட தொடர்புதான் அவன் சாத்திரங்கள்—வேதங்கள்—அருளியதற்கு ஏது என்பது அறியத்தக்கது. நாராயணன் என்பதற்கு எல்லா உயிர் களுக்கும் பிற பொருள்களுக்கும் இருப்பிடமானவன்

என்பதும் எல்லாப் பொருள்களிலும் உறைபவன் என்பதும் ஆகிய இரு பொருளும் உண்டு. இக்கருத்தை,

*அறிகிலேன் தன்னுள் அனைத்துலகம் நிற்க*
*நெறிமையால் தானும் அவற்றுள்நிற் கும்பிரான்*
(9- 6- 4)

என்னும் நம்மாழ்வார் வாக்கில் காணலாம். இந்தக் 'குடல் துடக்கு' தான்--அயநசம்பந்தந்தான்--அவன் சாத்திரம் அருளக் காரணம். அப்படியானால், அவன் உயிர்களை மோக்ஷம் பெறுவிக்கும் சாத்திரங்களை மட்டுமருளாமல், கட்டுவிக்கும் பந்தக சாத்திரங்களையும் அருளியது 'ஏன்,'[7] என்னும் கேள்வி எழுகின்றது. அதுவும் அவன்[8] மிக்க அன்பாலே--வாத்ஸல்யத்தாலே---செய்தான். அன்பு மிக்க தாயானவள் தன் பிள்ளை மண் தின்னப் போனால் அதைத் தடுத்தால் அதன் முகம் வாடும்மென்று அதைத் தின்ன விட்டுவிட்டுப் பின் அம் மண்ணால் கேடு வாராதவாறு வேறு மருந்து கொடுத்து நோயைச் சரி செய்வாள். அதே போன்று, இறைவனும் எல்லா உயிர்களுக்கும் தாயினும் சாலப்பரிந்த தன்மையன் ஆகையினால், உயிர்களின் சுவைக்குத் தக்கவாறு பந்தத்தையும் காட்டி, அதை அறுக்கும் மருந்தினையும் காட்டுகின்றான். இவ்வாறு செய்வது முறைப்படி அவர்களை ஈடேற்றுவதற்கு ஆன வழி. விடுதலை (மோசம்) உண்டாக்கும் சாத்திரத்தை மட்டும் காட்டினால், அறிவற்றுப் பொருள் நாட்டம் கொண்டு, பிற உயிர்களுக்கு இன்னா செய்யும் தன்மையருக்கு அவற்றின்பால் சுவை தோன்றாது. அவர்களையும் வளைத்துப் பிடிப்பதற்காக அவர்களுக்குச் சுவைதரும் பிற உயிர்களுக்குத் துன்பம் தரும் சாயலில் அமைந்த அபிசார கருமத்தை (ஏவல் வினைகளை)ச் செய்யும்படி விதித்து, அவற்றால் பலன் ஏற்படும்போது அவருக்குச் 'சாத்திரமுண்டு', என்கிற நம்பிக்கை (ஆஸ்திக்யம்) ஏற்படுகின்றது. பின்பு சுவர்க்கம் முதலிய உறுதிப் பொருள்களைப் பெறுதற்கேதுவான கருவிகளை விதித்து, அவ்வழியால் 'பிரகிருதி ஆன்மா' என்பவற்றைப் பகுத்துணரும் அறிவை

உண்டாக்கியும், அப்படி பகுத்தறிவு பிறந்த பின்பு ஆன் மாவின் இன்பத்திற்கு வழிகாட்டி, அவ்வழியாலே பிறர்க்கு அடிமையாயிருத்தலை நீக்க, அதன் பிறகு இறை இன்பத்தின் தனிச்சிறப்பையும், அதனை அடையும் கருவியான பக்தி யையும் காட்டி, அவ்வழியாலே தன்னுரிமை நீக்கத்தை உண் டாக்கியும், அதன்பின் வேறு வழிகளில் சென்று செயற் கருமை முதலியவற்றால் அவர்கள் தளருமளவில் தன் முயற்சி நீக்கமான சரணுகதி அடைதலிலே செலுத்தி, ஆன்மாவின் உண்மை இயல்பானதும், அதற்கு உரிமையுடையதுமான 'அவனுக்கு உடைமையாதல்' (பாரதந்தியம்) பான்மையை உண்டாக்கியும் இப்படி முறையாக ஈடேற்றுவதற்காகவே இறைவன் பந்தக சாத்திரங்களையும்--பற்று விளக்கும் சாத் திரங்களையும் அருளினன். (சூ--15)

இறைவன் கருணை காரணமாக இவற்றை வெளியிட் டாலும், உயிர்கட்கு இவற்றைக் கற்கப் பல தகுதிகள் வேண்டும்; அவை யெல்லாம் பெற்றுக் கற்பது அரிது என்று எண்ணி, எளிய வழி ஒன்றையும் காட்டியருளினன். வேதங் களின் சாரம் உபநிடதங்கள் அவற்றின் தெளிந்தசாரம் நாராயண அநுவாகம். அதன் மிகத் தெளிந்தசாரம், **காயத்திரி** மந்திரம். அதன் முதலில் சொல்லப்படுவது **பிரணவம்**. அதுவே வேதத்தின் சுருக்கம்.

'மாதவன் பேர் சொல்லுவதே வேதத்தின் சுருக்கு'. பிரணவ மந்திரத்தை தெய்வ வண்டாகிய இறைவன் வேதச் சாகைகளிலிருந்து தேனெடுப்பது போல எடுத்தும் அன்னமாய் அவன் நீரிலே கலந்து கிடக்கும் பாலைப் பிரித்தெடுப்பதுபோல எல்லோருக்கும் தக்கதான பாலான இதனை எடுத்தும், தேவர் களைக் காத்தலின்பொருட்டுப் பாற்கடலிலிருந்து அமுத மெடுத்தவாறு நால்வேதக் கடலிலிருந்து பிறப்பை அஞ்சுபவர் களைக் காக்க இதனை எடுத்தும், தன் பேரருளையே பரவும்படி பண்ணினன். எனவே, சாத்திரங்களைவிடத் **திருமந்திரம்** சிறந்தது என்பதனைக் கீழ்க் காணுமாறு காட்டுகின்றார்.

## சாத்திர நெறியும் திருமந்திர நெறியும்

| | சாத்திரம்: | திருமந்திரம்: |
|---|---|---|
| 1. | முனிவர் வழியாக வெளிப்படுத்தியது. | அவனே அருளியது. |
| 2. | உடலிலே நோக்குடையது. | ஆன்ம வடிவிலே நோக்குடையது. |
| 3. | பழுதிலாத் தகுதியுடையரே பின்பற்றற்குரியர். | மனமுடைய அனைவரும் பின்பற்றத் தகுதியுடையர். |
| 4. | சாத்திரமறிந்தவர் தெப்பத்தின் துணைகொண்டு கையால் நீந்திக் கடல் கடக்கும் நிலையினர். | சாரமறிந்தவர் தெப்பத்தின் விட்டத்திலேறிக் கரை குறுகும் காலம் கருதிக் கொண்டிருக்கும் தன்மையர். |
| 5. | இதற்குக் காரணம், இவர்கள் ஆன்மாவின் இயல்பை அறிந்துள்ள வகையே. | இதற்குக் காரணம், ஆன்மாவை இவர்கள் அறிய வந்த வகையே. |
| 6. | ஆன்மா உடலினும் வேறுபட்டதாய், அறிதல் தன்மை-செய்தல் தன்மை அனுபவிக்கும் தன்மைகளை உடையதாயிருக்குமென்று அறியும்போது அந்நிலைமை உண்டாகும். | எல்லாம் அழிபவை என்ற உணர்வைப் பெறும்படி இறைவன் செய்ய, அவனுக்கு உடைமை பாதலும்-அநுபவப் பொருளாதலும் ஆகியவையே ஆன்மாவின் உண்மைத் தன்மை என உணரும்போது இந்நிலைமை ஏற்படும். |

| | சாத்திரம் | திருமந்திரம் |
|---|---|---|
| 7. | இவ்வுணர்வு இவர்களை உபாயத்தைச் செய்தலில் மூட்டும். | இவ்வுணர்வு அநுபவப் பொருளான தன்னைப் பெற இறைவனே முயல வேண்டும் என்று எண்ணி உபாயமாக ஒன்றும் செய்யாத நிலையராக்கும். |
| 8. | இவர்களுடைய **கருமங்கள்** உண்மையற்றதும் நிலையற்றதுமான **சாதிக்கு ஏற்ப** அமைந்திருக்கும், | இவர்களது செயல் உண்மை யானதும் நிலை யானது மான **அடிமைத்** தன்மைக்கு ஏற்ற **கைங்கரிய**மாய் இருக்கும். |
| 9. | இவர்களைக் கருமம் செய்யத் தூண்டுவது சாத்திர விதியாகும். | இவர்களைக் கைங்கரியம் செய்யத் தூண்டுவது இறை அனுபவத்தில் உண்டான உகப்பேயாகும். |
| 10. | இவ்வாறு செல்பவர்கள் இறைவனைப் பல்வேறு சாதனங்களால் **வழிபாடு** செய்பவர்கள். | இறைவன் அர்ச்சாவதாரமாய் விளங்கும் பல திவ்ய தேசங்களிலே ஈடுபட்ட பிரபந்நர் ஆவார். |
| 11. | இவர்களுக்கு இலக்கு எப்படிப்பட்ட தவத்தைச் செய்தவர்களுக்கும் பலனை அளிப்பது | இவர்க்கு இலக்கு தனது அருளினாலே மிகவும் எளியனாய் |

| | சாத்திரம் | திருமந்திரம் |
|---|---|---|
| | ஆழியான்பால் உண்டான அருளே என்னும்படி **பல தெய்வங்களாகவும்** தன்னையே நிறுத்தி மக்கள் விதிகளின்படி தன்னையடையும்படி **அந்தர்யாமியாய்** நின்ற இடம். | வந்து **அர்ச்சாவதாரமாய்** நிற்கிற இடம். |
| 12. | அந்தர்யாமியாய் உள்ள வடிவு 'பொது' என்று பெயர் பெறும். அதைப் பொருளாகக் கொண்டு செய்யும் கருமமும் **பொது** என வழங்கப்படும். | திவ்விய மங்களவிக்கிரகத்தோடு கூடிய **'சிறப்புவடிவு'** எனப்படும். அதைப் பொருளாகக் கொண்டு செய்யும் கைங்கரியம் **'சிறப்பு'** எனப்படும். (அந்தரங்க சேவை செய்கின்ற இவர்களுக்குப் பொதுவானகருமம்செய்ய வேண்டுவதில்லை அவை தாமே கழியும்.) |
| 13. | மேற்கண்ட **கருமம்** சாதனத்தில் முதல்நிலையாகும். இவர்கள் வருணத்திற்கேற்ற தர்மம் செய்யும் வர்ணதர்மிகள் எனப் பெறுவர். | **கைங்கரியம் பேற்றில் முடிந்த நிலை.** இவர்கள் தொண்டு புரிபவர்களாகிய தாசவிருத்திகள் எனப்படுவார்கள். |
| 14. | வேதத்தை அறிந்தவர்கள் காயத்திரி உபதேசம் செய்து பிறப்பிக்கும் அது இவர்க்குச் | வேதத்தின் கருத்தினை உணர்ந்த மிக்க வேதியர், |

| | சாத்திரம் | திருமந்திரம் |
|---|---|---|
| | சிறந்த பிறப்பு. இவர்க்கு **உபநயனச் சடங்கு** உண்டு. | வேதங்களின் சுருக்கமாகையால் காயத்திரிக்கும் தாயாய்த் தாயினும் ஆயின செய்யும்ஞானத்தை உண்டாக்கும். திருமந்திர **உபதேசத்தாலே** பிறப்பிக்குமாறு இவர்க்குச் சிறந்த பிறப்பு. |
| 15. | இவர்கள் **அந்தணர்கள்** என்றும், **மறையோர்** என்றும் வருணமும் அது காரணமாக வந்த வேத நம்பிக்கையும் பற்றிச் சிறப்பான பெயரில் வழங்கப்படுவார்கள். | **அடியார்** என்றும் **தொண்டர்** என்றும் ஆன்மாவாகிய பொருட்கு ஞானம் ஆனந்தம் இவற்றினும் நெருங்கிய சிறப்பியலான அடிமைத் தன்மையும் அது காரணமாய்த் தோன்றிய கைங்கர்யமும் பற்றிச் சிறப்பான பெயரால் வழங்கப்படுவார்கள். |
| 16. | கிராமம், குலம் இவற்றின் அடிப்படையில் பெயரிட்டு வழங்கப்படுவர். | அது பழியென்று இறைவனோடு கூடியுள்ள தேசத்தையிட்டு அல்லது அடியவர் சம்பந்தத்தையிட்டு வழங்கப்படுவர். |

| | | |
|---|---|---|
| **17.** | அந்தணர்க்குக் கோத்திரமும்-சரணமும் சூந்திரம். இவற்றின் தலைவர் முறையே பராசரர், போதாயனர் முதலானவர் | அடியவர்க்கு-பிரபந்தர்க்கு முதல்வர் பராங்குசர், பரகாலர், யதிராசர் முதலானவர் |
| **18.** | **வேதங்களை** ஆசாரியர் வாயிலாக ஓதுதல் பொருளறிதல் கடைப்பிடித்தல் ஆகியஇவற்றால் அந்தண்மை (பிராமணியம்) அமையும். | 'சந்தங்கள்ஆயிரம்' எனப்பட்ட வேதவ்டிவான **திருவாய்மொழியை** ஓதி உணர்ந்து அதன்படி ஒழுகவும் வல்லாராறல் **ஸ்ரீ** வைஷ்ணவத்துவம் கைகூடும் |

இப்படிச் சாத்திரநெறியை ஒரு பிரிவாகவும் சாரஞர் வேறு ஒரு பிரிவு போலும் ஆசிரியர் எடுத்துக் காட்டுகின்றார். இரண்டும் இருவேறு துறைகள் என்று வேறுபடுத்தியும் கூறப்படுகின்றன. ஆனால் ஓர் ஆற்றிலுள்ள இரு துறைகள் என்பதையும் அவர் குறிப்பாக உணர்த்துகின்றார். கருமம் ஞானம் பத்தி என்பவற்றை முன்நெறியைச் சேர்ந்தனவாகவும் பிரபத்தியைப் பின்னெறியாகவும் கொள்ளலாம் என்பது தெரிகின்றது. முன்னது வருணத்திற்கேற்ப அமைந்தது; சில தகுதிகளை உடையவர்களுக்கு மட்டும் அமைந்தது. பின்னது, வருணம் ஆச்சிரமம் முதலிய பிரிவுகளற்றது; எத்தகுதியுடையவர்க்கும் கைக்கொள்ளத் தக்கது; எளிமை உடைய நெறி. 'இவற்றில் எது உயர்ந்தது?' என்னும் கேள்வி எழுதல் கூடும். 'வேதந்தானே பெரியது; அதனைப்பின்பற்றும் நெறி உயர்ந்தது', எனின் அதற்கு விடை பகர்வன சூர்ணை 38, 39. வேதங்கள் இருவகைய: ஒன்று வடமொழி வேதம்; மற்றொன்று தமிழ் வேதம். இரண்டிலும் சொல்லப்பெறும் கருத்து ஒன்றே. எனினும் எளிமை, தெளிவு எல்லோர்க்கும்

உரிமையாதல் ஆகிய ஒரு சில வகைகளில் தமிழ் வேதம் ஏற்றமுடையது என்பது விளக்கப்படுகின்றது. அந்த முறையிலே **பிரபத்திநெறி** சிறப்புடையது என்பதும் ஆசிரியர் கருத்தாகும்,

வேதங்கள் நான்கும் கற்று உணர்ந்து ஒழுகுதலை ஒருவன் செய்யினும், இந்தச் சந்தங்களாயிரத்தின் பொருள் கற்று உணர்ந்து உயர்ந்தவனாகாவிடில் அசலானவன் என்று கூறி, அவர்கள் அந்தணர்கள் தாமா என்பதும் ஆராயப்படும் என்று தெரிவிப்பதன் மூலம் வேதாந்திகளும் தமிழ் வேதம் கற்றல் வேண்டுமென்றும், இல்லையேல் அவர்கட்கு வைண வத்மேயன்றி பிராமணத் தன்மையிலும் குறைவு ஏற்படு மென்றும் நூலாசிரியர் தெளிவுறவே இதில் கூறுகின்றார். அதன் மூலம் இந்த நெறி யாரோ சிலர் இழிந்த நிலையில் உள்ளவர்கட்கு மட்டுமே என்ற எண்ணம் கடியப்படுகின்றது என்பது தெளிவுற அறியலாம்.

மேலும் வியாசர் எழுதிய பிரம சூத்திரங்கள் போன்ற வற்றில் குருவிற்கும் சீடனுக்கும் உள்ள வேறுபாடுகளைக் காரணம் காட்டி நீக்க வேண்டிய இன்றியமையாமை ஏற்படு கின்றது. ஆழ்வார் அனைவரும் ஒரே குரலில் பேசுபவர். இவர் தம் நூற்செய்திகளுக்குப் பொருந்தாதன வேறு சாத்திரங்களில் இருந்தால் அவை நீக்கத்தக்கன. சொல்லப் படும் பொருளைத் திறம்பட எடுத்துச் சொல்லும் இதற்குச் சேராதவை மனுவின் நூலுக்கு மாறானவை புகழப்படாத வாறு போலப் புகழப்படாது தள்ளப்படும் (சூ. 64). இதுவும் மேலே சொல்லிய கருத்தை வலியுறுத்தும் மற்றும் ஆள வந்தார் பாடிய குறிப்பை ஒட்டி இராமநுஜரும் தம் பாஷ் யத்தில் ஐயப்பாடான பொருள்களையெல்லாம் இத் திருவாய் மொழிப் பாடல்களின் துணை கொண்டு உறுதி செய்து, இதற்குப் பொருந்த விடுவர் (சூ. 65) என்பதாலும் முன் ஆசிரியர்கள் ஆழ்வார் நூல் பற்றியும் அதில் கூறும் நெறி பற்றியும் கொண்டிருந்த கருத்து மிகவும் தெளிவுறும்.

இறைவனுடைய அருட்பார்வைதான் ஆழ்வாருடைய எல்லாப் பெருமைக்கும் உயர்வுக்கும் காரணம் ஆகும் (சூத். 91). இறைவனான இராமபிரானுடைய திருக்கண் பார்வையால்வேடுவச்சியானசபரி தூய்மைபெற்றவளானாள். 'அழகிய செந்தாமரைக் கண்ணா' என்று பகைவனாலும் பாராட்டப்பெறும் கண்ணனுடைய அருட்பார்வையில் (அவன் தன் வீட்டில் உணவு உட்கொள்ளுதலால்) விதுர ருடைய கேடுகளெல்லாம் நீங்கி அவர் தூயரானர். பக்த விலோசனத்தில் முனிவர்களின் மகளிரை அப்போதே வீடு பெறும்படி செய்தது இறைவனுடைய அருட்பார்வை. இவ்வாறு இவர்களையெல்லாம் பூதராக்கிய (தூயராக்கின) புண்டரீகாட்சன் நெடுநோக்கு யாவர்மீது படினும் அநுபவித்தாலல்லது நசிபாத அவர்தம் பாவங்களெல்லாம் ஒழிந்துபோம்[4].

ஆனிரைகளைக் காப்பதற்காகக் கண்ணன் நெருஞ்சிக் காடாய் இருந்த இடத்தையெல்லாம் பசும்புல் நிறைந்த காடாக்கினான். அதே போன்று, உலக நன்மையின் பொருட்டு எல்லா உயிர்களிடமும் செலுத்தும் அருளையெல்லாம் ஒரு மடையாக்கி இவரைத் தன்னைப் போன்ற ஞானமும் சத்தியும் உடையராம்படி செய்தான். அதனை இவரே 'எதிர் சூழல்புக்கு எனைத்தோர் பிறப்பும் எனக்கே அருள்கள் செய்ய விதி சூழ்ந்தால் எனக்கேல் அம்மான் திரிவிக்கிரமனையே (2-7-6) என்று பாடுகின்றார். இப்படிச் செய்ததால் இவர் ஊர்களையும் நாட்டையும் உலகத்தையும் தம்மைப்போல அவனுடைய பேர்களையும் தார்களையும் பிதற்றி அவன் பால் ஈடுபடும்படி செய்யும் தன்மை யரானார். இவர்க்குச் செய்த அருளாவது இவர்க்கு மயர்வற மதிநலமருளிய தேயாகும். அதாவது அஞ்ஞானத்தை அடியோடு போக்கி, பத்தி வடிவான ஞானத்தை இவர்க்கு அருளினன் இறைவன் என்பது.

சாத்திரங்களிலே **'சாதனபத்தி, சாத்தியபத்தி'** என இரண்டு சொல்லப்படுகின்றன. அவ்விரண்டிலும் சேராதது ஆழ்வார்தம் பத்தி. அது திருத்துழாய்க்கு மணம்போல, ஆழ்வார் பிறந்தபோதே அவருடன் ஒக்கப் பிறந்தது; விட

நினைத்தாலும் விட வொண்ணுதபடி உடன் வந்தது. அநுபவிக்கத் தக்க பொருளை விரும்பியவாறு அநுபவிக்காத போது உணவு பெருத நிலையில் பசி போன்று கஷ்டத்தையும் நோயையும் பெறும்படி செய்வது; அவனை அநுபவிக்க வேண்டுமென்ற ஆசையால் வற்ருத இயல்புடைய ஆன்மாவையும் குருத்து வற்றும்படி செய்வது; இன்பமான அவனைக் காணவேண்டுமென்று அலமறும்படி செய்வது; அதற்கு மேலும் இதர உபாயங்களையெல்லாம் விட்டு அவனையே உபாயமாக உறுதியுடன் பற்றியிருக்கும் இவரை 'குதிரியாய் மடலூர்தும்' என்று விடத்தக்க உபாயத்திலே இழியமாறு செய்கையாலே விடத்தக்கதில் நிலையாக நிற்கும் கேட்டைப் பெறச் செய்யும் தன்மையது.

'நாகணைமிசை நம்பிரான் சரணே சரண்' என்று ஒரு தரம் செய்ய வேண்டிய பிரபத்தியை-சரணுகதியை-மீண்டும் மீண்டும் செய்யும்படி செய்கையாலே கொள்ளத் தக்கதில் நிலையாக நிற்றலிலிருந்து விலகச் செய்யும் தன்மையது. இவ்வாறு இருப்பதால், இவர் தம் பத்தி இறைவனை நினையாமை என்றும், சத்துக்கேடு என்றும் இரண்டு இல்லை என்று இருக்கும் இவர்க்கு எப்பொழுதும் அவனைப் பற்றியே நினைப்பதற்கு ஏதுவாகையாலே, இவர்தம் சத்தைக் குத்துணையானது ஆகும்; 'எல்லாம் கண்ணன்' என்றிருக்கும் இவர்க்கு அவனை அநுபவிக்க வேண்டுமென்ற ஆசையை மேன்மேலும் விளைக்கையாலே, அவனை அநுபவிப்பதற்குத் துணையானது ஆகும்; 'வழுவிலா அடிமை செய்ய வேண்டும்' என்றிருக்கும் இவர்க்கு முடிவில்லாத அடிமைத் தன்மையாகிய ஒரே ஆசைக்குக் காரணமாகையாலே, தொண்டு செய்தற்குத் துணையான தாயிருக்கும். இப்படி மூன்றுக்கும் துணையானது இவர்தம் பத்தியாம்.

இறைவனது காரணமற்ற அருளே அவன் உயிர்களை ஆட்கொள்ளுதற்கு ஏது என்பது இவர்கள் கருத்து. அதற்கு உயிர்கள் இப்பிறவியிலோ, அல்லது முன் பிறவியிலோ மேற்கொண்ட கர்மம், ஞானம் உபாயமான பத்தி யாதொன்றும்

ஏதுவாகாது. இறைவனுடைய முயற்சியின் பலனாலேயே இப் பத்தி ஆழ்வார்க்கு உண்டாயிற்று என்பதனை வயலும், பயிர் செய்பவனும், பயிரும், அதன் பலனுமாக உருவகித்து அழகுறக் கூறுகின்றது (சூ 104).

'ஒரு நல்வினையும் இல்லாத போதும் இறைவன் அருள் பாலித்தலுண்டோ?' என்னும் வினா எழுகின்றது. கோசல நாட்டிலிருந்த புல் எறும்பு முதலிய யாவும் ஓர் ஏதுவுமின்றியே நல்ல நிலை இராமனால் பெற்றன. கோகுலத்தில் கண்ணன் குழலூதினபோது கண்டவர் 'அற்புதம்!' என்று வியக்குமாறு அங்கிருந்த சராசரங்கள் யாவும் இறைவன் பால் ஈடுபட்டன. ஆகையால் காரணமின்றியே இறைவனது அருள் பலிக்குமென்பது விளங்கும். 'அப்படியானால்—இறைவன் காரணமின்றி ஆட்கொள்வதானால்—அவன் எல்லாரையுமன்றோ ஆட்கொள்ள வேண்டும்! ஒருவரை மட்டும் ஆட்கொள்வானேன்?' என்னும் கேள்வி எழுகின்றது, அதற்கு **ஆசாரிய ஹிருதயக்காரர்** கூறும் விடை, 'பட்டத்துக்குரிய யானையும் அரசும் செய்யுமவை ஆராயாது' (சூ106). என்பதுதான். 'ஆட்சியற்ற நாட்டில் பட்டத்துக்குரிய ஆனையைக் கண்ணைக்கட்டி விட்டால், அவ்வானையால் எடுக்கப்பட்டவன் அரசனாவான். 'மற்றவர்களை விட்டு இவனைமட்டும் எடுக்கக் காரணமென்?' என்று ஆராய்தல் கூடாது. அதேபோன்று அரசகுமாரன் தன் செருக்காலே ஒருத்தியைத் தனக்குப் பட்டத்தரசியாகக் கொண்டால் இவளைப் போன்ற பலர் இருக்கவும் இவளைத் தேர்ந்தெடுப்பானேன் என்று ஆராய்தல் ஆகாது. அதுபோன்று குறைவற்ற உரிமை உடையவனான இறைவன் தனக்கு அடிமைப் பட்டனவும் தனக்கே உரியனவும் ஆன ஆன்மாக்களில் ஒன்றினைத் தன் அநுபவத்திற்கு உரியதாம்படி ஏற்றுக் கொண்டால், அதற்குரிய காரணம் ஆராயப்படாது எனப் படுகின்றது.

'இறைவனுக்கு உரிமை உண்டு என்பது ஏற்றுக் கொள்ளலாம். ஆயினும், அவனுக்கு ஒருதலைநோக்கு (பட்சபாதம்)

என்ற குறையாகாதோ?' என்று வினவலாம். அதற்கு விடை காணும் முன் இறைவன் தன்பால் யாவர் பிரபத்தி செய்கின்றாரோ அவரையே ஆட்கொள்ளுகின்றான் என்பதும் அறியத்தக்கது. ஆழ்வார்க்கு இறைவன் மயர்வற மதிநல மருளினான். அந்நிலையடைந்த பின், அவர் 'புகலொன்றில்லா அடியேன், அடிக்கீழமர்ந்து புகுந்தேனே!' என்று சரணாகதி யடைந்த பின்னரே அவரைக்கொண்டு திருவாய்மொழி பாடுவித்துப் பின் அவரையும் ஆட்கொள்கிறான் இறைவன்.

அவன் இவரை ஆட்கொள்ளுதற்கு உபாயமாக இவர் ஒன்றும் செய்யவில்லை என்பது 107 முதல் 113 முடிய 7 சூர்ணிகளில் எடுத்துக் காட்டப் பெற்றுள்ளது. இவர் அறிந்து செய்த நல்வினையுமில்லை. இவர் அறியாது தானே வந்தமைந்த நல்வினையும் இருத்தற்கு இடமில்லை. இவருக்குத் தீ மனம் கெட்டதற்கும் மருவித்தொழும் மனம் வந்ததற்கும் காரணமும் அவனருளே; இவர்தம் நல்வினையன்று. இறைவன் எண்ணினும் வரும் எளியனாயினும், இவருக்கு எண்தானு மின்றியே அருள் செய்தான். அவன் மனத்தில் தங்குதற்கு அனுமதி செய்தாரே, அதற்கு இவரும் உள்ளமும் ஒத்துக் கொண்டனவோ?' என்றால், இல்லை, அவ்விரண்டும் அவன் முயற்சியின் பலனே என்பதும் அவர் பாசுரங்களிலேயே கூறப் பெற்றுள்ளது.

'மாதவன்' என்றும் 'திருமாலிருஞ்சோலை' என்றும் இவர் பேச அவன் தன் பெயரையும் தன் ஊர்ப் பெயரையும் சொன்னதாக ஏறிட்டுக் கொண்டு வந்து இவர் நெஞ்சில் புகுந்ததாகவும், மற்றும் அவ்வாறே இவர் வேறு செயல் களையும் அவனைக் கருதிச் செய்ததாகக் கொண்டு இவரை வந்து ஆட்கொண்டதாகவும் சொல்லலா மென்றால், அதுவும் பொருந்தாது. ஏனென்றால் இவை முறையே வேறுபாடு தோன்றச் சொல்லிய சொற்கள்; வேறு காரணம் பொருட் டாகச் சொல்லியவை; மனத்தோடு மொழிந்தன அல்ல; பலத்திற்காக நூல்களில் விதித்தனவுமாகா. பெரிம்பேற்றுக்கு ஏற்ற ஏதுமாகா; சில பயன்களுக்குக் காரணமானால் ஆகலாம்.

ஆகையால், இவையும் பேற்றுக்குக் காரணமானவை யல்லவாம்.

மற்றப்படி இறைவனே. ஒரு காரணமின்றியே, 'இவன் அடியான்' எனறு வந்து ஆரருள் செய்தான். 'இவர் தாம் அடியவர் என்பதற்குச்சான்று ஏன்?' என்றுகேட்க, இறைவன் வேதத்தைப் பிரமாணமாகக் காட்ட, இவர், 'அது ஓலைப் படாததனுல் பிராமாணமாகது,' என்று மறுக்க, இறைவன் தன் பல காலமாக வரும் அநுபவத்தை வலிமையாகக் கருதி அதைக் கூற, அதற்கும் சான்று கேட்டபொழுது அவன் உண்மை உணர்ந்தவர்களான ஞானிகளைக் காட்ட, அதற்கும் 'அவர்கள் உன்பக்கம் நோக்குடையவர்கள்—பட்சபாதிகள்,' என்று இவர் மறுத்துவிட்டார். இப்படி அழகானதொரு கற்பனையை ஆசிரியர் தருகின்றுர்.

அந்த நிலையில் எல்லையற்ற காலமாக நான் என்னுடையவன் என்று இருந்த அநுபவம் வலிய களவாலே வந்ததென்று இவர் இரக்கப்படும்படி இந்திரஞாலங்கள் போலே கண்ணையும் கருத்தையும் கவரும் வடிவழகையும் சீல குணத்தையும் காட்டி அவரைக் கைக்கொள்ளும்படி இறைவனைத் தடுக்க முடியாதபடி இயல்பான அருள் வளைத்துக் கொண்டது (சூ. 112). அதனுல்தான் ஆழ்வாரும் 'வரவாறென்றில்லையால் வாழ்வினிதால்' என்றும், 'பெறிதே அருள் செய்வார் செய்வார்கட்கு' (8-7-8) என்றும் அறுதியிட்டுப் பேசுகின்றுர். ஆகையால் வாழ்க்கைக்கு ஒப்பற்ற முதலாகிய அவன் தன்னை ஒழிய வேறு நினைத்துப் பார்த்தற் கேற்றதான காரணமும் இல்லை என்பது தெளிவாகும்.

'இவ்வாறு காரணமின்றி அவன் கருணை புரிவது ஏன்? அப்படிச் செய்பவன் எல்லாருக்கும் செய்யாமை குறைவுடையதாகாதோ?' என்பது சிந்திக்க வேண்டுவதாகும். நல்ல தந்தையானவன் எந்த வித உதவியும் காரணமும் எதிர் பார்த்துத் தன்னைச் சார்ந்தவர்களுக்கு அருள் காட்டுதல்

இல்லையே! அதேபோன்று பலமடங்கு பரிவுடைய உலகின் தந்தையும் செய்யக் காண்கின்றோம். அவனும் தன்னையே கதியென அடைந்துள்ள தன் மக்களுக்குத்தான் முதலில் நலம் செய்வனன்றோ! அப்படியே தன்னையே நம்பிச் சரண மடைந்தவர்களுக்கு மட்டுமே அவன் முதலில் அருள் செய்கின்றான். மற்றவர்கள் நிலை பின்னால் வரும். தக்க தொன்றைத் தன் பிள்ளை கேட்டுவிட்டால், அதை எப்படியும் தந்துவிட வேண்டுமென்று தந்தை அவாவுறுதலில் வியப் பில்லை யன்றோ? சில சமயங்களில் தந்தையை நேரே அணுகுவதைக் காட்டிலும் தாய் மூலம் அணுகும்போது அச் செயல் முடிவது எளிதாகின்றதன்றோ? அம்முறைப்படியே பிராட்டியின் புருஷகாரமும் பேசப்படுகின்றது. இப்படியே உலகியலை ஒட்டிக் காணும்போது பல கருத்துகளின் பொருத்தம் தெளிவாய் விளங்கக் காணலாம்.

இறைவனுக்குப் 'பரத்துவம், அந்தரியாமித்துவம், வியூகத்துவம், அவதாரம், அர்ச்சை' என்னும் ஐந்து நிலைகள் உண்டு. நிலை ஐந்து ஆனாலும், பொருள் ஒன்றே. அரசன் ஒருவன், தன் உடன் கூட்டத்தாரால் வழிபாடு செய்யப்படு பவனாய்த் தன் வீறு தோற்றப் பகலோலக்கமிருப்பன்; தன் நாட்டிலுள்ள குணங் குறைகளை அறிவதற்காக இரவிலே பிறர் அறியாதவாறு கறுப்புடையுடுத்து நகர சோதனை செய்து வருவன்; தன் ஆட்சியின் கீழுள்ளவர்களில் குற்றம் செய்த வரைத் தண்டிக்கவும் நல்லோரைக் காக்கவும் தான் செய்ய வேண்டிய செயல்களை ஆராய்வன்; தீய விலங்குகளை அழிக்க வேட்டை ஆடுவன்;களைப்பு நீங்கச் சோலைகளிலே தன் உரிமைச் சுற்றத்தோடு உலாவிவருவன். இப்படி அவன் தன் அரச நீதி (முறை) செலுத்தி வருவது போன்றே, இரு உலகுகளிலும் அரசு செலுத்தும் வானிளவரசான இறைவனும் செய்வான். 'விண் மீதிருப்பாய்' என்றபடி அவன் பரமபதத்தில் தன் தேவியுடன் நித்ய முத்தர் வழிபட ஓலக்கமிருப்பன். 'இவற்றுள் எங்கும் மறைந்துறைவாய்' என்றபடி பரந்த பல பொருள்களுக்கும் தெரியாதபடி அவன் அவற்றுள் உறையும்

பொருளாய் இருந்து அவை செய்யுமவற்றை யெல்லாம் அறி வான். 'கடல் சேர்ப்பாய்' யென்றபடி பாற்கடலில் சேர்ந்து அறிதுயில் புரிந்து உலகத்துயிர்களைக் காக்கும் வழியை— உபாயத்தைச் சிந்தித்துக் கொண்டிருப்பான். 'மண்மீ துழல் வாய்' என்றபடி அவ்வுயிர்களைக் காத்தற் பொருட்டு உலகில் வந்து அவதரித்து அடியவர்க்குப் பகையானவர்களை அழிக்கையாகிற வேட்டையாடுவன். 'மலைமேல் நிற்பாய்' என்றபடி பகை அழித்த களைப்புத் தீரச் சோலை சூழ்ந்த கோயில், திருமலை முதலான இடங்களிலே வாழ்வன். இப்படி இவ்வைந்து வகையாகவும் இறைவன் ஒருவனே விளங்கு வதைக் காணலாம்.

இப்படி எல்லா நிலைகளிலும் அவன் இருப்பினும், 'பின் னுணர் வணங்கும் சோதி' என்றபடி அவதாரங்களுக்கும் பிற் பட்டவர்களும் இழக்காதபடி அமைந்த அர்ச்சாவதாரத்தில் பரத்துவம் முதலான எல்லா நிலைகளிலும் அநுபவிக்கும் எல்லாக் குணங்களும் நிறைந்திருக்கும் (சூத். 158). அத் தகைய திவ்விய தேசங்கள் பல உள்ளன. அவற்றுள் ஒவ் வொன்றிலும் ஒவ்வொரு குணம் பொலிந்து விளங்கும் என்பதும் தெளிவுற எடுத்து விளக்கப்படுகின்றது (சூ. 159 முதல் 186 முடிய).

ஆழ்வார் அடிக்கடி பரோபதேசம் செய்வர். **திரு விருத்தம்** முதல் பாட்டிலேயே, 'அடியேன் செய்யும் விண்ணப்பம் கேட்டருளாய்' என்று சொல்லுகிறவர், 'பொய்நின்ற ஞானம் முதலியவற்றை யாமுறுமைச் செய்ய வேண்டும்' என்று பன்மையில் பேசுகிறார். தனக்கு மட்டும் ஒன்று வேண்டுமென்று கேளாது, தம்மைச் சேர்ந்தவர் யாவர்க்குமாக வேண்டுகின்றார்; பிறர் துன்பங்கண்டு பொறுதவர் ஆகையால், பிறர்க்காகத் தாம் மன்றாடுகின்றார் என்று எடுத்துக் காட்டுவர் **பெரியவாச்சான் பிள்ளை** என்ற உரையாசிரியர். திருவாய்மொழி என்ற நூலின் முதற் பத்து இரண்டாம் திருவாய் மொழியும், ஒவ்வொரு பத்திலும் ஒவ்வொரு திருவாய் மொழியும் பரோபதேசமாக அமைந்

துள்ளன. 'இவர் பெற வேண்டுவதெல்லாம் பெற்று விட்டாரோ! பிறர்க்கு உபதேசம் செய்யத் தொடங்கி விட்டாரே!' என்னும் கேள்வி எழலாம். பிறர் துன்பங்கண்டு பொறுமையும், ஞாலத்தார்க்கு இறைவன்பால் உள்ள தொடர்பை அறிந்துள்ளமையும், மிக்க கிருபையும் ஆகிய இம்மூன்றுமே இவரை உபதேசம் செய்யச் செய்வன.

செல்வம் அழிவிற்குக் காரணமாக இருத்தலைக் கண்டும், பின்னும் அதனையே பெற வேண்டுமென்ற அறியாமையில் மூழ்கி நிற்கும் உலகினர்க்குத் தம் உபதேசத்தாலே இறை பக்தியைத் தோற்றுவிப்பது, தம் சம்பந்தம் அடியாக அவர்களையும் விடாது திருத்தித் தம்மைப்போல இறை அநுபவத்தில் ஈடுபட்டவராக்க வேண்டுமென்கிற ஞானத்தாலாகும். உலகினர்க்கு மட்டுமேயன்றி, ஆழ்வார் இறைவனுக்குமே அடிக்கடி உபதேசம் செய்தலை நாம் காண்கின்றோம். எல்லாம் அறிந்தவனை அவனுக்கு இவர், 'உனக்கொன்று உணர்த்துவன்' (6. 2. 5.) என்று உபதேசம் செய்வது அவன் மாட்டுள்ள அன்பின் மிகுதியாலேயாகும்.

கர்மத்திற்கு உட்பட்டவராய் சாதனம் இன்னது சாத்தியம் இன்னது என்று அறியாதே கலங்கி நிற்கிற உலகினரான சேதனர்க்கு, 'வீடுமின் முற்றவும்' (திரு. 1, 2) என்று தொடங்கி 'சுனைநன் மலரிட்டு நினைமின் நெடியானே' (திரு. 10.5) என்னுமளவும் விடத்தக்கவற்றையும் கொள்ளத் தக்கவற்றையும் உபதேசிப்பர். அன்புக்கு அடியவனுய்ச் சாதன சாத்தியம் இன்னவென்றறியாது கலங்கும் இறைவனுக்குத் 'தன்னைத் தகுதியற்றவன் என்று எண்ணி ஆழ்வார் தன்னை விட்டுவிட்டால் என் செய்வது என்று ஐயங்கொண்டு அலமறும் அளவில் 'உன்னை நான் பிடித்தேன்கொள் சிக்கெனவே!', 'உன்னை நானடைந்தேன் விடுவனே!' என்று சொல்லி, மேலும் அவனுக்குச் சாதன சாத்தியங்கள் அறிவிப்பது, 'செய்யத்தகாதவற்றைச் செய்யாதே' என்பது, 'செய்ய வேண்டுமவற்றைச் செய்' என்பது இப்படிப் பல இடங்களிலும் உபதேசித்தலும், நன்மை தீமைகள் சொல்லு

தலும் ஆழ்வார் செய்தலைக் காணலாம். ஆழ்வாருடைய முதற்சீடர் இறைவரே. இறைவர்பால் நல்ல சீடனுக்குரிய குணங்கள் யாவும் அமையப்பெற்று இருக்கின்றமையை (சூத். 202) தெளிவுறுத்தும். இப்படிப் பரோபதேசம் பலகாலும் நடந்தாலும், உள்ளே இறையநுபவம் நடந்து கொண்டேயிருக்கும். உள்ளே அநுபவம் நடந்துகொண்டே யிருக்கவே, புறத்தே உபதேசமும் நடைபெறுநிற்கும். எனவே, அநுபவ இடையீடு இராது என்பதும் வற்புறுத்தப் படுகின்றது. உபதேசப் பகுதிகளே திருவாய்மொழியின் முக்கியமான பகுதிகள். அவை திருவாய்மொழி 1.2, 2.10, 3.9, 4.10, 5.2, 6 3, 7.10, 8.6, 9.10, 10.5 ஆகும்.

'பயிலுஞ்சுடரொளி', 'நெடுமாற் கடிமை' என்னும் திருவாய் மொழிகள் அடியவர்களைப் பற்றியவை. இவை யல்லாமல், மற்ற இறைவன் தோத்திரமாக அமைந்த திருவாய் மொழிகள் முடிவுபெறு. எனவே, இவை இன்றி யமையாத திருவாய்மொழிகளே என்பது அறியத்தக்கது (சூத். 217). இறைவன்பக்தி, பக்தியின் முதல் நிலை; அடியவர் பக்தி, பத்தியின் முடிந்தநிலை. அதுவே, 'கோதில் அடிமை' என்று பேசப்படுகின்றது. இது வைணவ தத்துவமும் சமயமும் மனிதாபிமானத்தை எவ்வாறு மதித்து வந்தது என்பதை நன்கு விளக்கும்.

# தமிழ் அகப்பொருள் முறையும் உள்ளுறைப் பொருளும்

பத்திநெறியைப் பாடும் தமிழ்நாட்டுப் பத்தர்களின் பாடல்களில் அகப்பொருள் நூற்கருத்துகளை ஒட்டிய பாடல்கள் கலந்து விளங்குவது யாவரும் அறிந்ததே. வைணவ சமயச் சார்பான நூல்களில் அம்முறை சிறப்பாய் வளர்ந்துள்ளமையும், அகப்பொருட்டுறையில் அமைந்த பாடல்களுக்கு அழகுற உள்ளுறைப் பொருளை விரிவுரையாளர்கள் எழுதியுள்ளமையும் தமிழுலகம் அறியும். பத்தர்கள் இறைவனை அநுபவிக்கும் பல வகை முறைகளில் தலைவன் தலைவி முறையும் (நாயக நாயகி பாவம்) ஒன்றாகும். இம்முறை உலகத்துப் பிற நாட்டுச் சமய இலக்கியங்களிலும் காணக்கூடியதே.

வைணவ பரம்பரையில் முதல் ஆசாரியரான நம்மாழ்வார் நூல்கள் நாலிலும் முதலதான திருவிருத்தத்தில் முதற் பாட்டும் கடைசி எட்டுப் பாட்டுகளும் தவிர மற்றவை யாவும் அகப்பொருள் கிளவித் துறையில் அமைந்த பாடல்களே. கடைசியில் தோன்றிய நூலான திருவாய்மொழியிலும் 100 திருவாய்மொழிகளில் 27 திருவாய்மொழிகள் (பதிகங்கள்) அகப்பொருட் பாடல் முறையில் அமைந்துள்ளன. அவற்றில் ஆழ்வார் தாமான தன்மை நீங்கிப் பெண் தன்மை அடைந்து இறைவனைத் தம் தலைவனாகக் கொண்டு அநுபவிக்கின்றார். அவர்க்கு அந்நிலையில் **'பராங்குசநாயகி'** என்று பெயர் வழங்குகின்றார்கள் விரிவுரை

யாளர்கள். அப்பாசுரங்கள் '**தோழி பாசுரம், தாய் பாசுரம், தலைவி பாசுரம்**' என மூன்று வகையாக அமையும். பேச்சு மூன்றுவகையாக இருப்பினும், அநுபவம் ஆழ்வாருடையதே. பல வகையாகப் பிரியினும் அவர் அநுபவத்திற்குக் குறைவு ஒன்றும் நேர்வதில்லை. 'பெருக்காறு பலதலைத்துக் கடலை நோக்குமா போலே' ஆழ்வார் தம் அன்பு பல பிரிவு களாகப் பிரியினும் கடலையே சென்று சேரும் என்று ஆசார்ய ஹிருதய ஆசிரியர் விளக்குகின்றார். (நா. 131)

'இறைவனைப்பற்றிப் பேச வேண்டிய இடத்தில் உலகியற் காமத்தை—காதலைப் பற்றிப் பேசுவது சிறப்பாக இல்லையே!' என்பது சிலர் எழுப்பும் தடை. இதே தடையை நான்காம் திருவாய்மொழியின் தொடக்கத்தில் முதன் முதல் ஆழ்வார் பெண் தன்மை அடைந்து பேசும் பாடல் வரும்போது ஈட்டின் ஆசிரியர் எழுப்பி, விடையும் தருகின்றார். 'இது காமுகர் பேச்சு அன்று; இறைவன் கேட்கத் தக்கவன், நினைக்கத் தக்கவன், தியானம் செய்யத் தக்கவன், பார்க்கத் தக்கவன்' என்று **பிரஹதாரண்ய உபநிடதம்** கூறுவதுபோலக் கொள்ளப்படும் பகவத் காமம்; நல்வினை உள்ள ஒருவனே இப் பேறு பெறுகின்றான்', என்பது அவர் கூறும் விடை.

### அகப்பாடலின் சிறப்பு

அகப்பொருள் நூல்களையே வெறுப்பாரும் உண்டு. திருக்குறள் போன்ற நூலிலும் காமத்துப்பால் அமைந் திருப்பது குறையே எனக் கொள்பவர் சிலர் உண்டு. 'பத்தி யையும் ஞானத்தையும் சொல்லும் நூல்களில் இன்பச்சுவை அடிப்படையில் அமைந்த பாடல் எதற்கு?' என்று ஐய வினா எழுப்புவர் சிலர். அதற்கு மாறாக, 'அகப்பொருள் வெறுக்கத் தக்க பகுதியன்று. என்றைக்கும் நிலைத்துள்ள இயல்புகளை அழகுற இன்பச் சுவைபட எடுத்துச் சொல்லும் பாடல்கள் அவை. அம்முறைக்கு இலக்கணம் வகுத்தமை தமிழின் சிறப்பு', என்பர் மற்றொரு சாரார். திருவள்ளுவர் தம் பொது மறையில் அம்முறையை ஒழுங்குபடுத்தி அமைத்திருக்கும்

தன்மையே அப்பொருளின் ஏற்றத்தினை விளக்குமென்பர் சான்றோர். 'அது தன்னளவில் முடிவது அன்று. கசப்பு மருந்தை உண்ண மாட்டாதார்க்கு வெல்லக் கட்டி பூசி மருந்துண்ணச் செய்வது போலச் சிற்றின்பத்தைக் கூறும் முறையில் பேரின்பத்திற்கு வழிகாட்டுவதே அப்பாடல்களின் நோக்கு', என்று பெரியோர் சிலர் பணிப்பர்.[2] இக் கருத்து **இறையனார் களவியலுரைக்** கருத்தை ஒட்டி அமைகின்றது. சுருக்கமாக 'அகப்பொருள் தமிழுக்கு உயிர்நிலையாகும்; இறையனார் அகப்பொருள் உரையே அதன் உண்மையை அறிவது ஆண்டவனுக்கன்றி மற்றையோருக்கு அரிது எனப் புலப்படுத்துகின்றது',[3] என்ற பேராசிரியர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் அவர்களின் கூற்று இங்கு நினைவுகொள்ளத் தக்கது. மேலும், அகப்பொருள் நூல்கள் எப்படியிருந்த போதிலும், இங்கு ஒப்பற்ற இறைவனே நாயகனாய் வருவதால் இச்சமயப் பாடல்கள் முழுச் சிறப்புப் பெறுகின்றன. இங்கு மக்களை ஏமாற்றி அழைத்துச் செல்லும் நிலைமை எதுவும் இல்லை என்பதும் குறிக்கொள்ளத் தக்க சிறப்பாகும்.

## பெண்ணுதற் சிறப்பு

ஆழ்வார் ஏன் பெண்தன்மை ஏறிட்டுக் கொள்ள வேண்டும் என்றால், அவர் வலிந்து அம்மாற்றம் பெறுதல் இல்லை. அந்நிலை தானாக வந்தடைகின்றது. இறைவனது ஆண்மையும் வடிவழகும் சில குணமும் படுத்தும் பாடு அது. இறைவனுடைய தலைவன்முன் எல்லா உயிர்களும் பெண் தன்மை அடைந்து விடுகின்றன. உயிரின் — சேதனின் — இயல்பு 'அவனுடைமையாம் தன்மை யாதலின்' பெண் தன்மை இயல்பாக வந்துவிடுகின்றது. 'பெண்களுக்கு மோட்ச நிலை இல்லை', என்ற நூற்கருத்து உண்டு; ஆனால், இங்கு ஆழ்வார் பெண் நிலையடைந்து இறைவனை அநுபவித்தலை நாம் காண்கின்றோம். இராமாவதாரத்தில் முனிவர்களாய் இருந்தவர்களே இராமன் அழகில் ஈடுபட்டு அவனை வேண்டிக் கொண்டு, அவன் கண்ணனாய் அவதரித்த போது கோபியர்களாக அவதரித்தார்கள்—அவனைக் கூடி மகிழ்ந்தார்கள் என்பர்.[4]

அது ஏற்றுக் கொள்ளப் படுமானால் ஆழ்வார் அப்போதே பெண்ணிலை யடைந்து இறைவனை அநுபவிப்பது அதனினும் சிறிதேயன்றோ?

## அகப் பாடலும் பத்திப் பாடலும்

திருவாய்மொழியில் ஆழ்வார் பெண்ணிலை அடைந்து பேசும் பாசுரங்கட்கு அமைந்துள்ள உள்ளுறைப்பொருளை யெல்லாம் ஒருசேரத் தொகுத்து விளக்கமுற அமைக்கின்றார் இந்நூலாசிரியர். பாசுரங்களில் வரும் கொங்கை முதலிய உறுப்புகள், தூதுவிடும் பறவை முதலியவை யாவற்றுக்கும் உள்ளுறைப்பொருளை விளக்குதலைக் காண்கின்றோம். தமிழ் அகப்பொருள் இலக்கணத்தோடு இப்பாடல்களில் குறிக்கப் படும் தத்துவம் ஓரளவு ஒத்துள்ளமையும் காணலாம். இம் முறைபற்றிக் குறைவாக நினைப்பவர்க்கு 'அப்படியன்று', என்பதை விளக்குதற்கே ஆசிரியர் இவ்வளவும் எழுதுகின்றார் என்பது தோன்றுகின்றது. இராமாயணத்தில் வரும் பிராட்டி நிலையை ஆழ்வார் அடைந்து பேசுவதாக இவர் எடுத்துக் காட்டுவதும் அதனை வலியுறுத்தும். உலகியற் காமத்திலும் இங்குப் பேசப்படும் பகுதி வேறானது என்பதை அகப்பொருள் இலக்கணத்திற்கு மாறாகப் பராங்குசநாயகி மடலேறுவதாகச் சொல்வதும் காட்டுமெனலாம். அதுபற்றியே பின்னர் எழுந்த **பன்னிரு பாட்டியல்** அதற்கு விதியும் அமைக்கின்றது.[6]

## ஆசிரியர் விளக்கம்

ஆசாரிய ஹ்ருதய ஆசிரியர் கூறும் விளக்கங்களை இனிக் காண்பாம்:

'ஞானத்தில் தம் பேச்சு: பிரேமத்தில் பெண் பேச்சு' என்பது நூற்பா 1,8. பிரேமம்-அன்பு-காதல் மிகும் போது தான் ஆழ்வார் பெண்ணான நிலையில் பேசுகின்றார். நேரிற் கண்டாற்போன்று இறைவனை மனத்தாற்கண்டு அநுப விப்பது **'புணர்ச்சி'** எனப்படும். கண்களால் காண வேண்டு

மென்ற புறஅநுபவம் பெருமை '**பிரிவு**' எனப்படும். அகப் பொருட் பாடல்களிற் பெரும்பாலன, ஆற்ருமை காரணமாக எழுந்தவைகளாகவே உள்ளன. ஒரு திருவாய்மொழி மட்டும் மகிழ்ச்சிப் பேச்சாய் உள்ளது. தாமான தன்மைப் பேச்சின் போதும் பெண் தன்மைப் பேச்சின் போதும் ஆழ்வாரின் மனப்பாங்கு ஒரே தன்மையதாகத்தான் இருக்கின்றது. 'அடியோம் தொடர்ந்து குற்றேவல்' என்பது பெண் பேச்சாகும் போது 'அடிச்சியோம் அடிக்கீழ்க் குற்றேவல்' என்று மாறுகின்றது. எனவே, அப் பேச்சும் ஆழ்வார்க்கு இயல்பான பேச்சே; வந்தேறியன்று என்பது விளங்கும் (நூற்பா. 121).

**அழகிய உருவகம்**

'பெண்ணொருந்தி திருமணம் செய்து கொண்டு தன் நாயகனைச் சேர்வதும் ஓர் ஆண்மா இறைவனை அடைவதும் ஒரே தன்மையன என்பதை உருவகமாகக் காட்கின்ருர் ஆசிரியர். தாய், தந்தை, உடலை வளர்க்கும் உணவு, கைப் பிடிக்கும் கணவன், திருநாண் முதலிய பலவும் ஆங்கு எடுத்துக் காட்டப்படுகின்றன. வித்தை தாய்; பாலும் அமுதுமாய் இருந்து வளர்த்தது திருமால் திருநாமம்; ஆன்மா திருமகள்போல ஆசாரியனுகிய தந்தையால் வளர்க்கப்படுகிறது. வேறொருவருக்கு உரிமை பேசும் நிலை ஏற்படாமல், உலகின் தலைவனும் காப்பவனும் ஆன அழகிய மணவாளப் பெருமாள் நாயகர் ஆவர். அவரை மணம் முடித்தவர் தந்தையாகிய ஆசாரியர். எட்டு இழையும் மூன்று புரியும் கொண்டது மங்கலநாண்; அதைப்போன்றதே 'இறைவனைச் சேர்ந்தது ஆன்மா' என்ற தொடர்பை உணர்த்துகிற எட்டு எழுத்துகளால் ஆய் மூன்று சொற்களாய் இருக்கின்ற பிரணவமாகிய **திருமந்திரம்**. மந்திரம் உணர்ந்த பின்னரே இறைவனோடுள்ள தொடர்பு ஆன்மாவுக்கு வெளியாகின்றது. இவ்வாறு பரமபுருடன் ஆன்மாவைக் கைக்கொண்டபின் திருமணம் முடிந்து எஞ்சிய ஓமம் முடியுமளவும் நாலுநாள் பெண் தன் நாயகனை அணுகலும் அகலுதலும் இன்றி வேறொருவர்க்கு உரியதல்லாத அடிமைத் தன்மைக்குப்

பொருந்த அவன் அநுபவத்திற்குத் தக்கவளாக அமைவள். திருமந்திரத்தில் உள்ள 'ஓம்' என்பது வேறொருவர்க்கு உரிய தல்லாத அடிமைத்தன்மையை உணர்த்தும். ஏற்றுக் கொள்ளப்பட்டு இறைவனை நெருங்கி அவனோடு கலவா விடினும், அகலுதலும் அணுகுதலுமில்லாமல் கைங்கரியத்தை வேண்டுதலை "நாராயணாய" என்பதிலுள்ள சதுர்த்தி—நான்காம் வேற்றுமை—உணர்த்துகின்றது. மணமக்கள் ஒரே படுக்கையில் இருக்கச் செய்தேயும், நெருங்கிப் பழகும் வாய்ப்பின்றிச் சோமன் முதலியவர் நடுவே இருப்பதாகச் சொல்லப்படும் நாலு நாட்கள்போல, அடிமைத் தன்மை அறிதலும் கைங்கரியம் செய்ய வேண்டும் என்ற விருப்பமும் இருப்பதால், இருவர்க்கும் நெருக்கம் உண்டாயிருக்கவும், சேர்ந்து அநுபவிக்க இயலாதவாறு அநுபவ விரோதியான உடம்புடன் கூடியிருக்கும் நாலு நாள்களையும் ஆன்மா ஒருவாறு கழிக்கின்றது.

பெண், பிறந்த வீட்டைத் துறந்து புக்ககம் செல்லுதல் போல, ஆசாரியன் உபதேசித்த திருமந்திரத்தால் ஆன்மா பிறவியை அடைந்தது இங்கேயாகையால், பிறப்பிடமான இவ்வுலகை இறைவன்பாலுண்டான அன்பின் மிகுதியாலே முன்பு தனக்கு ஆதரவாய் இருந்த பல பொருள்களோடும் கைவிடுகின்றது; 'சூழ் விசும்பு' என்னும் திருவாய்மொழியில் சொல்லுகிறபடி அர்ச்சிராதி மார்க்கத்திலே வழியிலுள்ளாரனைவரும் போற்ற நாயகன் அழைத்துச் செல்ல, அவனோடு பின் செல்கின்றது; கணவன் வீடு செல்லும் பெண், அவனூரின் எல்லையை அடைந்தவுடன் அவர்கள் குளிப்பாட்டக் குளிக்குமாறுபோல, அமுத வெள்ளத்தை உடைய விரசை என்ற ஆற்றிலே இப்பாலுள்ள அழுக்கெல்லாம் நீங்க நீராடுகின்றது; குளித்த பெண்ணை நாயகனுடைய உற்றார் உறவினரான மகளிர் அலங்கரிப்பது போன்று, துழாய்மாலை, அஞ்சனத்தின் நீறு, நரனப்பொடி, பீதகவாடை, பல அணி கலன் முதலியவற்றால் மானேய் நோக்கியரான மகளிர் இறைவன் நுகருதற்கேற்றவாறு, அவனை அணி செய்வர்; தம்

ஈடுபாடு தோன்ற அனைவரும் கூடி நின்று அவனைப் போற்றி யுரைப்பர்; சாமரம் பணிமாறி மகிழ்விப்பர்.

மணப்பெண் கணவனின் இல்லத்தை அணுகியவுடன் அங்குள்ள மகளிர் மங்கல விளக்கு முதலியன ஏந்திவந்து வரவேற்பது போல, ஆன்மாவை 'நிதியும் நற்சுண்ணமும் நிறைகுட விளக்கமும் மதிமுக மடந்தையர் ஏந்தினர்' (10-9-10) என்கிறபடியும், 'சதிரிள மங்கையர் தாம்வந்து எதிர்கொள்ள' (நா.திரு. 65) என்கிறபடியும் மங்கலப்பொருள் களுடன் தெய்வ மகளிர் எதிர்கொள்வர். பாராட்டோடு சென்ற பெண் கணவன் இல்லில்புகுமாறுபோல, 'மன்னிய மாதவனோடு வைகுந்தம் புக்கிருப்பார்' (நா. திரு.10) என்கிற படி திருமகள் கேள்வனுனவனுக்கு இன்பந்தருமிடமான ஸ்ரீவைகுந்தத்தை அடைந்து அவனோடே கூடியிருக்கும். பின் கணவன் வீட்டிற்கு வந்தபின் மணமக்களும் மற்றுமுள்ள உறவினர்களும் கூடியிருந்து பெருங்களிச்சி உண்ணுமாறு போல, அடியார் குழாங்களும் அவனுமாக இருக்கிற சேர்த் தியிலே பெருங்களிச்சியாக முழுக்க அநுபவிக்கும்; 'கட்டெ ழில் வானவர்போகம் உண்பரே' (6-6-11) என்கிறபடி நித்திய சூரிகள் அநுபவிக்கிற இன்பத்தை 'அவன் பிரமத் துடன்கூட இணை பிரியாமல் எல்லாஇன்பங்களையும் (கல்யாண குணங்களையும்) அநுபவிக்கின்றான்' என்கிறபடியே அநுபவிக் கும். கணவனோடு கூடுதற்குக் கட்டிலிலே ஏறுமாறு போல, மிகச் சிறப்பாகச் செய்யப்பட்ட அவனது கட்டிலிலே பாத பீடத்திலே அடியிட்டேறி இராமனாய் இருந்து பரதனையும் திருவடியையும் அணைத்துக் கொண்டதும், கண்ணபிரானாய் இருந்து அக்குரூரனை அணைத்துக் கொண்டதும் ஆன கௌத் துப மணிக்கும் அழகுசெய்யும் இறைவனது திருமார்பிலே இறைமையின் அடையாளமான கௌத்துபம்போல இன்பப் பொருளாய் ஒளி செய்வதாய் அணைவது ஆன்மாவாகிய பொருள். அதற்குப் பெண் தன்மையால் உண்டானதாக வரும் பேச்சு, வந்தேறியன்று; பெண்தன்மை இயல்பாக உண்டாவதாகையாலே அதனை உள்ளபடி பெற்ற இவர்க்கு

அதனால் உண்டான பேச்சும் இயல்பான பேச்சே என்பது தேற்றம்.

**மூவகை நிலை:**

பெண் பேச்சாகப் பேசுமிடத்திலும் ஆழ்வாருடைய பேச்சு மூன்று விதமாக அமைந்திருப்பதைக் காண்கின்றோம். ஆழ்வார் தோழியாகவும் தாயாகவும் மகளாகவும் இருந்து பேசுகின்றார். இதன் கருத்து யாது?

தோழியாவாள் தலைவனையும் தலைவியையும் இணைக்கிச் சேர்ப்பவள். திருமந்திரத்தில் முதற்சொல்லான பிரணவத்தால் இறைவனோடு ஆன்மாவுக்குச் சொல்லப்பட்ட வேறொன்றிற்கு உரியதல்லாத அடிமைத்தன்மை முதலான சம்பந்தத்தை அறிதலே அவனோடு ஆன்மா சேருதலுக்கு ஏது. ஆகையால், அந்தச் சம்பந்தஞானம் என்கிற அறிவு நிலை 'தோழி' என்று சொல்லப்படுகின்றது.

தாயாவாள் பெற்று வளர்த்துப் பெண்பிள்ளை பருவமடைந்து தலைவனிடம் கொண்ட அளவற்ற ஈடுபாட்டால் அவனிருந்த இடத்திற்குப் போகவேண்டுமென்று பதறுமளவிலும், அவன் தானே வரக் கண்டிருத்தலொழியப் படிகடந்துபோதல் குலமரபுக்கு ஏற்றதன்று என்று கூறித் தடுத்து நிறுத்துபவள். 'சித்தோபாயம்' என்கிற இறைவனையே உபாயமாகப் பற்றினவர்க்கு அடையப்படு பொருளின் காலதாமதத்திற்குக் காரணம் இல்லாமையால், விரைவாகப் பேற்றைப் பெற வேண்டும் என்ற பதற்றம் தோன்றும். பேற்றின் சிறப்பைக் கண்டறிந்ததாலே முறைப்படி—படிப்படியாக—அவனை அடைதல் வேண்டுமென்றிராமல், மிக்கு நடக்கிற அளவில் இது பிரபன்ன குல மரபுக்குச் சேராது; தலைவனானவன் தானே வந்து ஆட்கொள்ளப் பார்த்திருக்க வேண்டும் என்று துடிப்பை அடக்கப் பார்க்கின்ற 'உபாயத் துணிவு' ஆகிற அறிவுநிலையே தாயார் என்று பெயர்பெறும். இந்நிலையைத் திருமந்திரத்தில் நடுச்சொல் உணர்த்தும்.

தலைமகளாவாள் இயற்கையில் தலைவனைக் கூடி அவன் சிறப்புகளிலே ஈடுபட்டுக் குலமரபுகளையும் நோக்காது அவனை அடைந்தல்லது ஆற்றேன் என்னும் பதற்றத்தை உடையவள். தலைவனும் சரணடையத் தகுந்தவனுமான இறைவனுக்குத் திருமந்திரத்தின் கடைசிச் சொல்லால் சொல்லப்படுவதான அவன் இயல்பு வடிவு குணம் செல்வங்களால் வந்த சிறப்பு இவற்றை எண்ணி, அவனை அநுபவித்தலில் தாமதத்தைப் பொறுமையாலே, "அவன் ஒருவனே உபாயமானவன்" என்கிற துணிவையும் மீறி அவனை அடைந்து அநுபவித்தல்லது தரியாதபடி நடக்கிற 'பேற்றில் பதற்றம்' ஆகிற அறிவு நிலையை மகள் என்று பெயரிட்டு வழங்குவர்.

இம் மூன்றுவித நிலைமைகளும் எக்காலத்தும் ஆழ்வார் தம் உள்ளத்திலே உண்டு. அதனால்தான் இவை 'அறிவு நிலை' (பிரஜ்ஞா அவஸ்தை) என்று சுட்டப்பெறுகின்றன. திருவாய்மொழி நூலில் தோழியின் பேச்சாய் உள்ளவை மூன்று திருவாய் மொழிகள்; அவை: தீர்ப்பாரை யாமினி (4-6), 'துவளில் மாமணி' (6-5), கருமாணிக்க மலை' (8-9) என்பனவாம்,

**தீர்ப்பாரை யாமினி :**

இயற்கையாய்த் தலைமகனைக் கூடிப்பின் அவனைப் பிரிதலால் வந்த ஆற்றாமையாலே மயக்க மடைந்த தலைமகளின் நிலையைக் கண்டு தாய்மார் கலங்கி 'இவளது நோய் இன்னது' என்பதும், 'அதன் காரணம் இன்னது' என்பதும், 'அதனைப் போக்கும்விதம் இன்னது' என்பதும் அறியாதே ஒரு கட்டுவிச்சியின் சொற் கேட்டு, அவள் நோய் நீங்குதற்காக வெறியாடத் தொடங்கினர். அப்போது தலைமகளின் இயல்பை நன்கு அறியும் அவள் உயிர்த் தோழி, 'வேறு ஒருவர்க்கும் உரியளல்லாத இவட்குப் பிறர் தொடர்பு கூறுவதை இவள் ஆற்றாள். நாம் இதனை விலக்காவிடில் இவளை இழக்க நேரும்' என்று எண்ணி, அப்பொழுதுதான் தான் ஆராய்ந்து அறிந்தவள் போன்று இவள் நோவையும்

அதற்குக் காரணத்தையும் அவர்கட்குச் சொல்லித் தக்க மருந்துகளையும் விதித்து, 'அங்கோரி கள்ளும் இறைச்சியும் தூவேல்மின்' (4-6-3) என்று இவை முதலியவற்றால் வெறி விலக்கிப் பேசும் பாடல்கள் இதில் அமைந்துள்ளன.

**இதன் உள்ளுறைப்பொருள்:** பேற்றினை அடைய உள்ளம் பதற்றம் கொண்ட நிலையிலும் அது கிட்டாமையால் ஆற்றாமை மிக்கது; அது காரணமாக அவனையே உபாயமாகக் கொண்ட உபாயத்தில் துணிவு கலங்கியது; தர்மம் மேற்கொண்டு ஒழுகுதலாலே இந்நோயைப் போக்கலாம் என்று அந்தரியாமியான இறைவனுக்குச் செய்யும் கருமங்களைச் செய்தலில் ஈடுபாடு தோன்றிற்று. அப்போது சம்பந்த ஞானமானது—அவனுடன் உள்ள தொடர்பு பற்றிய அறிவானது—'இந்நோய் கருமத்தின் பலனாக உண்டானதன்று; தற்செயலாக ஏற்பட்ட இறைவனது அருள் நோக்கின் பயனால் உண்டானது. சிறந்த திருமேனியோடு கூடியவனை இறைவனை அநுபவிக்கையாலே வந்த ஈடுபாட்டின் விளைவு இது. ஆகையால், கருமம் புரிதல் இதனைப் போக்கும் வழியன்று. வேறொருவர்க் குரியதல்லாத அடிமைத்தன்மையாகிய ஆன்மாவின் இயல்புக்கு அது முரணான செயலாகும்; எனவே, அதனியல்பை அழிப்பதாகும். இவ்வாறு பிற உபாயங்களை மேற்கொள்ளுதலை விலக்குவதே இதன் உட்கோள் ஆகும்.

**துவளில் மாமணி :**

**திருத்தொலை வில்லிமங்கலம்** என்னும் திருப்பதியிலே மிக்க ஈடுபாடு கொண்டுள்ள ஒரு தலைமகளை அந்நிலைமையினின்று மீட்கப் பார்க்கின்றனர் அவள் தாய்மார். தோழியானவள் அவர்களை நோக்கி, 'இவளை நீரினி அன்னைமீர்! உமக்கு ஆசையில்லை விடுமினோ!' என்கிறாள். ''நீங்களன்றோ திருத்தொலை வில்லிமங்கலத்தில் இவளைக் கொண்டுபோய் இவட்கு இந்த ஈடுபாட்டை விளைத்தீர்கள்? இனி அடையப்பட்ட பொருளில் ஈடுபட்டவளான இவளை உங்களால் மீட்க இயலாது. ஆகையால், நீங்கள் கொண்ட ஆசையை விடுங்கள்!' என்று அறிவுறுத்துகின்றாள்.

**இதன் உள்ளுறைப் பொருள் :**

அர்ச்சாவதாரமான எளிய பொருளே உபாயமாகை யால், எப்போதும் அதிலே நோக்காயிருக்கும் உபாயத்தைப் பற்றிய துணிவு, அப்பொருளின் சிறப்பை உணர்தலால் வந்த ஈடுபாட்டின் விளைவான பதற்றம் உபாயத்திலே பொருந்துகிறதோ—சேர்கின்றதோ—என்ற வேண்டாத ஐயப்பாட்டாலே அதைத் தடுக்க முயல்கிறது. அச்சமயம், 'சம்பந்தஞானம்—அடிமைப் பொருளின்பால் உண்டான இவ்வீடுபாடு—தலைவனின் உகப்புக்குத் தக்கதே; உபாயப் பகுதியில் சேராது; அடையப்பட்ட பொருளின் சிறப்புக் காரணமாய் வந்தது; இதனைத் தடுத்தலும் இயலாது; தடுக்கக்கூடுமென நினைத்திருக்கின்ற உரிமையே எண்ணம் நெருங்கிய அவனுடைமை யாதலாகின்ற (பாரதந்திரிய மாகிற) இயல்புக்கு மாறானது; ஆகையாலே விடத்தக்கது' என்று தன் தொடர்பை நீக்கும்படி சொல்லியது இத்திருவாய் மொழியின் பொருளாகும்.

**கருமாணிக்க மலை :**

தலைமகளின் பருவத்தைக் கண்ட உறவினர், சுயம்வரத் திற்கு அரசர்களையெல்லாம் திரட்டுகைக்கு மணமுரசு அறை விக்கின்றனர். திருப்புலியூர் என்னும் திவ்விய தேசத்து இறைவனோடே இவளுக்குச் சேர்க்கை உண்டாய்விட்டது என்பதை இவள் வடிவிலும் பேச்சிலும் உண்டான வேறு பாட்டாலே அறிகின்றாள் உயிர்த்தோழி. அவள், 'இம் முரசொலி பெண்பிள்ளை செவியிற் படுமாகில், 'மானிட வர்க்கென்று பேச்சுப்படில் வாழாத்' தன்மையளாயிருக்கின்ற இவள், உயிர்தரியாள்; ஆகையால், அதனைத் தடுக்க வேண்டும்' எனக் கருதுகிறாள்; உறவினர்களிடம், 'இவளுக்குத் திருப்புலியூர் நாயனாரோடே சேர்க்கை உண்டாயிற்றுப்போல இருக்கின்றது; அவனுடைய குணம் செயல்களையே எப் பொழுதும் சொல்லிச் சொல்லிப் புலற்றுகின்றாள்; எனவே, நீங்கள் செய்வது முறையற்ற செயல்' என்று தெரிவிக்

கின்றாள். அவர்கள், 'அப்படியானால் இவளுக்குத் தக்க உறுப்பழகு, அணியழகு முதலான நாயக இலட்சணங்கள் அவனுக்கு உண்டோ?' என்று கேட்கின்றார்கள். 'அவை களில் எக்குறைவும் இல்லை; அவற்றுள் ஒன்றும் இல்லையே யானாலும், இவளிடம் அவனுக்கன்றிப் பிறர்க்குரியள் அல்லாதவளானமைக்கு அடையாளம் தெளிவாகக் காண லாம். ஆன பின்பு உங்கள் முயற்சியை விடுங்கள்' என்று நடுவுநிலையளாய் நின்று அறம் சொல்லுபவளாய் வேறு மணம் விலக்கினமை சொல்லப் பெறுகின்றது இத் திருவாய் மொழியில். அறத்தொடு நின்ற நிலையே இங்குப் பேசப் படுவது.

**உள்ளுறைப்பொருள் :**

அடையப்படுகின்ற பொருளின்பால் பதற்றம் கொண்ட நிலையை—பேற்றின் கண் பதற்ற நிலையின் முதிர்வை—உபாயத் துணிவு நிலையிலே நின்று கண்ட பிறகு, அந்நிலை இறைவனையன்றி வேறு பிறர்க்குத் தகுதியற்றதான தன்மையை அறியாதே, 'மற்றையோர்க்கும் தகுதியோ' என்ற ஆராய்ச்சி எழுந்தது. அவ்வளவில் சம்பந்த ஞானம் 'இதற்கு வேறு பிறர்க்கு அடிமை என்ற பேச்சுக்கூட இதன் இயல்பை அழிப்பதாகும். தலைவனுடைய இனிமையாலும் மற்றும் இயல்பாகவே அவனுக்கு அடிமையாம் தன்மையா லும் இவ்வான்மா அவனுக்கே அடிமை' என்று அறுதியிடப் படுவது இத்திருவாய்மொழியின் பொருள்.

ஆக, தோழியானவள் வெறிவிலக்கியும், ஆசையறுத்தும், அறத்தொடு நின்றும், 'இவ்வான்மா பிறர்க்கு அடிமைப் பட்டதுமன்று; தனக்குத்தானே உரியதுமன்று; இறைவன் ஒருவனுக்கே அடிமை' என்று சொன்ன மூன்று திருவாய் மொழிகளும் சம்பந்த ஞானநிலையில் பேச்சு என்பது தெளிவு.

**தாய் பேச்சான திருவாய்மொழிகள்—7 :**

'ஆடியாடி' (2-4) என்ற திருவாய்மொழியில் அடியார்கள் குழாங்களை உடன்கூடப் பெருமையால் வந்த வருத்தத்தாலே

கொழுகொம்பை இழந்த தளிர்போலத் தலைமகள் வாடுகின்றாள்.

**'பாலனாய் ஏழுலகில்'** (4-2) என்ற திருவாய்மொழியில் **'கண்ணனது அடியில் சூடிய துழாய்க்கு மெலியும்'** என்கிறபடி கடந்துபோனவதை ஆசைப்பட்டு மெலிகின்றாள்.

**'மண்ணையிருந்து துழாவி'** (4-4) யிலே 'என் பெண்கொடி ஏறிய பித்தே' (4-4-6) என்னும்படி அவனுக்கு ஒப்பான பொருள்களையும் உறவான பொருள்களையும் அவனாக எண்ணி, அவற்றைக் கிட்டும்படி பித்தேறிப் பேசுகின்றாள்.

**'கடல் ஞாலத்'திலே** (5-6) **'ஈசன் வந்தேறக்கொலோ''** (5-6-1) என்று ஆற்றாமையாலே **'அவனைப்போலப் பாவித்தலை—அநுகரித்தலைத்—தெரிந்து கொள்ளாதே இறைவன் இவள்மீது ஆவேசித்தானோ!'** என்று கருதும்படி அவனாகப் பேசுகின்றாள்.

**'மாலுக்கு வையத்திலே'** (6-6) **'கற்புடையாட்டி இழந்தது கட்டே'** (6-6-10) என்னும்படி இறைவனை அடையாத துன்பத்தாலே கட்டடங்க இழக்கிறாள். **'உண்ணும் சோற்றிலே'** (6-7) **'இன்றெனக்கு உதவாதகன்ற'** (6-7-6) என்று தன்னைப் பிரிந்து துன்புறுகின்ற தாய், 'அந்த ஆபத்தான நிலையில் எனக்கு உதவாதே போனாள்' என்னும்படி அகல்கின்றாள்.

**'கங்குலும் பகலிலே'** (7-2) **'சந்தித்து உன் சரணம் சார்வதே வலித்த தையல்'** (7-2-5) என்னும்படி 'அவனை அடைந்து அவன் முன்னிலையில் முடிய வேண்டும்' என்ற உறுதி பூண்டவளாகின்றாள்.

பத்தியால் வழிபடுவோர்க்குப் பரபத்தி தசையிலுண்டாம் வாட்டம், மெலிதல் முதலியவைபோலத் தலைமகளின் இந்நிலைமை உபாயத்தில் கொண்டு சேர்க்குமோ என்று தாயானவள் அஞ்சி, இறைவனையும் வினவ வந்தவர்களையும் பார்த்து 'வாடாநின்றாள்; மெலியா நின்றாள்' என்றாற்போன்று முறையிடுகின்றாள்; 'உம்முடைய கிருபை தவிர இவள்பக்கல்

உள்ள ஒன்றும் ஏதுவன்று; ஆனபின்பு இவளை இப்படித் துடிக்க விட்டிருத்தல் உம்முடைய கிருபைக்கும் காக்கும் தன்மைக்கும் தக்கதாமோ? என்று கூப்பிடுகின்ற ஏழு திருவாய்மொழிகளிலும் உபாயத் துணிவு அல்லது உறுதிநிலை தோன்றும். ஆகையால், தாய்ப் பேச்சான ஏழு திருவாய் மொழிகளும் உபாயத் துணிவு நிலையில் பேச்சு என்பது தெளிவு.

**தலைமகள் தன்மையில் ஆழ்வார் பேசும் திருவாய்மொழி-17 :**

தலைமகள் **'அஞ்சிறைய மடநாரை'** (1-4), **'வைகல் பூங்கழி'** (6-1), **'பொன்னுல காளீர்'** (6-8), **'எங்கானல்'** (9-7) என்கிற நான்கு திருவாய்மொழிகளிலும் அவன் வருகின்றவரையிலும் பொறுத்திருக்கப் பொறுமல் பதறித் தூது விடுகின்றுள்.

**'வாயுந் திரையுகளி'**லே (2-1) **'ஆற்றாமை சொல்லி அழுவோமை'** என்று எல்லாப் பொருள்களும் இறைவனைப் பிரிந்த காரணத்தினுல் துன்புறுகின்றனவாகக் கருதி அவற்றைத் தன்னேடொத்த துன்ப முடையனவாகக் கொண்டு அழுகிருள்.

**'ஏருளு மிறை யோர'**னில் (4—8) **'மாருளன் கவராத மணி மாமை குறைவிலம்'** என்று அவன் விரும்பாதவற்றை வேண்டாவென்று வெறுத்துரைக்கிருள்.

**'மாசறு சோதி'**யிலே (5—3) **'நாடும் இரைக்கவே யாம் மடலூர்தும்'** என்று **'உலகம் முழுவதும் கலக்கமடையும்படி மடல் ஊர்வேன்!'** என்று சொல்கிருள்.

**'ஊரெல்லாம் துஞ்சி'**யிலே (5—4) காதல்நோயும் இரவாகிய கற்பமும் முன்னரே உடன்பாடு செய்து கொண்டாற் போன்று சூழநின்று பொருதலாலே தப்ப வழியற்றவளாகின்றுள்.

'எங்ஙனேயோ'வில் (5—5) சோதி வெள்ளத்தினுள்ளே எழுவதோர் உருவம் விருப்பும் வெறுப்பும் சமமாம்படி உரு வெளிப்பாடாய் வெளிப்படும் நிலையளாகின்றுள்.

'மானேய் நோக்கிலே' (5—9) திருவல்ல வாழுறையும் தலைவரைக்கூடும் நாளை வேண்டுகின்றுள்.

'மின்னிடை மடவாரிலே' (6—2) அவன் காலம்தாழ்த்து வரவே, 'போகு நம்பீ' என்று காதலால் ஊடலை மேற் கொள்கிறுள்.

'வெள்ளைச் சுரி சங்கிலே' (7—3) 'என் நெஞ்சும் அவன் பின்போய் விட்டது! ஆகையால், ஒரு துணையுமற்றேன்! என்று உசாத்துணையுமற்றவளாகின்றுள்.

'ஏழையர் ஆவி'யிலே (7—7) கண்ணனது உருவமும் உறுப்புகளும் உருவெளிப்பாட்டாலே இவளை ஒரு சேர நலிகின்றன.

'நங்கள் வரிவளை'யிலே (8—2) 'காலம்பல சென்றும் காண்பது ஆணை உங்களோடு எங்களிடையில்லை' என்று தன்மை சொல்கிற தாய்மார் தோழிமார்களையும் தாண்டிச் செல்லும் நிலைபெறுகின்றுள்.

'இன்னுயிர்ச் சேவ'விலே (9—5) போலியான பொருள் களைக் கண்டு நொந்து முடிதலில் துணிந்தவளாகின்றுள்.

'மல்லிகைகமழ் தென்ற'வில் (9—9) மாலைக் காலத்தில் கண்ணன் பசுக்களின் முற்கொழுந்தில் வரக் காணுமையால், பகையாய் நின்று துன்புறுத்தும் பொருள்களாலே நலிவு படுகின்றுள்.

'வேய்மரு தோளிணை'யிலே (10—3) விடியற்காலையிலே கண்ணன் பசுமேய்க்கப் போனுனைத் தவருக நினைத்துக் கொண்டு அவன் முகத்தைப் பார்த்து, 'நீ பசுமேய்க்கப் போனுல் நலியக் கூடிய பகைப் பொருள்கள் நலியாநின்றன' என்று கூப்பீடு செய்கின்றுள். இவ்வாறு பதினேழு திருவாய்

மொழிகளிலும் பேற்றில் பதற்றம் தோன்றும். இதனால், தலைமகள் பேச்சான பதினேழு திருவாய் மொழிகளும் பேற்றில் பதற்ற நிலையில் பேசுமிடம் என்பது தெளிவாம்.

இவ்வாறு மூன்று திருவாய் மொழிகளில் பிறர்க்கு உரிய தல்லாத அடிமைத் தன்மையும், ஏழில் உபாயத்தில் துணிவும், பதினேழு திருவாய் மொழிகளில் பேற்றில் பதற்றமும் ஆகிய மூன்று நிலைப் பேச்சுகள் அமைந்துள்ளன (சூ, 134). இவை யாவும் தோழி, தாய், மகள் பேச்சாய் உள்ளன.

ஆழ்வார் பாசுரங்களில் சில இடங்களில் 'தோழிமார்' என்றும், 'அன்னையர்' என்றும் பன்மைக் குறிப்புகள் உள்ளன. 'தோழி' என்பது சம்பந்த ஞானத்தையும், 'தாய்' என்பது உபாயத்தில் துணிவையுமாயின், இவ்வாறு பன்மையாகக் கூறுவது ஏன் என்னும் கேள்வி எழுவது இயல்பே. ஆன்மா வோடு இறைவனுக்கு உள்ள சம்பந்தம் 'ரக்ஷகத்துவம், சேஷித்துவம், காரணத்துவம்,சரீரத்துவம்' எனப்பல உண்டு. ஆகையால், அந்த அந்தச் சம்பந்தங்களின் ஞானம் குறித்த பன்மைக் கேற்பத் தோழியரும் பலராயினர். உபாயமாக இருக்கின்றவனை இறைவனுடைய தன்மையும் வாற்சல்யம், சுவாமித்துவம், சௌசீல்யம், சௌலப்பியம், ஞானம், சக்தி, கிருபை முதலானபல. அத்தன்மைகள் பற்றித் துணிவு வரும். அத்தன்மைகளின் பன்மைக்கேற்பத் தாய்மாரும் பலராகப் பேசப்படுவது பொருத்தமேயாகும்.

இதைப்போன்ற தலைமகளுடைய பருவங்கள், 'பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம் பெண்' என ஏழு ஆம். பேற்றில் பதற்றம் கொள்ளும் ஏழு நிலைமைகளை—பத்தியின் முதல்நிலை தொடங்கிக் கடைசி நிலை முடியவுமுள்ள நிலை வகைகளின் ஏழு பிரிவுகளை—அவ் வேழு பருவமாகக் கொள்ளலாம். அவையாவன:

ஒரு பொருளைப் பார்த்தவுடன் பிறக்கும் விருப்பம் (அபிலாஷை), அப் பொருளைப்பற்றிய சிந்தனை, அது இடை யறாது நடைபெறுகின்ற தொடர்ந்த நினைப்பு (அநுஸ்ம்ருதி),

அப்பொருளை எப்படியும் பெற்று நுகர வேண்டுமென்கின்ற இச்சை, வேறொன்றாலும் மாற்ற முடியாதபடி முதிர்கின்ற சுவை, 'அப்பொருளைப் பெறின் இன்பம், பிரியின் துன்பம்' என்கிற பரபக்தி, பிரிந்த அளவில் உயிர் பிரியும் தன்மையதான பரமபத்தி என இவை ஏழு நிலைமைகளாம் (சூ. 136).

அருளிச்செயலில் தலைமகளின் உடல் உறுப்புகளாக எடுத்துச் சிறப்பித்துக் கூறும் ஒவ்வொன்றுக்கும் உட்கருத்து உண்டு. அவையாவன :

| | |
|---|---|
| 1. கூந்தல் பரப்பை ஆதாரமாகக் கொண்டு பெண்களை **மயில்** என்பர். | இது ஞான மலர்ச்சியைச் சொல்கின்றது. |
| 2. வெண்மையான ஒளியுடைமையால் நெற்றியைப் **பிறை** என்பர். | இது பிறர்க்கு அடிமையாகாமை என்ற தூய்மையைக் குறிக்கும். |
| 3. வளைவையுடைமையால் புருவத்தை **வில்** என்பர். | இது அகமும் புறமும் ஆய காரணங்களை அடக்கி ஆளுதலாகிற தாந்தியைக் குறிக்கும். |
| 4. இலக்கை நோக்கிச் செல்லும் தன்மையால் கண்ணை **அம்பு** என்பர். | இது தனக்காக வகுத்த இறைவனையே நோக்கும் ஞானத்தைச் சொல்வது. |
| 5. ஆனந்தத்தைத் தரும் தன்மையால் வெண்முறுவலை **முத்து** என்பர். ('முத்' என்ற வடசொல் 'ஆனந்தம்' என்ற பொருள் தரும்) | இது அப்பொருளை அநுபவித்தால் உணதாகும் ஆனந்தத்தைச் சொல்லும். |

| | |
|---|---|
| 6. செந்நிறமுடைமையால் இதழைப் பவளம் என்பர். | இது அவனைப் பற்றுதலில் உண்டான அநுராகத்தைச் (ராகம்— ஆசை— சிவப்பு) சொல்லும். |
| 7. நன்கு வளர்ந்த முலையைச் செப்பு என்பர். | இது தலைவனது அநுபவத்திற்கு ஏற்ற பக்குவமான பக்தியைக் காட்டும். |
| 8. நுண்மை உடைமையால் இடையை மின் என்பர். | இது ஞான நிலைச் சிறப்புகளுக் கெல்லாம் ஆதாரமான ஆன்மாவின் அணுத் தன்மையைக் காட்டும். |
| 9. அழகிய அல்குலைத் தேர் என்பர். | இது ஆன்மாவின் இன்பத்தைக் காட்டும். |
| 10. நடை அழகால் அன்னம் என்பர். | இது யாவரும் போற்றும்படி தன்னியல்புக்கு ஏற்ப நடக்கிற கதியைக் காட்டும். |

ஆக, ஞானமலர்ச்சி, தூய்மை முதலியவைகட்கு இருப்பிடமாய் உள்ளேயிருக்கின்ற ஆன்ம சொரூபத்தின் வகுப்பு இத்தகையது என்பதாம். ஆன்மா ஒன்றே தோழி, தாய், மகள் என்ற மூவர் தன்மையிலும் மூன்று நிலைகள் அடைவதால், பேற்றின் பதற்றமாகச் சொன்ன மகளின் ஆன்ம சொரூபத்

தைப் பொருளாகக்கொண்டு இங்குப் பேசப் படுகின்றது. அது பொருத்தமேயாகும்.

**தோழி, தாய், தலைமகள் என்கிற மூன்று நிலைகளின் செயல் வேறுபாடு:**

தாய் தோழி மீது, 'இவளைக் கொண்டு போய்ச் செய்த சூழ்ச்சியை யார்க்கு எடுத்துரைப்பேன்!' என்று பழி கூறுவது,

தோழி தாய்மார்மேல், 'அவளைத் தொலை வில்லிமங்கலம் அழைத்துக் கொண்டு போனவர்கள் நீங்களே!' என்று பழி கூறுவது,

ஆக இப்படி ஒருவர் மீது ஒருவர் பழி கூறிக்கொள்வதும்;

'தோழிமார் என்னை இணக்கி விளையாட அழைக்க நான் போந்தேன்', என்றும்,

'தாய்மார் என்னை அழைத்துக்கொண்டு போக நான் போந்தேன்' என்றும்,

இருவர்மேலும் பழி உண்டு என்று தலைவி இசைந்து காட்டி மேலெழுத்திடுவதும் ஆகிய இரண்டும் முதல்நிலை.

'பலர் காண வீட்டின் முன்னின்முய்!' என்று தோழி தலைமகளைக் கடிவது; 'இவளை விட்டு விடுங்கள்' என்று தாய் மார்க்குக் கூறுவதுபோலத் தலைமகளுக்குத் துணை செய்வது ஆக இப்படி இருபடைகளுக்கும் தன்னை அநுகூலமாக்கிக் கொள்வதும்;

'ஆரென்னை ஆராய்வார்'—என்ற பாசுரத்தால் தாய்மார் தோழிமார் இருவகையரோடும் தலைமகட்கு உடன்பாடு இருப்பதாகக் காட்டப்படுவதும்;

ஆகிய இரண்டும் இரண்டாவது நிலை.

அவ்விருவகையரோடும் தனக்கு ஒரு தொடர்புமில்லை என்று இருவகையரையும் தலைமகள் உதறிவிடுகையும்;

'இவள் என்றும் அவன் பெயரே கூறி நைந்து இரங்கும்' என்று தலைவியின் ஈடுபாட்டைத் தோழி கொண்டாடுவதும், 'இவள் திருக்கோளூர்க்கே நடந்தாள்' என்று திருத்தாயர் கொண்டாடுவதும் ஆகிற உதறுதலும் கொண்டாடுதலும் மூன்றாவது நிலை.

இதில் 'பழி, மேலெழுந்து' என்ற இரண்டாலும் சம்பந்த ஞானமும் உபாயத்தில் துணிவும் ஆகிய இவை இரண்டும், பேற்றில் பதற்றத்திற்குக் காரணமாக இருப்பது முதல்நிலை: இருபடைமெய்க்காட்டு, உடன்பாடு என்கிற இரண்டாலும் சம்பந்தஞானம் மற்ற இரண்டிற்கும் துணைபுரிகிறது; பேற்றில் பதற்றத்திற்குத் தடைகளான சம்பந்தஞானமும், உபாயத்தில் துணிவும் இடவேறுபாட்டால் அதற்கு உறவாக அமைவது இடைநிலை. உதறுதல், கொண்டாட்டம் என்கிற இரண்டாலும் பேற்றில் பதற்றமானது சம்பந்த ஞானத்தையும் உபாயத்தில் துணிவையும் மீறுதலும், அங்ஙனம் மீறுவது கொண்டாடத்தக்கதாதலும் ஆகிய இது இறுதிநிலை. இவ்வாறு சம்பந்தஞானம், உபாயத்தில் துணிவு, பேற்றில் பதற்றம் ஆகிய மூன்று நிலைகளின் செயல் விசேடங்கள் நடைபெறும்.

தாயாரான உபாயத்துணிவு நிலையில் ஏதிலராகச் சொல்வது சித்தோபாய நிலைக்குப் பகையான சாத்யஉபாய நிலையினரை; உறவாகச் சொல்லுவது அநுகூலரான சித்த உபாய நிலையினரை. தலைமகளான பேற்றின் பதற்றமாகிற நிலையில் நெருங்கிய பகைவராகச் சொல்லுவது, இறைவனையே உபாயமாகப்பற்றி நின்று பின்னும் பதறுதல் பாரதந்திரிய நிலைக்குச் சேராது என விலக்கும் சித்த சாதன பரரை. 'என் துணையான தோழிமார்' என்று தன் துணையாகச் சொல்லுவது தன்னைப்போலே அவனுடைய உபேயத் தன்மையில் உடன்பட்டிருக்கும் சாத்தியபரரை.

'நாணி இனியோர் கருமமில்லை நாலபலாரும் அறிந் தொழிந்தார்' (நா. தி. 12:2) என்கிற பாட்டில் நாலயலார்', ஐ

என்பது, 'கருமம், ஞானம், பத்தி, பிரபத்தி' ஆகிய நான்கு உபாயங்களிலும் ஊன்றி நிற்பவர்களையாகும்.

'அயற்சேரி யிர்கள்' (7-3-2) என்பது, அர்ச்சாவதாரத்தில் ஈடுபாடின்றி வேறான அந்தர்யாமித்வத் தன்மையில் ஊன்றியிருப்பவர்களையாகும்.

'கீழையது மேலையது வடக்கிலது' என்று குறிக்கப்படும் 'கருமம், ஞானம், பத்தி' என்கிற வேறு உபாயங்களானவை சித்த சாதநபரர்க்கு—இறைவனையே உபாயம் என்று கொள்பவர்க்குப் புறப்புறமாம்; அதாவது புறப்பகைகளாம். பிரபத்தியும் புறம் (அயல்) எனப்பட்டது முன்னர். பிரபத்தி நெறியில்,தான் அவனைப் பற்றுதலும் அவன் தன்னைப் பற்றிக் கொள்ளுதலும் என்னும் இருநிலை உண்டு. அவற்றில் அவனைப் பற்றிக்கொள்ளுதலாகிற தன்பற்று, 'அகப்புறம்' அல்லது 'உட்பகை' ஆகும் என்பதாம்.

'ஊரார்' என்பது ஆன்ம அநுபவம் விரும்பும் கேவலரை.

'நாட்டார்' என்பது இவ்வுலகச் செல்வங்களை விரும்புபவர்களை.

'உலகர்' என்பது சுவர்க்கம் முதலான மேலுலகச் செல்வங்களை விரும்புகின்ற தன்மையைப்புள்ளவர்களை.

'இறுகவிறப்பு' என்பது குவிந்த நிலைமையதாயிருக்கின்ற மோட்சமாகும். இதனை அநுபவிக்கும்போதும் இந்தப் பிரகிருதி மண்டலத்திற்கு அப்பாலான பரமாகாசத்திலேயிருந்து அநுபவிக்க வேண்டும். ஆகையால், இதுவும் இறந்தால் போய்வாழும் தேசத்தை ஒக்கும். எனவே, இதனைத் 'தனிஊர்' என்றார் மேல்.

'சிறுசுளகு' என்பது, பெருமணலையும் நுண்மணலையும் பிரித்தெடுக்கும் கருவி. எனவே, இது உடல் ஆன்மா ஆகிய இரண்டையும் பகுத்தறிதற்குத் துணையான அவைவையைக் குறிக்கும்.

**'சீரார் சுளகு'** என்பது, நெல்லையும் மணலையும் பிரித்தெடுப்பது இது ஆன்மா வேறு; பரமான்மா வேறு என்று பகுத்தறிவதற்குத் துணையான அளவை. மற்றைத் தெய்வங்களும் ஆன்மாக்கள் பிரிவில் அடங்குவனவே

**'மாலை:** பொருள்கள் தெளிறவு அறிந்து கொள்ள இயலாது மயங்கும்படி செய்யும் காலம்; இது பொருள்களைத் தெளிவுறத் தெரிந்து கொள்ளற் கியலாததான ராஜச ஞானத்தைக் குறிக்கும்.

**கங்குல்:** ஒன்றும் தோன்றாதபடியும் மாறுபாடாகத் தோன்றும் படியும் உள்ள காலம். பொருளை அறிவியாதது மட்டுமின்றி, மாறுபாடாகக் கொள்ளுதற்கும் உறுப்பான தாமத ஞானத்தை இது காட்டும்.

**காலை:** பொருள்களை உள்ளவாறு தோற்றமளிக்கச் செய்யும் காலம். அதனால், பொருள்களை உள்ளவாறு அறிவதற்குறுப்பான சாத்துவிக ஞானத்தை இது குறிக்கும்.

**பகல்:** ஐயந் திரிபுகட்கு இடமின்றிப் பொருள்களைத் தெளிவுற விளக்கிக் காட்டும் காலம். இறைவனைத் தெளிவாக அறிதற்குறுப்பான சுத்த சத்துவ ஞானம் இவ்வாறு கூறப்படும்.

**நிலா முற்றம்:** மாடத்தின் உயரத்தில் ஏறி எல்லாவற்றையும் காணுதற்கு உறுப்பான இடம். இறைவன் தொடர்புடைய கண்ணபுரத்தையும் பிறர் காணுதற்கு அமைந்தது. இது எல்லை நிலமான புருஷார்த்த ஞானத்தைக் குறிக்கும்.

**கலை, வளை:** இறைவனை அநுபவிப்பதற்குப் பகையான 'யான், எனது' என்னும் செருக்குகள்; இவ்விரண்டையும் களைந்த நிலையிலேதான் அவன் அநுபவம் கிட்டுகின்றது. சில இடங்களில் 'வளைபூரிப்ப அவனைக் காணுதல்' என்வரும். அவ்விடங்களில் 'நான் அவனுக்கு அடிமை'; 'என்னுடைய திருரங்கர்' என வரும் 'நான், எனது' என்பவைகளைச்

சொல்லுவதாகக் கொள்ளவேண்டும். இவை விடத்தக்கன வல்ல.

**பட்டம், சூடகம்:** 'பட்டம்' என்பது, முதலில் ஆன்மா வினை அங்கீகரித்த ஆசாரியன் உண்டாக்கும் பெயர், வடிவம், இறைவழிபாடு முதலான ஆன்ம அலங்காரங்கள்; 'சூடகம்' என்பது பின்னர் ஆசாரியனுடைய பெருமையை உணர்த்தி, அவ்விறைவன் உண்டாக்கும் 'ஆன்மா இறைவனுக்கு அடிமை என்ற அறிவு' முதலான ஆன்ம அலங்காரங்கள்.

**பந்து. சிற்றில்:** பந்து நூலாற் கட்டப்பட்டு விளையாட்டுக் கருவியாவது; விழுதல் எழுதல் முதலிய இயற்புகளையுடையது அதே போன்று, முக்குணங்களடியாக வரும் வினையால் அமைந்த உடல் இறைவன் விளையாட்டுக்கு உறுப்பாவது கருமத்திற்கு ஏற்ப மேலுலகம் கீழுலகம் போவது மீளுவது ஆகும்படி இறைவன் தன் நினைவால் தூண்டத் தாழ விழுதல், உயரப்போதல், சக்கரத்தின் சுழற்சி போலச் சுழலுதல், போனதில் மீண்டும் போய் வந்து உழலுதல் செய்கின்ற ஆன்மாவோடு உண்டான தொடர்பாலே விழுதல் எழுதல் முதலிய இயல்புகளோடு கூடியது 'சிற்றில்' என்பதும் இன்பத்திற்குரிய இடத்தைக் குறிக்கும்.

**கழல். தூதை:** கழல் ஐந்தாக இருந்து இன்ப விளையாட்டுக்கு உறுப்பாவது. இஃது இன்ப அனுபவத்திற்குரிய ஐந்து பொறிகளைக் குறிக்கும். 'தூதை' சோறடுதற்கேற்ற கருவி. இது இந்திரியங்களின் வேறான மற்ற இன்பக் கருவிகளைக் குறிக்கின்ற ஒன்று.

பாவை, குழமணன் — இவை விளையாட்டுக் கருவி வகைகள்.

| | |
|---|---|
| **யாழ்**, தென்றல், மதியம், அடிசில், சாந்தம் | இவை ஐந்தும் முறையே ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றம் என்ற ஐம்புல இன்பப் பொருள்களைக் குறிக்கும். |

**பூண்**, அகில் — இவையிரண்டும் மேலே குறித்த வற்றிலேயே 'ஒளி, நாற்றம்' என்ற இருவகை இன்பப் பொருள் பற்றிய பிரிவினவாம்.

இவ்வின்ப நுகர்ச்சிக்குரிய பொருள்களும், இன்பத்திற்குக் கருவியான பொருள்களும், விளையாட்டுக் கருவியான பொருள்களும் யாவும் இறைவன் தன்னுடைய போகத்திற்கு விரோதிகளென்று விடுவித்தால் விடுபட்டும், சுவைகுறைந்தனவாயும், இறைவனிடத்தினின்றும் அகற்றுபவைகளாயும், தன் தொடர்பு சேர்த்துப் பார்க்கும்போது விடத்தக்கனவாயும், இறைவனோடு தொடர்புபடுத்தி நோக்கும்போது கொள்ளத்தக்கனவாயும், அவனுறவின்போது அநுகூலங்களாயும் அவனின்றிக் காணும்போது துன்பம் விளைவிப்பனவாயும் சொல்லப்படுதல் அருளிச் செயலிலும் காணலாம்.

**இறைவன்பால் தூது விடப்படும் பறவைகளுக்கு உள்ளுறை:** ஆன்மாவை இறைவனோடு சேர்க்கின்றவர்களான குரு முதலானவர்களையே பறவைகள் என்று கூறுவர். விரைவில் அவனை அடைவதற்கு ஞானமும் அனுட்டானமும் (ஒழுக்கமும்) வேண்டும். அவையே 'சிறகுகள்' என்று சொல்லப்படுகின்றன. சேர்ப்பவர்கள் குருக்கள், பிரமசாரிகள், புத்திரர்கள், சீடர்கள் என்ற நான்கு நிலைகளில் வைத்துப் பேசப்படுவார்கள். பறவைகளுள் அன்னமாகப் பேசப்படுபவர்கள் இன்னார் இன்னார் என்று கூறுகையில் கீழ்க்காணும் பொதுத் தன்மைகளை அறியலாம்.

| | அன்னத்தின் செயல் | உள்ளுறையான ஆசாரியன் செயல் |
|---|---|---|
| 1. | பாலும் நீரும் பகுத்தறியும். | சாரமுள்ளதும் சாரமில்லதும் அறிவர். |
| 2. | இறைவன் அன்னமாய் அறநூலுரைத்தான். | கேட்பவர்கட்கு நூல்களை உரைப்பர். |

| | | |
|---|---|---|
| 3. | சேற்று நிலத்தில் பொருந்தாது. | 'வன்சேற்று அள்ளல்' என்கிற இவ்வுலக வாழ்வில் பொருந்தார். |
| 4. | மகளிர் நடையைப் பின்பற்றி அவ்வாறே நடக்குமென்று கூறுவர். | அன்னம்போன்ற நடையழகுடைய பிராட்டியின் 'வேறு பிறர்க்குரியதல்லாத அடிமைத் தன்மை' முதலானவும் புருஷ்காரமாதலும் ஆகிய ஒழுக்கத்தைப் பின்பற்றுவர். |
| 5. | தாமரையிலை குடையாகவும், முற்றிய பழுத்த செந்நெற்பயிரின் அசைவு கவரியாகவும், சங்கின் முழக்கம் வெற்றிப் பெருமுழக்கமாகவும், வண்டுகளின் இன்னிசை பாட்டாகவும் கொண்டு மானச சரசிலுள்ள தாமரையை இருப்பிடமாகக் கொண்டிருக்கும் அன்னம். | தாமரை இலை போன்ற இறைவன் திருமேனியை, உலகத் துன்பங்களாய சூரியஒளி தம்மைத் தாக்காதபடி நிழலாக உடையர்; பக்குவமான ஞானியரால் பணி செய்யப் படுவர்; தூய பெரியோர் களால் போற்றப்படுவார். எப்போதும் ஆசாரியனின் இணைத்தாமரையடிகளை நெஞ்சிற் கொள்ளும் சீடர்களின் உள்ளத்தாமரையைத் தங்கள் இருப்பிடமாகக் கொள்ளுவர். |
| 6. | விதிப்படி மணந்து இடரில்லாமலும் அந்தரம் சிறிதுமின்றியும் மிக இன்பம் பொருந்த குடிச்சீர்மை | சாத்திர முறைப்படி இல்லறத்தில் இருந்து, உலகியல் தீமைகள் தட்டாதபடியும், சிறிதும் இடையீடு இன்றி |

| | |
|---|---|
| யுடன் இருப்பன அன்னங்கள். | மேலும் மேலும் இன்பம் பெருகும்படியும் மனைவி மக்களுடன் அமர்ந்து பகவத் அநுபவம் செய்வர். |

இவ்வாறு இருப்பவர் **செல்வநம்பி, பெரியாழ்வார்,** முற்றத் துறந்த துறவிகள் போன்ற **நாதமுனி, ஆளவந்தார்** முதலானவர்கள். அன்னோர்பால் இத்தகைய குண வொற்றுமை உள்ளமையால், இது மிகப் பொருத்தமேயாம்.

| வண்டு, தும்பி | உள்ளுறை |
|---|---|
| 1. இவை மலரில் சென்று தேனுண்ணும்; பிற இடத்தும் செல்லும். | தமக்கு என்று ஏற்படாத பொருள்களை இன்பமென்று மருளார் (இது வேற்றுமை) |
| 2. தேன் தவிர மற்றொன்றை விரும்பாமையாலே **''மது விரதம்''** என்றும் பெயர் பெறும். | உளங்கனிந்த அடியவர் உள்ளத்துள் ஊறிய தேனுன இறைவனை அநுபவிப்பதையே விரதமாகக் கொண்டவர். |
| 3. தூய தேனுண்ட வாய் கொண்டது. | இறை இன்ப அநுபவத்தால் தூய இனிதான வாய் மொழி பேசுவர். |
| 4. கூந்தலில் வைத்த வகுள மலரின் சாரத்தை உண்ணும். | வகுளமாலை தரித்த ஆழ்வாரின் பாடல்களாகிய சாரத்தை ஏற்று, அதன் வழியாக இன்பம் அநுபவிப்பர். |
| 5. தேனுண்டு தெதென என்று இசை பாடும்; சுழலும். | இறையின்பம் அடியவர் இன்பம் இவற்றை நுகர்ந்த |

| | | |
|---|---|---|
| | | செருக்குக்குப் போக்கு வீடாக ஆளத்தி வைப்பர். (யாழினிசை வேதத்தியலை வாயாரச் சொல்லிக் கொண்டிருப்பர் என்பர் பெரியோர் சிலர்.) |
| 6. | காலத்திற்கேற்ற பண்களை இவை பாடும். | அல்லும் பகலும் இறைவன் குணங்களில் ஈடுபட்டவராய்ப் பல பண்களைத் தலைமை பெறும்படி பாடுவர். |
| 7. | மிகவும் நெருக்கமுடையதும் புகமுடியாததுமான இடங்களிலும் வண்டுகள் தடையின்றிச் சென்று புகும். | பிற தேவர்களும் புகுதற்கரிய பலர் நெருக்கிக் கொண்டுள்ள இடங்களிலும் 'கதவைத்திற' என்று வேண்டிக்கொண்டு எளிதில் உரிமையோடு புகுவர். |
| 8. | தன்னை ஒத்த கருநிறக் கூந்தலிலே வண்டு சென்று சங்கையின்றிப் படியும். | இறைவன் பக்கலிலும் அடியவர் பக்கலிலும் கூச்சமின்றிச் சென்று நிற்பர். |
| 9. | தூது விட்ட தலைவியின் ஆசையையும் வேட்கையையும் அவனுக்கு அறிவித்து, அவனுக்கு முன்னம் அவன் வரவை அறிவிக்க விரைந்து வந்து, தம் வரவால் இவள்பால், பிறந்த செவ்வியை நுகர்ந்து, அங்குத் தாம் நுகர்ந்த இன்பத்தை இவளுக்கு வெளியிட்டு ஆறுதலளிக்கும். | அதே செயலை ஆசாரியர்களும் செய்வார்கள். |

| | | |
|---|---|---|
| 10. | 'கொங்கு உண் வண்டே கரியாக வந்தான்' என்கிற படி அவன் வண்டு சாட்சியாக வந்ததாகப் பேசப் படும். | சாரத்தை அறிபவர்களான ஸ்ரீ வைஷ்ணவர்களை முன்னிட்டு இறைவன் உயிர்களை ஏற்றுக் கொள்ளுவான். |

இறைவன் தெய்வ வண்டு (9-9-1) என்று பேசப் பெறுவன். அவனை அடையச் செய்பவர்களான இறைவன் குணங்களை அநுபவித்த ஆனந்தத்தால் ஆடிக்கொண்டும் பாடிக்கொண்டுமிருக்கும் நாரதர், உலோக சாரங்க முனிகளாலே தாங்கப் பெற்றமையால் **முனிவாகனர்** எனப்பெறும் **திருப்பாணாழ்வார்**, திருவாய்மொழியின் இசையை இனிமையாகப் பாடிக் கொண்டிருக்கும் அரையர்கள் போல்வாரை மேற் காட்டிய குண ஒப்புமையால் 'வண்டுகள்' என்றும் 'தும்பிகள்' என்றும் சொல்லுவர் அருளிச் செயலிலே.

**கிளி, பூவை :**

| | | |
|---|---|---|
| 1. | கிளிகள் வலையில் அகப்படும். | மாதரார் கண்ணாகிய வலையுள் அகப்படாது இறைவனின் தாமரைக் கண்களின் அகவலையில் அகப்படுவர். |
| 2. | வளர்ப்பவர் கையில் அமரும். | விருப்பத்தோடு வளர்க்கும் ஆசாரியர்க்கு அன்பராவர். |
| 3. | வளர்ப்பவர் ஊட்டும் தயிர், நெய், பால், அமுது உண்ணும், | காலத்திற்கேற்பவும் தகுதிக் கேற்பவும் தாரக போஷக போக்கியங்களாக |

| | |
|---|---|
| | ஆசாரியர்கள் அநுபவிக்கும் பொருட் சிறப்புகளை (பகவத் குணாதிகளை) அநுபவிப்பர். |
| 4. சொல்லியதையே சொல்லும் கிளிப் பிள்ளைகள். | ஆசாரியார்களாகிய முன்னோர் மொழிந்த முறை தப்பாமல் தாமும் பேசும் தன்மையர் இவர்கள். |
| 5. 'போற்றி இரந்தேன்'(6-1-6) என்பது போன்று அன்பு தோன்றச் சொன்ன நிலையிலும், சிறிது வருத்தந் தோற்ற உரைத்த நிலையிலும், 'உன்னைத் துரப்பன் அவன் வரக் கூவாயேல்' என்று கண்டித்துச்சொன்ன நிலையிலும் உகந்திருப்பது கிளி இயல்பு. | ஆசாரியன் ஆதரவாகப் பேசிய நிலையிலும், இன்னாதாகப் பேசிய நிலையிலும், வெஞ்சொற் கூறிய நிலையிலும் 'ஆசாரியன் செயல் எதுவாயினும் ஏற்று கொள்ளத் தக்கது' என்று உகப்பர். |
| 6. 'திரு நாமத்தைச் சொல்' என்று தன் கிளிக்குச் சொல்லத் தொடங்கி, அது இயலாது போகவே, 'முன் கற்பித்த நாமத்தைச் சொல்' என்ன, அது அதனைப்பார்டக் கேட்டு'வளர்த்ததனால்பயன் பெற்றேன்' என்று கிளியை வணங்கினாள் என வருகின்றது. | ஆசாரியர்களும் கைகூப்பி வணங்கும்படி சீடர்களான இவர்கள் பாடவல்லவர். |

| | | |
|---|---|---|
| 7. | மயில்கள் ஆலுதலும் அழைத்தலும் செய்யும். | 'அரங்கா' என்று ஆலித்தலும் செய்வர். |
| 8. | குயில் வேறொன்றின் கூட்டிலே ஒதுங்கி வளரும். | 'தேவு மற்றறியேன்' என்றுஆசாரியன் ஈடுபாட்டிலும் அடியவர் அன்பிலும் ஒதுங்கி வளர்பவர். |

இத்தகைய இயல்புடையவரான தென்குருகூர் நம்பிக்கு அன்பரான மதுர கவிகள், தொண்டரடிப் பொடியார், உடையவருக்கு உரிமைப் பட்டவரான கூரத்தாழ்வான், ஆண்டான், எம்பார், அருளாளப் பெருமாள் எம்பெருமானார் போன்றோரைக் கிளி பூவை மயில் குயில் என்று சொல்லுதலுண்டு.

**நாரை, கொக்கு :**

| | | |
|---|---|---|
| 1. | குற்றமற்ற வெள்ளைத் தூவிகளை உடையது குருகு. | உள்ளும் புறமும் ஒத்த தூய்மை உடையவர். |
| 2. | அலைகளுக்குச் சலியாத இயல்புடையன நாரைகள். | இறைவன்பால் ஒன்றிய உள்ளத்தால் பிறவியாம் கடல் அலைகளுக்கு இடையாதவர். |
| 3. | தன்வாயால் இரை எடுத்து உண்பிக்க உண்ணும் தன் பிள்ளைக்கு, வாய்க்கு அடங்கும் இரை தேடியிடும் கொக்கு, | சீடர்களின் தகுதிக்கொத்ததாக இறைவனைப் பற்றியவற்றைச் சாத்திரங்களிலே தேடி ஆராய்ந்து உதவுவர். |

| | |
|---|---|
| 4. நாள்தோறும் பூங்கழிகளில் தம் இனத்தோடு போய் மேய்வன குருகினங்கள். | எப்பொழுதும் காலட்சேபம் செய்யுமிடங்கட்குத் தாங்களே சென்று தங்களைப் பிரிய இயலாத சீடர்களுடன் கூட இறைவன் குணங்களை அநுபவிப்பர். |
| 5. 'நாரைகளே! நும் கால்களை நுமரோடுசேர்ந்து என் தலை மீது வையுங்கள்' என்றும், 'கைம்மாறுகப் பைங்கானம் ஈதெல்லாம் உமக்கேயாகத் தருவன்' என்றும் பேசப் பெறுதல் உண்டு. | சீடர்களால் நன்றி உணர்வால் தலைமீதும் தோள்மீதும் தாங்கிக் கொள்ளப் பெறுவர்; உடல் பொருள் ஆவி முதலான யாவற்றையும் அவர்கள் அன்போடு கொடுக்க ஏற்றுக் கொள்வார்கள். |

'நல்ல பதத்து மனைவாழ்வையும் இன்பம்தரும் செல்வத்தையும் அரசாட்சியையும் வேண்டேன்', என்று அரங்கன் அடியிணை தங்கும் தனிப்பெரும் பித்தரான **குலசேகரர்** ஆசாரிய நிலையினரான நம் முதலிகள் போல்வாரை இக்குண ஒப்புமையால் நாரை கொக்கு என்று சொல்லுதல் உண்டு.

தூது அனுப்பப்படும் மேகம் என்பது யாரை? முதலாழ்வார்கள், திருமழிசை ஆழ்வார், திருமங்கை மன்னன், எம்பெருமானர் போல்வாரையாம். ஒப்புமைகளாவன :

**மேகம்**

| | |
|---|---|
| 1. மேகம் பொழிதற்கேற்ற காலங்களில் கடலிற் புகுந்து நீரைப் பருகும். | நாடோறும் திருமால் கண்வளர்கின்ற கடலிலே புகுந்து திரு |

மகள் கேள்வனை அவனது குணக் கடலைத் தம் மனத்திலே கொள்ளுவர்.

2. மேகம் திருமாலின் திருமேனியை ஒக்கும் நிறத்தது.

கார்வண்ணனை இறைவனை உள்ளத்துக் கொண்டிருத்தலால் அவன் நிறமே நிழலிட்டுத் தோன்றும்படி நிறத்தில் அவனோடு ஒப்புடையர்.

3. மேகம் மழைபொழிந்து உயிர்களைக் காப்பதற்காக விண்ணெங்கும் உலவித் திரியும்.

உலகிற் பிறந்த உயிர்களைக் காத்தற் பொருட்டும் நல்வழி காட்டுதற்காகவும் எங்கும் சுற்றித் திரிவர்.

4. மழையாலே குளங்களை நிறைக்கும்.

ஞானமாகிற மடுவைத் தாங்கள் பொழிகின்ற இறைக்குணங்களாகின்ற நீராலே நிறைப்பர்.

5. தீங்கின்றி நாடெல்லாம் வாழ மழை பொழிந்து முத்துகளாகிய நிதியையும் சொரியும்.

கேடு சிறிதும் பற்றாது அனைவரும் வாழும்படி இறைகுணமாகிய மணிகளைப் பொழிவர்.

| | | |
|---|---|---|
| 6. | தான் பொழிந்ததை நினையாது இன்னமும் மிகுதியாகச் செய்ய இயலவில்லையே என்று மேகம் நாணமுறும். | எக்காலமும் பொருட் சிறப்புகளை எடுத்துரைத்தாலும் அதை நினையாது இன்னும் உதவ இயலவில்லையே என்று நாணமுறுவர். |
| 7. | உதவாதபோது உடம்பு வெளுத்து ஒளிந்து கொள்ளும். | உபதேசம் செய்யாத காலத்து உடம்பு வெளுத்து வெளித் தோன்றமாட்டார்கள். |
| 8. | தனக்கென்று காரியம் செய்யாது பிறர் நலம் கண்டு உவந்து அந்த வளமையைப் பெரும் பேறுகக் கொள்ளும். | உதவும்போது பெறுபவர் மலர்ச்சி கண்டு உவக்கும் இன்ப உள்ளத்தினர். |

இவ்வாறான குண ஒற்றுமையால் அன்பு கூருமடியவரான முதலாழ்வார், உருவின வாளை உறையிலிடாது இறைவனது பரத்துவத்தை வலியுறுத்தும் திருமழிசைப் பிரான், மேகம் ஒத்து அருள்புரியும் திருமங்கை மன்னன், குணந்திகழ் கொண்டலான எம்பெருமானார் போல்வாரை மேகம் என்று சொல்லுவர்.

பகுதி : இரண்டு

# திருவாய் மொழியில் காணும் தத்துவக் கருத்துக்கள்

## 1. இறைவன் குணங்கள்:

திருவாய் மொழியின் ஒவ்வொரு பத்திலும் ஒவ்வொரு குணம் சிறப்பாக எடுத்துரைக்கப் பட்டுள்ளது. முதல்பத்தில் **பரத்துவம்** கூறப்பட்டுள்ளது. இறைவன் எல்லாவற்றையும் விடமேலானவன் என்பது பொருள். அந்த மேன்மை வெளிப் படும்படி சித்து, அசித்து என்னும் இரண்டிற்கும் மூன்று விதக் காரணமாய் அவன் உளன் எனினும், எல்லாப் பொருள்களிலும் பரவி நின்று, அவற்றின் குறைபாடுகள் தன்னைப் பாதிக்காதபடி இருப்பவன். அவனது பரவும் தன்மை ஆகாயம் போன்று அல்லாமல், அக்குணம் நிறம் பெறும்படியாக அவன் இரண்டு உலகிலும் தன் கட்டளைப் படியாவும் நடக்கும்படி செய்யும் ஈசன்; இவ் வேற்றத்தைக் கண்டு யாவும் அஞ்சி விலகாதவாறு யாரிடமும் மிக்க கருணையுடையவன். (பரமகாருணிகன்); அதனால், யாவரும் தன்னைச் சரணடையும்படி நிற்கும் தன்மையன்; தன் அருளாற் செய்யும் உபாயத்தை எத்தகைய வர்க்கும் தன் பகைவர்க்குங் கூட ஆக்கவல்ல சர்வ சத்தி யோடு கூடியவன்(வரம்பிலாற்றலுடையவன்); அந்தச் சக்தி யாலே நிலையானதாகக் கற்பித்துக் கொள்ளப்பட்ட பத்தினி, பரிஜனம் முதலானவைகளை உடையனாகையால் அவன் சத்தியகாமன். இன்பத்திலேயே ஈடுபட்டிருந்து விடாது, உலகைப் பிரளயம் முதலிய ஆபத்துகளில், ஒன்றையும் எதிர்பாராது உதவிக் காப்பவன். ஆபத்துக்குத் துணையான வனாதலால், அதற்கேற்றவாறு தான் மேற்கொள்ளும் விக்கிரகங்களுக்கெல்லாம் மூலமானவனாய், ஒப்பற்ற விக்கிரக வடிவமாய்த் தோன்றி அடியவர்களின் துன் பத்தைப் போக்கும் இயல்பினன்: இவை முறையே பத்துப்

யத்திலும் கூறப்படும் முக்கியக் குணங்களாம். மற்றும் பல இயல்புகளும் ஆங்காங்கே சொல்லப்படும். அவை:

1 பல அவதாரங்கள் எடுத்து வெளிவரும் இயல்பினன்; பிழைகளைப் பொறுக்கும் தன்மையன்; தகுதியில்லை என்று யாரையும் விட்டுவிடாது எல்லாருடனும் கலக்கும் சீல குணத்தன்; அடியவர் எது தரினும் ஏற்றுக் கொள்ளும் நிறையுடையவன்; பிறவி அறுக்கும் இனிய மருந்தானவன்; நீர்புரை வண்ணன்; (உயிர்கட்கு ஏற்பத் தன்னை அமைத்துக் கொள்ளும் இயல்பினன்). தன் இன்பத்தை ஏற்கத் தக்க அளவு சிறிது சிறிதாகத் தருபவன்; பரமபத்திக்கும் பரிகணனைக்கும் ஒக்க முகம் காட்டுபவன்.

2 எல்லாப் பலன்களையும் அளிக்க வல்லவன்; உலகுகள் தெய்வங்கள் யாவற்றிற்கும் எல்லா வகையான காரணமும் ஆனவன்; ஆழியில் உள்ள அனந்தனில் அறிதுயில் புரிபவன்; திருமகள் கேள்வனும் தன்மையன்.

3 எல்லாவற்றிற்கும் ஆன்மாவாய் உள்ளவன்; செய்ய தாமரைக் கண்ணன்; அமரர்குலமுதல்; நெஞ்சினுல் நினைப்பவர்க்கு நினைத்தவாறே வந்து தோன்றும் அர்ச்சாவதாரமாய் இருப்பவன்; பிறர்க்கு உதவுவதற்காகவே—வழியைத் தருவதற்காகவே—என்றும் நின்று கொண்டிருப்பவன்.

4 திரிவிக்கிரமன்; குறட்கோலப் பிரான்; மூன்றடி மண்ணை இரந்த கள்வன். திருவேங்கடத்தில் நிற்பவன்; 'அகலகில்லேன்!' என்று அலர்மேல் மங்கையுறை மார்பன்.

5 அகற்றமாய வல்லைம்புலன் ஈந்தவன்; நலிவான் சுமடு தந்தவன்; தன் மகிழ்ச்சிக்காக விரும்பி ஆழ்வாரை இவ்வுலகில் வைத்தவன்.

6 ஆத்ம லாபத்தால் அதீவ விளங்கிப் பணைத்தவன்; சீதள குணங்களால் பிரீதி வளர்ந்து தித்திக்க உள்ளே உறைந்து கண்டு கொண்டிருந்து ஆழ்வாரை இன்புறுத்தியவன்.

7 அமுதமளித்தவன்; தயரதன் பெற்றவன்; கோவலன்; வானேறுங்கதிக்கு நிழல் தடங்களாக்கினவன்; வழித் துணையானவன்; விண்ணுலகம் தர விரைபவன்; ஆக்கையில் சபலன்; வானே தரக் கருத்தின்கண் பெரியவன்; தனி நின்ற சுதந்திரன்; உயிருறவுடையவன்; கடல் போன்ற ஆதாரத்தோடு வந்து பேரவா குளப்படியாம் படிதாபங்களை எரிக்கும் இயல்பினன்.

**2. ஆழ்வார் பெற்ற நிலை:**

1 இறைவன் இவர்க்கு மயர்வற மதிநலம்—அஞ்ஞானத்தைப் போக்கிப் பத்தியாக வடிவெடுத்த ஞானம்—கொடுத்து இவர் தம் உள்ளத்தில் புகுந்து, இவர் பண்ணிய பாவமான வினைகளைப் போக்கித் தன்னை மறவாதபடி இவரது திருவுள்ளத்திலே நிலையாய் இருந்தான். அதனால், இவர் தூய அமுதமான அவனைப் பருகிப் பருகித் தத்துவ ஞானத்தை (இறைவனைப் பற்றிய ஞானத்தை) உடையவரானார். அவ்வனுபவம் தனியிருந்து அனுபவிக்க ஒன்றாதபடியிருந்ததால், மற்றவர்களையும் திருத்தி, அதை அனுபவிக்க அவர்களையும் தம்மோடு சேர்த்துக் கொள்ளுவதற்காக அவருக்கு உபதேசிக்கத் தொடங்கினார்.

2 தாம் பெற்ற ஞானத்தின் பலனான மோட்சத்தை இவர் தேடி வாட, அவன் எம்மா வீட்டைத்தர, இவர், அவன் தனக்கேயாக என்னைக் கொள்ள வேண்டும்; அவன் செம்மா பாதபதுமம் என் தலை சேர்த்துவதே மோட்சம்' என்று உறுதி செய்தார்.

3 மோட்சத்திற்குப் பலன் அவனை அனுபவித்தலும், அவனுக்குக் கைங்கரியம் செய்தலும் ஆகும். முதலில் அனுபவித்தார். ஆனால் முழுமையாக அனுபவிக்க முடியாமைக்குக் காரணம் அவனுடைய அளவிட முடியாமை என்பதை அவன் காட்டிக் கொடுக்கவே, ஆறுதல் பெற்றார். பின்,

'ஒழிவில் காலமெல் லாம்உட னாய்மன்னி
வழுவி லாஅடி மைசெய்ய' (3.3)

வேண்டுமென்று ஆர்வமுற்றார்; அவன் எங்கும் நிறைந்துள்ள

மையைப் புகழ்ந்தார். மனம் மொழி மெய் மூன்றுலும் களிப்புற்றிடும்படி பிரீதி மிக்கவரானார். அப்பிரீதி மிக்குத் தனக்கு அடையத் தக்கவர், இறைவனின் அடியவருக்கு அடியவர் என்னும் நிலை பெற்றார். அந்நிலையால், ஒவ்வொரு கரணமும் மற்றொரு கரணத்தின் செயலை அடையும்படி அவனை அனுபவிப்பதில் பெருவிடாயை உடையரானார். 'மானிடம் பாடாது இறைவனையே பாடும் கவியான்' என்று கூறும் நிலை பெற்றார். எவ்விதக் குறைகளுமின்றி இறை யனுபவமான ஆனந்தக் கடலிலே மூழ்கினவனவரானார் ஆழ்வார்.

4 இவர் தம் விருப்பத்திற் கேற்பக்கடந்தகால நிகழ்ச்சி களையும் சமகாலமாக்கி இறைவன் அனுபவிக்க அனுபவித் தார்; அவன் தம்பால் காட்டிய ஈடுபாட்டைக் கண்டு அவன் பால் காதல் மிக்கவரானார்; அவன் சிறிது விலகி நிற்க, பித்தேறியவரானார். 'நான் காணுமாறு வருக! அல்லது என்னைக் கூவிக் கொள்க' என வேண்ட, அவன் தன்னைக் காட்டினன். அவன் அடியைச் சேர்ந்ததாக மனத்தால் ஒரு பேறு பெற்றார். உறுதிப் பொருளைப் பெற்றதற்குப் பலனாக வேறு தெய்வங்களிடம் பற்றின்மையும், ஆன்மாவிலும் ஆன் மாவைச் சேர்ந்தவற்றிலும் பற்றின்மையும் உற்றார். உலக வாழ்வு வாழ்தலிலும், செல்வத்திலும், ஆத்ம அனுபவத் திலுங்கூடப் பற்றற்ற தன்மை உடையவரானார் ஆழ்வார்.

5 இவர் பெற்ற வைராக்கியத்திற்குப்பலன் பரமாத்மா வினிடம் பிறந்த அளவற்ற அன்பானது நெஞ்சை முடிக்கும்படியாய்க் கழிய மிக்கதோர் காதல் என்று பக்கத்துள்ளவர்களும் பேசும்படி எல்லை கடந்தது. இறை வன் செய்த அற்புதச் செயல்களையெல்லாம் தாமே செய்த தாகப் பேசும் நிலை பெற்றார். அவனை ஒழிய ஒரு கணமும் ஆற்றமாட்டாதவரானார். பொருளின் இன்ப மிகுதியால் வந்த ஈடுபாட்டால், உயிரும் மனமுமின்றி உடலும் சிதிலமாம் படியானார்; மெலிந்தார். அவனைப் பற்றிய நினைவு நெஞ்சில் புகுந்து உயிரை உருக்கி உண்ணும்படி அளவற்ற அன்பு வளர்ந்தது. இவ்வாறு

பகவத் பத்தியும் அடியவர் இணக்கமும் பெற்றவரானார் ஆழ்வார்.

6. முன் பிறந்த காதல் மிகுதி காரணமாக இவர் வேறு உபாயங்களில் செல்லாத நிலையரானார். (இதற்குக் காரணம் வேறு உபாயங்களை அறியாமையும் அவற்றைக் கடைப் பிடிக்கும் ஆற்றல் இல்லாமையும் அல்ல. உண்மை உணர் தலினாலும் அந்நிலை ஏற்படலாம். ஆழ்வார்க்கு அதுவும் காரணமன்று.) அத்தகையவருக்கு, இறைவன் தன் அடியை உபாயமாகக் காட்டிக் கொடுத்தான். அத்திருவடி களையே உபாயமாகக் கொண்டு, மாறுபடாத ஒரு நோக்க முடையரானார்; தம் கருத்தைத் தூது மூலம் இறைவனுக்கு அறிவுறுத்தினார்.

அவன் தாழ்ந்து வந்தான். வந்தபோது அவனுடன் ஊடல் கொண்டு, பின் அவன் வடிவழகில் ஈடுபட்டு, அவனோடு பொருந்தினார். முன்னர் தனித்திருந்து அவனை அனுபவிக்க வேண்டுமென்று பிரபத்தி செய்தமைக்காக அப் பேறு பெற்று அனுபவித்தார். மற்ற எல்லா உபாயங் களையும் கைவிட்டுச் சித்தோபாயம் மேற்கொள்ளுதலை ஒரு தரமேனும் செய்ய வேண்டுமென்று நினைத்தார். எனவே புராணங்களில் கூறப்பட்டனவும், பழமையோர் நடை முறையிற் காட்டியவையும் ஆன, தாய் தந்தை முதலாகவும், மணி பொன் முதலாகவும், கர்ம அனுட்டானங்கள் முதலாக வும், கூறப்படுகின்ற அறிவுடையவையும், அறிவற்றவையு மான எல்லாப் பேறுகளாகவும், உபாயங்களாகவும் உள்ள போலிகளையெல்லாம் கைவிட்டுப் பரமபதம் உட்பட அவன் அடியவர்க்குப் பரிசிலாக அளித்தார். உலகியற் பொருள் களோடு தம்மைச் சேர்த்துப் பேசுவது கூடத் தம்முடைய இறுதிக்குக் காரணமாகுமென்ற நிலைபெற்றார். அவனே தந்தை; அவனே தாய்; அவனே தாம் உண்ணும் சோறு; தமது மாந்தி முதலிய யாவும் என்று கொண்டார்; அவ னையே எண்ணிப் புலம்பினார். அவனுடைய இணையடித்

தாமரைகளைக் காண, இமையவரும் வரும்படி அழகிய வேங்கடமலையில் சென்றுசேர்ந்த இறைவனை, அங்கேசென்று கண்டு, '**த்வயம்**' என்ற மந்திரத்தின் முற்பகுதியிற் சொல்லப் படுவது போன்று, சித்தோபாயத்தை மேற்கொள்ளுதலாகிய ''உன்னடிக்கீழமர்ந்து புகுந்தேன்'' என்று உபாயாவரணம் (பிரபத்தி) பண்ணினுர் ஆழ்வார்.

7. அவன்தன் திருப்பாதம் விட்டுப் பிரிய இயலாதவ ரான தம்மை அவன், தன்னை விட்டு விலக்கியோட்டும்படி யான ஐம்புலன்களின் நடுவே இவ்வுடம்போடே இருக்கும் படி வைத்துள்ளானே என்று வருந்திப் புலம்பினுர். சித்தோபாயத்தைப் பற்றிக் கொண்ட பின், பலன் கிடைக்கு மளவும் அவனைக் கூப்பிட்டுக் கொண்டேயிருப்ப தொழிய, வேறு செய்யலாவது யாதொன்றும் இல்லாமையாலே, அவன் மீது பழியிட்டுக் கூப்பிட்டார்; தம் நிலையைத் தாமே எடுத்துச் சொல்ல முடியாத நிலையை அடைந்துவிட்டார்; தேற்ற முடியாதபடி நெஞ்சத்தைப் பறி கொடுத்தார். இறைவன் தன் வீரச் செயல்களைக் காட்டித் தரிப்பித்தான்; ஆனுலும், உலக மக்களின் இழவை அவர் சிந்தை கூர்ந்த தால் அந்நிலையும் நிங்கியது. மீண்டும் அவனை நினைந்து அலறினுர். எங்கும் அவன் மேனி அவயவங்கள் தோன்றிப் பகையாய் நின்று நலிந்தன. இவ்வாறு துக்கமானது எடுப்பும் சாய்ப்புமாய் நடக்க, அவன்பாலும் தம்மிடமும் எவ்விதக் குறைபாடும் குற்றமும் இல்லாதிருக்கவும், மீண்டும் தம்மை இந்நிலைமையிலே வைத்தது ஏன் என்று காரணத்தைக் கேட்டார். அவனும் இப்படி விடை கூறினுன்: கருமங் காரணமாக வன்று, தானுக விரும்பித் தனக்கும் தன் அடியாருக்கும் கவி பாடுவித்துக் கொள்ள வைத்தானும். இது கேட்டு ஆழ்வார் வியந்தார்! விம்மித மெய்தினுர்! வியாசர் முதலான முனிவர்களும் முதலாழ் வார்களும் இருக்கவும், தம்மைக் கொண்டு கவி பாடு வித்துக் கொள்ள இறைவன் எண்ணிய உபகாரத்திற்குப் பெரிதும் உவகையரானுர். இதற்குக் கைம்மாறாகத் தம் ஆன்

மாவைக் கொடுக்கலாம் அவனுக்கு என்றால், அதுவும் தம்முடையது அன்று; அவனுடையது; ஆகையாலே, இரு வேறு உலகிலும் தாம் செய்யக் கூடுவது ஒன்றுமேயில்லை என்று தடுமாறும் நிலையரானார்.

பிராட்டியும் பெருமானும் சேர்ந்த சேர்த்தியால் உலகம் முழுவதும் வாழும்படி தலைமை தோன்ற வீற்றிருந்த **திருவாறன்விளை** என்னும் திவ்விய தேசத்தில் வைணவர் கூட்டத்திலே திருவாய்மொழி கேட்பித்து அடிமை செய்ய விரும்பினார். அந்நிலையில் இறைவன் இவருக்குப் பரம பதத்தை வழங்குவதாகக் கூறினன். தாம் திருவாய்மொழி கேட்பித்து அடிமை செய்யக் கருதிய கைங்கரியத்திற்குக் கேடு வந்ததே என்று கருதியமையாலே, 'பரமபதம்' என்று அதன் பேர் சொல்லுதலையும் சகித்துக் கொள்ள இயலாத வரானார். திருவாறன் விளையிலே உள்ளே ஆழ்வார் திருக் கூட்டம் போன்றே, தாம் களிக்கும் வண்ணம் கானம் இசைத்து இறைவன் புகழேத்தும் தெய்வ யாழோர் கூட்டத்தார் பரமபதத்தே சாமகானம் பாடுகின்றார். அவர் கூட்டம் இனியது என்பதைக் கூடச் சிந்திக்க இயலாத அளவு அவர் துக்கம் எல்லை இகந்தது. அந்தத் துயர வாதையிலே அனைத்தையும் மறந்தவரானார் ஆழ்வார்.

8. தாம் மேற்கொண்ட சொல்லின் தொண்டாகிய திருவாய்மொழி பாடுதலையும் ஆழ்வார் மறக்கும்படி செய்த அந்தக் கலக்கமும், கண்ணால் அவனைக் காண இயலாமையால் வந்த கலக்கமும், அவன் அடியவருக்குப் பரதந்திரன் தானா என்றும், எல்லாப் பொருள்களையும் அவன் உடலாக உடையவன் (பிரகாரி)தானா என்றும் உண்டான ஐயங்களும், இங்கேயே நிலைத்தால் உலகக் குற்றங்களில் உழல வேண்டுமே என்பதால் உண்டான அச்சமும் ஆகிய இவையெல்லாம் தீரும்படி இறைவன் அவர்க்கு, அவரைச் சொல்லின் தொண்டு செய்யும் அடிமையாகக் கொண்ட நிகழ்ச்சியை மெதுவே அன்போடு நினைவூட்டினன். ஆகா!

அவ்வளவில் ஆழ்வார் மீண்டும் தம்மை மறந்தார். முன்பு மறந்த நிலைவேறு; இந்த நிலை வேறு. இப்போது வந்த மறதியிலே அறிவின் வாதமெல்லாம் இல்லை. மறதி! மறதி! மறதிதான்! பித்தன் போலும் வள்ளல் போலும் செயல்களைச் செய்யும் பாவனை காண்கிறோம் இங்கே. ஆழ்வார் தமக்குரிய பணியை—தொண்டை—இறைவன் நினைவுறுத்திய மாத்திரத்தே, உவகைக் கடலில் ஆழ்ந்து, தம்மை மறந்து, முன்பு எந்த ஆன்மாவை 'இது நம்முடையதன்று; அவனுடையதே. இதை எடுத்து எப்படி அவனுக்கே வழங்க இயலும்?' என்று வாதம் செய்து, எண்ணிக் கலங்கினாரோ, அதே ஆன்மாவை இப்போது அது தம்முடையது அன்றாய் இருக்கவும், அதை உடையவனான அந்த எம்பிரானுக்கே தானம் வழங்குவது அசட்டுத்தனமாய் இருக்கவும், அவையெல்லாம் மனத்தே உறைக்காமல் மறதிக் களிப்பாலே தம்மதல்லாத அதைத் தம்மதாகவே பாவித்து, இல்லாதவனுக்கு வழங்குவது போல, உடையவனுக்கே—எல்லாம் உடையவனுக்கே—அந்த ஆன்மாவையும் உடையவனுக்கே அந்த ஆன்மாவுக்கு உரிமையும் உடையவனுக்கே அவர் வழங்குகின்றார். அந்த இறைவனோ, அது தன்னதேயானாலும் தன்னதல்லாத ஒன்றனைத் தானம் பெறுவான் போல, எவனுக்குத் தானே தந்தானோ, அவனிடமிருந்தே பெற்றுக் கொள்கிறான். வழங்கியவனுக்கோ சொந்தம் அல்லாதது அது; ஏற்றுக் கொள்வானுக்கோ தொடர்பற்ற பரிசிற் பொருள் அன்று அது; அவனுடைய உரிமைப் பொருளே. தானம் வழங்குவானும், தானம் ஏற்றுக் கொள்வானும் விந்தையான முறையில் வியத்தகு தானத்தால் தொடர்பு கொள்கின்றனர் இங்கே. தன்னதல்லாததைத் தானமாகப் பெற்றவன் எங்ஙனம் பூரிப்பானோ, அங்ஙனமே தன்னதைப் பெற்ற பகவானும் பூரித்து, ஒளிவிஞ்சி நிற்கின்றான்; மிக்க ஒளியுடையனானான். 'சோதி' என்றும், 'தோள்களாயிரத்தாய்! முடிகளாயிரத்தாய்! துணைமலர்க் கண்களாயிரத்தாய்! தாள்களாயிரத்தாய்! பேர்களாயிரத்தாய்!' என்றும் தம்மை அந்த

மகிழ்ச்சிப்பேரொளியில்இழந்தபடி, **தூமலர்க் கவிதை பொழி** கின்றார் ஆழ்வார். சீதையின் தன்மைகளான பிறந்த இடப் பாசம் விடல், பெருமானுக்கு மங்களாசாசனம் பண்ணுதல், அவன் வீரம் கண்டு அனுபவித்தல், பிரிவில் துயர் உறல் போன்றவற்றையெல்லாம் ஆழ்வார் பெற்றார். இறைவனும், அவரது அவ்வான்ம குணங்களைக் கண்டு மகிழ்ந்து, ஆழ்வார் தம் உள்ளத்தே அமர்ந்து, அவர் தன்னை நன்கு அனுபவிக் கும்படி அருள் செய்தான். பின், அவர் தன்னைவிட்டு அகன்று போகாதவாறு சிறுமை என்று அவர் பேசிய ஆன்மா வின் பெருமையை அவர்க்குக் காட்டினன். **ஆன்மா உடலின் வேறானது;** ஞான மயமானது; பிராட்டி போன்று பிறக்கு உரியதல்லாத இயல்பினது. **இறைவனுக்கே யன்றி அவன் அடியவர் அளவும் செல்லும்படியான பரதந்திர இயல்புடையது** என்று அதன் சிறப்பியல்பை (தம்மியல்பை இடையறாது சிந்திப்பவரானார் ஆழ்வார்.

9. ஆன்மாவின் சிறப்பியல்பைக் கண்டதற்குப் பலனாக, அவர், அவனை இடையீடின்றி அனுபவிக்கின்றதான அந்த அனுபவத்தின் தொடர்ச்சியை அவாவுகின்றார். அந்த அவா-அந்த ஆசை—முறைப்படி காலப் போக்கில் தானே அமை யும் என வாளா இராது, பொறுமையுடன் ஆறி இராமல், அவனிடம், 'நான் அங்குவந்து அடிமை செய்யவேண்டும். அல்லது நீ இங்கே வரவேண்டும்' என்று இரக்கலானார்; அந்த ஒரே நினைவினரானார்; அவனைக் கண்ணாற எந்நேர மும் காணக் கருதினார்; அவனை நினைப்பூட்டும் பொருள் களைக் கண்டு நோவுபடுதலால் வாழ்வை முடித்துக்கொள்ள முயன்றார்; அவனது சீலத்தை நினைக்குந்தோறும் நெஞ்சு கரையலானார்; ஆற்றாமையால் அரற்றினார்; இருதலைத்த மனமின்றி மிக்க பதற்ற முடையரானார். அந்நிலையில் மரணம் அடைதலே பேறு என்று நாள் குறிக்கப் பெற்று மகிழ்ச்சி மிக்கவரானார் ஆழ்வார்.

10. பேறு பெறும் காலம் அணித்தானதற்குப் பலன் அர்ச்சிராதி மார்க்கத்தில் வைகுந்தம் ஏறுவதாகும். அந்தப் பயணத்திற்குக் காளமேகம் போன்ற இறைவனை வழித்துணையாகப் பற்றினார் ஆழ்வார். அவன் தம்மை விட்டுச் சிறிதும் பிரிதலாகாது என்று பேசி, இனித் தாம் பேறு பெறுவதில் தடையில்லை என்றும், பிறவித் துன்பம் மீண்டும் வாராது என்றும் உறுதி கொண்டவராய், உலகினர்க்குத் தாம் சொல்ல வேண்டுவனவற்றை யெல்லாம், மரணதசையான வாறே மறைத்து வைத்த செல்வங்களை மக்கட்குக் காட்டுதல் போன்று, உபதேசிக்கத் தொடங்குகிறார்.

# 3. ஆழ்வார் செய்யும் உபதேசங்கள்:

1. ஆழ்வார் உலகினரை நோக்கி, உலகில் விடத்தக்கது இன்னது என்றும், அதன் குற்றம் இத்தகையது என்றும், அதனைவிடும் முறை இது என்றும் கூறினார். அவ்வாறே கொள்ளத் தக்கது இன்னது என்றும், அதனுடைய குணம் இன்னது என்றும், அதில் ஆன்மாவை ஈடுபடுத்தும் முறை இது என்றும் சொன்னார். இதற்குச் செய்யத்தக்கது பஜனை. அந்தப் பஜனைக்கு ஆதரவாக—அடித்தளமாக—ஆதாரமாக—நிற்பது **திருமந்திரம்**. 'அது இது' என்று அதையும் உபதேசித்தார். இவ்வாறு பஜனை செய்வதற்கு ஏற்ற அவனுடைய பல்வேறு பண்பு நலன்களையும் எடுத்துக் கூறினார். 'அத்தகு பெரியவனைப் பற்றுவது எளியதும் இனியதும் ஆகும்' என்றார்; 'அன்னவனைத் தொழுதால் வழியில் நிற்கும் தடைகளையெல்லாம் சுட்டெரித்து அரிய பயன்களை நமக்குத் தருவான்' என்றார்; 'நாள்தோறும் ஆன்மாவை முடிக்க முயல்கிற கொடிய வினைகள் எல்லாம் அவன்பால் பத்திசெய்ய முயலுமளவிலேயே மடிந்துவிடும்' என்று உபதேசித்தார்; கண்ணன் கீதையிலே சொல்லியுள்ள வழியில் நின்று, 'பரம்பொருள் ஒருவனே' என்னும் உணர்வு பெற்று, வேறு பயன் கருதாது பக்தி செய்யுங்கள்' என்றார். இறைவன் தமது அஞ்ஞானத்தைப் போக்கிப் பத்தி வடிவான ஞானத்தைக் கொடுத்தது போன்று, இவரும் உலகினர்க்குத் தம் அருட்குணத்தாலே அஞ்ஞானத்தைப் போக்கி, ஞானத்தையும் பத்தியையும்

உபதேசித்தார்; உலகர் அனைவரும் பகவத் வழிபாட்டில் (பஜனையில்) மூழ்கிக் களிக்கும்படி ஊக்குகின்றார்.

2. தாம் கண்டறிந்து, 'இவை தாம் எல்லை' என்று உறுதி செய்தபடி, இறைவன் மேன்மைக் குணங்களையெல்லாம் வெளியிட்டார். 'அடையத் தக்கோன் அவன்' என்றார்; அதனை நிலைநாட்ட, மற்றத் தெய்வங்கள் அவனை வணங்கி வழிபட்டுப் போற்றும் நூற்சான்று காட்டினார்; அந்தப் பரம்பொருளின் பெருமையை **அர்ச்சுனன்** நேரிற் கண்ணுற்ற கண்டதான காட்சிப் பிரமாணத்தையும் எடுத்துரைத்தார்; அவனை அடைய எண்ணுபவர்களுக்கும், முனைபவர்க்கும் அத்துறையில் ஒரு சுவை பிறக்கவேண்டும் என்பதற்காக மேலும் பல சொன்னார். விட்டு ஒழிக்க வேண்டிய இந்த உலகின்—பிறப்பு இறப்புச் சக்கரத்தின் பயனால் விளையும் துயரங்களும், துன்பங்களும் பற்றியும் 'இவையெல்லாம் நீத்து இறைவனைச் சென்றடைந்தால் பெறுகின்றபேறுஎந்நாளும் எல்லையற்ற பேரின்ப ஞானவெள்ளம்' என்றும் விளக்கினார்; 'இறையருள் நெறிச்செல்வார் மேற்கொள்ளவேண்டிய உபாயத்தின்சாரஸ்யம்—இனிமை—சிறப்பமைதி இவை' என்றும்கூறி, இறைவன் குணங்களைச் சிந்தை செய்து, அந்தத் திருக்கல்யாண குணங்களிலே மூழ்குங்கள் (குணோபாஸநம்)' என்றும் விரித்துரைத்தார். இதற்கு அங்கமாக, விலக்கியவற்றைச் செய்து, இளமையைப் பாழ் போக்காமல், மாலிருஞ்சோலை சேர்வது, ஏத்துவது, தொழுவது, வலஞ்சூழ்வது, அந்நெறியிலே செல்ல நினைந்திடுவது, இவைபோல்வனவாகிய க்ஷேத்திர வாசம், சங்கீர்த்தனம், அஞ்சலி, வலம் வருதல், கதி சிந்தனை ஆயவற்றையெல்லாம் மேற்கொள்ளுமாறு உபதேசிக்கிறார் ஆழ்வார்.

3. 'அமரர் குலமுதல் அவன்! அம்மா பெரியன்!' என்று உலகினர் அவனை அஞ்சி நீங்காதபடி, அவனது அவதார எளிமையை எடுத்துப் பேசுகின்றார். முன்னர் பேசிய அவதார எளிமை பரத்துவமாகத் தோன்றும்படியும்,

அர்ச்சையில் எழுந்தருளும் எளிமையை எடுத்துரைத்து அவன் நமக்கு மிக அண்மையன் என்று உணர்த்தும் அழகு போற்றத்தகுவதே! 'நல்லதோர் கதிதர—வழி தர—அவன் நமக்காகக் காத்து நிற்கின்றான். இழிந்த மனிதரைப் பாடி நிலை இழக்க நினைப்பது ஏன்? அவனே, வேண்டிற்றெல்லாம் தரும் நிறைவாளன். தன்னைப் போலவே ஆக்கும் வல்லவன். அவனைக் கவிபாட வாருங்கள்' என்று அழைத்தார். முத்தியைக் கொடுத்தல் எனும் அவனது அருஞ்செயலைக் குறிப்பிட்டு, மானிடரைப் பாடுதலாகிய நாய்த் தொழிலை விட்டு இறைவனுக்குச் சொல் தொண்டு புரிதலாகிய ஆன்ம இயல்பிற்கு ஒத்த தொழிலிலே சுவையை ஊட்டித் தாம் அவன் கவியானது போன்றே மற்றவர்களையும் இறைத் தொண்டு செய்பவராக்குகின்றார் ஆழ்வார்.

4. வைராக்கியம் பெற்ற—பற்றின்மை அடைந்த—ஆழ்வார், அரசபோகத்தின் அற்பத் தன்மையையும், துறக்கத்தின் நிலையாத தன்மையையும், கைவல்லியம் எனப்படும் ஆன்ம அனுபவத்தின் சிறுமையையும் கூறுகின்றார் முதலில்; பிறகு ஆடுகளின் இறைச்சி முதலாய படைத்துச் சிறு தேவதைகளை வழிபடும் கீழ்மையைக் கூறுகின்றார்; பிறகு, மற்ற தெய்வங்களாக மக்கள் போற்றுகின்ற தெய்வங்களின் அறியாமை, ஆற்றலற்ற தன்மை, மேலோனை விரும்பாமை முதலிய பண்புகள் பற்றியும், புறமதங்கள் பற்றியும், வைதிக நெறியிலேயே கோணல் நோக்குடைய மதங்கள் பற்றியும், அவற்றில் தாமஸ குணமே மேலோங்கியிருத்தல் பற்றியும் எடுத்துக் கூறுகின்றார்; ''வேறு தேவதைகளைப் பணிந்து அதன் பலனும் கண்டீர்கள்; இறைவன் தன் செயல்களை நூல்கள் கூறுவது கொண்டு அவற்றை அறிந்தும், இவனே பற்றத் தகுந்தவன் என்று தெளிய இல்லீர்! அதற்குக் காரணம் யாதென்பதையாயினும் அறிவீர்களா? பிரகிருதியை அமைத்து அவன் உங்களை மயக்கி வைத்துள்ளான் என்பதுதான் காரணம் என்பதை அறியுங்கள்!

அந்த மாயையை விலக்கவும் அவன் பாதமே சரணம்—உபாயம் என்பதை அறியுங்கள். அந்தத் திருப் பாதம் பற்றி அந்த மாயையினின்றும் தப்பப் பாருங்கள்! அவனுக்கு அடிமை செய்வதே இந்த ஆன்மாவுக்கு உறுதிப்பாடு—உறுதிப் பொருள்—என்பதை அறியுங்கள்'' என்று இவ்வாறெல்லாம் உபதேசிக்கின்றார் ஆழ்வார். இவ்வாறு உபதேசித்துத் தாம் பெற்ற வைராக்கியம் போன்று மற்றவர்களுக்கும் வைராக்கியம் உண்டாக்க முயல்கின்றார்; வேறு தேவதைகள், வேறு பயன்கள், புறமதங்கள், கோணல் மதங்கள் ஆகியவற்றில் பற்றின்மையை உண்டாகுகின்றார்; அந்தப் பற்றின்மை வாய்த்த பின்னே மீட்டும் சக்கரத்தைச் சுழல வைத்து இறைவன் மேல் பற்றை உண்டாக்குகின்றார். அதில் தேனூர்ந்த தீஞ்சுவை தோன்றச் செய்கிறார் ஆழ்வார்.

5. அடிமை புக்க வைணவரையும், அவர்களைத் திருந்தும்படி செய்த தம்மையும் காணுதற்கு வைகுந்தத்திலிருந்தும் வேறு உலகங்களிலிருந்தும் அமரரும் முத்தரும் வந்தனர். அவர்களைக் கண்டு காப்பிட்டார் ஆழ்வார். **பிரகலாதன்** சொல்லைக் கேளாத அவன்தந்தையும், **வீடணன்** சொல்லைக் கேளாத அவன் தமையனும் போன்று, தமது உபதேசம் கேட்டுத் திருந்தாத அசுரர், அரக்கர் இருக்கின்றார்களா என்று தேடிப் பிடித்து, 'நாட்டிலே தோன்றும் குறைபாடுகளும், கலிகாலத்தின் குறைகளும் நீங்க வேண்டின், எங்கும் பரந்துள்ள இறைவனடியார்களை அடைந்து வாழ்வு பெறுங்கள்' என்றார்; 'வேறு தெய்வங்களின் பாலுள்ள ஈடுபாட்டால் எம்பெருமான் பெருமையை அறியமாட்டாத நீங்கள், நீங்கள் வழிபடும் தெய்வங்களைப் பற்றி யறியவேண்டும். அந்தத் தெய்வங்களை அந்நிலையில் நிறுத்தியவனும் எம்பெருமானே என்பதையும், அந்தத் தெய்வங்களும் அவ்விறைவனையே வணங்குகின்றார்கள் என்பதையும் அறிந்து கொள்ளுங்கள். அந்தத் தெய்வங்களைப் போலவே நீங்களும் அவனைத் தொழுதால் பொல்லாத

காலத்தின் குறைபாடுகள் உங்களைப் பொருந்தா' என்று இவ்வாறெல்லாம் உபதேசித்து அவர்களை விஷ்ணுபத்தி நிலையில் நிலை நிற்பவராக்கினர். 'திருந்தினவர்கள் என்பவர்கள், உபாயத்தில் துணிவு பிறந்தவர்கள். அவர்களும் பதற்ற நிலையில் நிற்கும்போது ஆழ்வாரை இடித்துரைப்பவர்களே. காணக்கூடாதவற்றையும் காண வைக்கும் ஆற்றல் உடையதான பத்தி எனும் சித்தாஞ்சனத்தை அவர்களுக்குப் பூசுகிறார் ஆழ்வார். இந்தப் பத்தியாகிய மையை மனக்கண்ணிற்குப் பூசினல் பெறுதற்கரிய பேறும் இறைவன் வீறுகள் எல்லாம் தோன்றும். அத்தகைய பத்தியை உபதேசிக்கின்றார் ஆழ்வார்.

6. பிரபத்தி பண்ணின ஆழ்வார், முன் ஐந்து பத்துகளிலும் சாத்தியத்தை அடைதற்குச் சாதனமான சாதன பத்தியை உபதேசித்தார். அந்தப் பத்தியானது ஆன்மாவின் உண்மையான இயல்பிற்கு மாருக இருப்பதை நினைத்து வருந்துகிறார். அந்தப் பத்தியின் அருமைப்பாட்டை எண்ணி வருந்தி, இயற்கையின் போக்கில் ஓடும் மனிதனை நிறுத்தி, அவன் ஆன்மாவை மேலே உயர்த்தி, அவனை ஈடேற்ற முடியாதோ என்று கலங்குகின்றார் ஆழ்வார். அந்தக் கலக்கத்தாலே, தம்மைப் போலே—தாம் முன்பு இருந்தது போலே, இப்போது இருக்கின்ற இந்தத் தம் மொத்த நிலையினருக்கு அவர் தமது சொந்த வாழ்வின் அனுபவத்தைக் கூறத் துணிகின்றார். ''உங்களை அறைகூவி என் பக்கல் அழைக்கின்றேன்! ஏன் தெரியுமா? எப்படி இது கைவசமாயிற்றென்பதை அறிவீர்களா? அவன் தனது தாள் நிழலைத் தந்தனன். அவன் கழல்களன்றி மற்றோர்களைக் காண்கிலேன் என்று கிடந்தேன். மற்றும் அவன் அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேன்' என்று கூறுகின்றார். இப்படிக் கூவித் தம் பேச்சாலும் நடைமுறையைச் சொல்லுவதாலும் தமது சித்தோபாயத்தில் நிலைத்திருக்கும் நிலையை வெளிப்படுத்துகின்றார் ஆழ்வார்.

7. முன்பு தாம் உபதேசித்த கடைசி உபாயம் எனப் படும் சித்தோபாயத்தில் ஊன்றி நிற்பவர்களுக்கு, ஆழ்வார் பேற்றின் கடைசி எல்லையையும் அதை அடையும் சாதனத் தின் கடைசி எல்லையையும் அவர்கள் தெரிந்து கொள்ளும்படி உகப்பால் வெளியிடுகின்றார். இப்போது 'நீள் நகரம்' என்பது **திருவாறன்விளை.** அதுவே பேற்றின் எல்லை. எம் பெருமானைக் காட்டிலும் அவனுடைய தொடர்பு பெற்ற ஒன்றே பேற்றின் கடைசி எல்லை. வாணனைத் தோள் துணித்தான் சரணன்றி மற்றொன்றிலம் என்று அர்ச் சாவதார நிலையே உபாயத்தின் கடைசி நிலை எனக் குறிக்கின்றார்.

8. ஆன்மாவின் உண்மை இயல்பை அறிந்த—எண் ணிய—ஆழ்வாருடைய உபாயமும், உபேயமுமே தமக்கும் உபாயமும் உபேயமும் என்று இருக்கும் அவர்களை நோக்கி ஆழ்வார், அவர்கள் யாரும் இருகரையர் ஆகாதபடி— அதாவது, உபாயம் வேறு உபேயம் வேறு என்று— இரண்டும் தனித்தனி என்று—இரண்டினைக் கொள்ளாது, பேறு என்று குறித்த திவ்விய தேசமே உபாயமும் உபே யமும் என்று ஒன்றிலேயே ஊன்றி நிற்கும்படி செய்கின்றார்.

9. பேற்றுக்கு நாள் குறிக்கப் பெற்ற ஆழ்வார், தம் உபதேசம் கேட்டுத் திருந்தினவர்கள் தவிர, மற்றுள்ளவ ரான உபதேசம் கேட்க இயலாத—கேளாத—திருந்தாத அவர்களையும் விட முடியாத பரமகிருபையால் அறிவு கேடர் களான — அறிவிலிகளான — அவர்களுக்கும் உபதேசிக் கின்றார். 'உலகத்து மனைவிமக்கள் உறவினர் முதலியோர் உண்மையான அன்பினர் அல்லர்' என்றும், 'இறைவனே— ஆபத்துக்கு வந்துதவும் அவனே—உண்மை அன்பினன்' என்றும், 'அவனே மேலான உறவு' என்றும், 'அவனே காப்பவன்', 'அவனே இனியன்', 'அவனே இன்பவடிவினன்' என்றும், 'அவன் ஒருவனே உபாயம்' என்றும், 'அவனை ஒழிந்த மற்றை யாரும் அத்தகையர் அல்லர்' என்றும்,

மெய்ப்பிக்கின்றார். 'கண்ணன் ஒருவனே மேலாம் தெய்வம். அவன் ஒருவனே மாநிலத்து எவ்வுயிர்க்கும் உபாயம்' என்று முடித்துச் சித்தோபாயத்தை உபதேசிக்கின்றார் ஆழ்வார்.

அந்தச் சித்தோபாயத்தில் நம்பிக்கை பிறக்க வேண்டும். அது பிறக்கைக்குப் பேறு வேண்டும். அப்படி அச்சித்தோபாயத்தில் நம்பிக்கை பிறக்கைக்கு அடியான பேறு இல்லாதார் அதில்இழியார். அதில் இழியாதார்-இழியமாட்டார்-அறிவுக்குறைவு உடையார். ஆகவே, 'அத்தகையவர்கள் செய்யக் கூடுவது யாது?' என்பதும் ஒரு வினவாகின்றது. ஆழ்வார் அவர்களையும் விட்டுவிடவில்லை. 'காலையும் மாலையும் மலர் முதலியன கொண்டு, அவனை வழிபட்டு, பத்தி நிலையில் நிற்பவர் ஆகுங்கள்' என்று அங்கங்களோடு கூடிய பத்தியை அத்தகையோருக்கு உபதேசிக்கின்றார்.

செய்யவேண்டும் என்ற எண்ணம் உண்டேனும், செய்ய இயலாமை காரணமாகவும், வேறு உடனே கிட்டாமை காரணமாகவும் அப்பத்தியை அனுட்டிக்க ஆற்றலற்றவர் உளர் அன்றோ? 'அவர்கள் செய்யக் கூடியதுயாது?' என்பது மற்றொரு வினா. அவருக்கும் ஆழ்வார் கைவசம் விடை வைத்துள்ளார். 'இன்பம் அளிப்பதும், யாவருக்கும் தகுதியானதும், எடுத்த பிறவியின் (உடலின்) இறுதியிலே பலன் அளிப்பதும் ஆன பிரபத்தி மார்க்கம் பயிலுங்கள்' என்று அவர்களுக்கும் உபதேசம் செய்கின்றார் ஆழ்வார்.

மற்றும், சிலர் ஐயப்பாடுடையோர். உபாயமோ சிறிது; பலனோ பெரிது; மிகப்பெரியது! நினைத்துப்பார்க்க ஒண்ணாத அளவுபெரியது! தடைகளோ மிகுதி!மேலும் அவை உடைக்க முடியாத அளவு வலியன. நிலைமை இவ்வாறு இருத்தலால், இது எவ்வாறு கூடும் என்று ஐயம் கொண்டு பிரபத்தியில் துணிவு கொள்ளார். அத்தகு துணிவு கொள்ளுதற்கு ஏற்ற சத்தி அவர்கள்பால் இல்லை. எனவே இத்தகைய

துணிவற்றவர்க்கு வழி யாது? என்றால், ஆழ்வார் விடை தருகின்றார். 'திருக்கண்ணபுரம் சொல்ல நாளும் துயர்பாடு சாராமே; என்கின்றபடி அந்த இறைவன் பெயரையோ ஊரையோ சொல்லுங்கள்' என்று உச்சாரணத்தை விதிக்கின்றார் ஆழ்வார்.

வேறு சிலரையுங்கூட ஆழ்வார் தமது திருநோக்கில் அளந்தே வைத்திருக்கின்றார். பெயர் சொல்லவும் மாட்டாதார், ஒருமைப் பாட்டோடு உச்சாரணம் செய்யவும் இயலாதார், தாமே ஒரு பாசுரம் சொந்தமாய்ச் சொல்லுதற்கும் இயலாதார் ஆகிய இவர்களுக்கு-தகுதி குறைந்தவர்களுக்கு- அவர் சொல்வது இது: இத் திருவாய்மொழியைப் பத்தியோடு பாடி அவன் திருவடிகளிலே விழுங்கள் என்கின்றார். கீதாசாரியன் கண்ணன் செய்தது போன்றே ஆழ்வாரும் தமக்குப் பேறு அணித்தானவுடன் உலகினர் ஒருவரும் இழக்க வொண்ணாது இதை என்ற பரம கிருபையாலே அவரவர் தகுதிக் கேற்பப் பலவகை உபாயங்களையும் முறையாக எடுத்து உபதேசிக்கக் காண்கின்றோம்.

10. தம்மினும் இறைவன்பால் மிக்க ஈடுபாடுடையது தம் நெஞ்சு என்பது அவர் கருத்து ஆதலால், தம்மனத்திற்கு முதலில் 'பணி நெஞ்சே!' என்று ஆணையிட்டார். அடுத்து, 'மருள் ஒழி' என்கின்றார். இவ்வாறு செய்ய வேண்டுவன வற்றையும் தவிர்க்க வேண்டுவன வற்றையும் விதித்தவர், நெஞ்சு போல்வாரைத் 'தொண்டீர்' என்று அழைத்துச் செய்யத் தக்கதும், நினைக்கத் தக்கதும், பேசத் தக்கதும், கேட்கத் தக்கதும், காணத் தக்கதும், போதற்கு ஏற்ற இடமும் இவை என்று வெளியிடுகின்றார். திருவாய் மொழியின் தொடக்கத்தில் முதற்பத்தில் '**பிணக்கற**' என்ற பாட்டில் (1-7-5) 'வணக்குடைத் தவநெறி' என்று தொடங்கிய பத்தியோகத்தை இறுதிப் பத்தில்

''சார்வே தவநெறிக்குந்
தாமோ தரன்தாள்கள்'' (10-4)

என்று அது தன் பேற்றுடனே பொருந்தினபடியைச் சொல்லி முடித்தார்.

முன்னர் முதற்பத்தில் **''எண் பெருக்கு''** (1-2-10) என்ற பாடலில் வழிபாடு செய்தற்குப் பற்றுக் கோடாகச் சொல்லப் பட்டதும், **''எண்ணும் திருநாமம்''** (10-5-1) என்று வழிபாட்டின்போது இடையறுது நினைக்கும் திருநாமமும் ஆன திரு மந்திரத்தின் சொல்லையும் (ஒலியையும்), அதன் பொருளையும் **''நாரணம்''** என்றும் **''எம்மான்''** என்றும் சுருங்க உபதேசிக்கின்றுர். **''மாதவன்''** (1-10-7) என்று தொடங்கித் திருமந்திரத்தை **''த்வயம்''** என்ற மந்திரமாக வெளியிடுகிறுர்.

இறைவன் தம்மைக் கொண்டு போதற்கு விரைகின்ற படியாலும், கேட்கிறவர்களுக்கு ஈடுபாடு பிறக்கும் பொருட்டும் 'தாள்வாய்மலரிட்டு நாடீர்' என்றும், 'பாடீர் அவன் நாமம்' என்றும், 'நன் மலரிட்டு நினைமின்' என்றும் மனம் மொழி மெய் ஆகிய முக்கரணங்களாலும் இறைவனை வழிபடுதலை உலகினர்க்குக் கையோலையில் குறித்துக் கொடுப்பது போன்று சுருக்கமாகக் காட்டுகின்றுர், ஆழ்வார். தம்மைப் போன்று அனுபவமும் கைங்கரியமும் செய்பவர்க்கு அவர், 'அவனுடைய சீல குணத்திலே அகப்பட்டு அழுந்திவிடாது, உங்கள் உயிரைக் காவல் காத்துக் கொள்ளுங்கள்' என்று கூறுகின்றுர். இப்படிக் கூறுவதால் அவர்களை அவன் உள்கலந்து அழிக்கும் வழிக்குக் காவலிட்டார். இவர்தம் மனத்தைத் திருத்தினுன் இறைவன்; திருத்தியபின், 'இனியும் இவரை இங்கே இவ்வுலகில் இருக்க விடலாகாது' என்று இவர்க்காக வீடு திருத்தப்போனுன்; போய், அது செய்து திரும்புவதற்குமுன் இவர் தம் உபதேசத்தால் ஊரும் நாடும் திருந்தி இவர் இங்குச் செய்ய வேண்டுவனவான செயல் எல்லாம் செய்து முடிவுற, இவரைப் பரம பதத்திலே கொண்டு போகப் பதறினுன். இவர் எடுத்த இவ்வுடல் கடைசி உடலாகையால், அதில் தமக்குண்டான மோகத்தாலே தன் பதற்ற மிகுதியை மறந்து, தன் பரிவாரங்களுடன் அவ்வுடலில் புகுந்து, திவ்விய தேசங்களில் செய்யும் விருப்பத்தையெல்லாம் அதிலே காட்டி, ஆழ்வாரின் பல

உறுப்புக்களையும் அனுபவிக்கும்படி அவர் உடலில் சபல ஞான் இறைவன். அந்த இறைவனுக்கே, ஆழ்வார், உடலின் மாயையை எடுத்து விளக்கி அதனைக் கைவிடும்படி செய்தார்.

காரணமின்றியும் தம்மைக் கொண்டு போதலில் இன்று மிக்கு ஈடுபட்டவனான அவனை இதுகாறும் தம்மைவிட்டு வைத்ததற்குக் காரணம் கூறும்படி கேட்கின்றார் ஆழ்வார். அவனும், ''இந்திரியங்கட்கு அடிமைப்பட்டுப் புலன்கள் வழியே போனீர்'' என்பது முதலாய காரணங்களைக் காட்ட எண்ணுகின்றான். ஆனால், அவையெல்லாம் அவன் செயலே என்று அறியும் அறிவாளர் ஆழ்வார் என்று எண்ணி, ஒரு விடையும் கூறாது நின்றான். தன் தவறுகளை மறைப்பான் போன்றும் இவரைத் தன்னிடத்துக்கு ஏற்றுக் கொள்வதன் அறிகுறியாகவும் சில முழக்கங்களைச் சூழ்வீசும்பு அணி முகிலில் உண்டாக்கினான். அவ்வொலி செவிப்பட்டதும் அர்ச்சிராதிவழி பல்லக்குத் தூக்குவார் வழிபாடு, திவ்விய தேசப் பேறு, அங்குள்ளார் பாராட்டு முதலியவற்றைப் பெற்றவராய்ப் பேசும்படி, மேலான பேற்றை மனநிலையில் (மானசீகமாக) பெற்றார் ஆழ்வார். அந்நிலையை அகத்தே-மனத்தே மாத்திரமன்றிப் புறக் கரணங்களாலும் பெற வேண்டுமென்று பதறி அவனுக்குத் திருவாணை இட்டு அவனைத் தடுத்து, அது பெறாத ஆணையல்லாமைக்குப் பல ஏதுக்களையும் எடுத்துரைத்து அவா மிக்கவரானார்.

இந்தப் பரம பத்தி நிலையும் அற்பமானது என்று சொல்லும்படி மிகப் பெரியதாயிருந்தது இறைவன்றன் ஈடுபாடு. ஆழ்வாரின் அவாவின் அளவைச் சிறு குளம்பின் அடி போன்ற அளவினதாகக் குறிப்பிட்டால், இறைவனோ, கடம் போன்ற மிகப் பெரிய அளவினதான ஆசையுடன் வந்தான் என்றுதான் கூறவேண்டும். வந்தவன், இவருடன் கலந்து தன் விடாய் தீர இவரை அனுபவிப்பித்து, இவர் அலறிய அந்த வாயாலேயே ''அவாவற்று வீடு பெற்ற'' என்று பேசும்படி, அரி என்ற தன் பெயருக்கு ஏற்ப எல்லாத் தாபங்களையும் ஹரித்தமையை—அழித்தமையை—யாவரும் அறிய வெளியிடுகின்றார் ஆழ்வார் இறுதிப் பத்தால்.

# 4. ஐய வினாக்களும் அவற்றின் விடைகளும்

1. காரணமற்ற தன் பரம கிருபையால் ஆழ்வார்க்கு அஞ்ஞானம் நீக்கிப் பத்தி வடிவான ஞானத்தை ஈந்து, பின்னும் அவர்க்கு அவர் விரும்பிய பேற்றையும் இறைவன் அளித்தலைக் காண்கின்றோம். தம் பிரபந்தங்களில் முதல் பிரபந்தத்தில் முதல் பாட்டில் ஆழ்வார் பொய்ஞ்ஞானம், பொல்லா ஒழுக்கு, அழுக்குடம்பு ஆகியவற்றை நீக்க வேண்டும் என்று வேண்டுகின்றார். 'இறுதியில் அவ்வேண்டுதல் நிறைவேறியதாகப் பேசும் ஆழ்வாருக்கு, முன்னரே இறைவன் அருளாமைக்கு யாது காரணம்?' என்பது வினா. இதற்குக் காரணங்களாவன இவை.

(i) தன்னுடைய பல முயற்சிகளாலும் திருந்தாத உலகு ஆழ்வாருடைய உபதேசங்களாலேனும் திருந்தட்டுமே என்பதால்,

(ii) வேண்டியவுடனே வீடு கிடைத்துவிட்டால், பிரபத்தி என்பது தன்பால் வந்தவர்களை உடனே மாய்த்து விடும் நச்சுப் பொய்கையோ என்று மக்கள் ஐயம் கொண்டு, தன் பக்கம் யாரும் வந்து எதுவும் வேண்டுதல் செய்யாது போய்விடுவர் என்பதால்.

(iii) தானும் தன் அடியவர்களும் மகிழ இவரைக் கொண்டு கவி பாடுவித்துக்கொள்ளத் தொடங்கிய செயல் முழுதும் முடிவதற்காக.

(iv) வேர் சூட்டிக்கொள்பவர்கள் வாசனையின் விருப்பத்தானே, அதில் பற்றிய மண்பற்றையும் கழற்றுது சூட்டிக் கொள்வதுபோல, இவர் தம் உடம்பில் இறைவன் கொண்ட விருப்பத்தால்.

என்று இப்படிச் சில காரணங்கள் கூறலாமாயினும், இவை முக்கியமானவை அல்ல. 'இவருடைய ஆர்த்தி—ஆர்வம்—பெருகித் தகுதியுடையராக வேண்டும்' என்பதே முக்கியமான காரணமாகும். அது இவர்தம் நூலில் 20 (இருபது) இடங்களில் 'இனி, இனி' என்று பேசுவதனுல் தெளிவாகும். முதற் பாடலிலும் ஆரத்தி இருப்பினும், அது படிப்படியாக முற்றிக்கொண்டு போய், இறுதியில் பரமார்த்தியாகி, பேற்றிற்குத் தகுதிபெற்ருர் என்பதாம்.

2. 'பரபக்தி, பரஞானம், பரம பக்தி' என்பன பக்தியின் நிலைகள். ஆழ்வார்தம் பத்தியிலும் அந்நிலைமைகள் உண்டா? அவை எங்கெங்குப் புலப்படுகின்றன?

பல பாடல்களில் ஆழ்வார் 'கண்ணனைக் கண்டேன்' என்று பேசுகின்ருர். வேறு பல பாடல்களில் 'பாவியேற் காண்கின்றிலன்' என்பது போலவும் பேசுகின்ருர். மேலாக நோக்கும்போது, இவை, முரண்படுவது போன்று தோன்றலாம். கண்டேன் என்பது; உட்கண்ணுல் கண்டதாகவும், 'காண்கின்றிலன்' என்பது புறக்கண்ணுலும் காண ஆசைப்பட்டு அப்பேறு பெருமையைக் குறிப்பதாகவும் கொள்ளவேண்டும். அப்படியாளுல், முதற் பத்திலிருந்து முடிவு வரும் வரை அவர் நிலை என்ன? என்ற ஐயம் எழும். 'கண்டேன்' என்ற பேச்சு பத்துத் தரமும், அதனினும் இருமடங்கு 'காண அவாவுவன்' என்ற பேச்சும் வருதலால்; பர ஞானம் உள்ளே ஓடிக்கொண்டிருக்கிற பரபக்தியே ஆழ்வார் நிலை என்பது தெரியவரும்.

''கண்டு களிப்பக்
கண்ணுள்நின்று அகலான்''

(10—8—7)

என்பதுவரை இந்நிலைமை.

பரபக்தி முதல் நிலை. பரஞானம், அவனை அறிகின்ற நிலை. உள்ளே ஓடிக்கொண்டிருந்த பர ஞானம் எப்பொழுது முழுமை பெறுகின்றது?

> "அந்தமில் பேரின்பத்து
> அடியாரோ டிரிந்தமை" (10—9—11)

என்று நித்திய சூரியர் திரளில் தாம் இருப்பதாக ஆழ்வார் பேசும் பாசுரம், அவர் பரஞானம் முழுமையாகப் பெற்ற நிலையைக் காட்டும். **'சூழ் விசும்பு'** திருவாய் மொழியில் காணலாம். இதுவும் மானச அனுபவமே. பெருவிடாய் பிறந்து, கூப்பிட்டு, ஆற்றமாட்டாமல் திருவாணையிட்டு, அவனைத் தடுத்துப் பேற்றோடு கூடின.

> "முடிந்த அவா இல்
> அந்தாதி இப்பத்து"

என்னும் **'முனியே நான்முகன்'** பதிகமே பத்தியின் கடைசி எல்லையான பரமபத்தி நிலை கூறும் பகுதி.

3. பரபத்தி பரஞானம் பரமபத்தி என்னும் மூன்று நிலைகளைப்பற்றி யார் எங்கே பேசியிருக்கின்றார்?

கண்ணன் தேர்த் தட்டில் வீற்றிருந்து அருச்சுனனுக்குக் கீதையாகப் பேசினான்; அவனே சேர பாண்டியன் என்று அரியணைமீதிருந்து எம்பெருமானார்க்கு உரைத்தான். அது கத்தியமாய் (உரைநடை) உள்ளது. அவற்றில் இவை விளக்கப்பட்டுள்ளன :

**'பரபத்தி'** என்பது ஞானநிலை. அது 'எம்பெருமானோடு கூடுவது இன்பம்; பிரிவது துன்பம்' என்று இருக்கும் நிலை.

**'பரஞானம்'** என்பது, தரிசனநிலை. இறைவனுடைய இயல்பு, வடிவு, குணம், செல்வங்களை மிகவும் தெளிவாக நேருக்கு நேர் காண்பதுபோல அறிகின்ற நிலை.

**'பரமபத்தி'** என்பது, பேறு பெற்ற நிலை. அது உணர்ந்த பொருளை அப்பொழுதே பெருவிடில் முடிவு என்னும்படியான நிலை.

4. திருவாய்மொழியில் ஆழ்வாருடைய பலவான பத்தி நிலைகள் பேசப்படுகின்றன. இறைவன் குணங்கள் கூறப்படுகின்றன. ஆழ்வாருடைய பலவாய உபதேசங்கள் உள்ளன. ஐம்பொருள் பற்றிய உண்மை உள்ளது. ஒவ்வொரு திருவாய் மொழியிலும் (ஒருபதிகம்) ஒரு கருத்து உணர்த்தப் பட்டுள்ளது. ஒரு பத்தில்—அதாவது நூறு பாடல்களில் ஒன்றுபட்டதொரு கருத்து உணர்த்தப்பட்டு உள்ளதும் தெரிகின்றது. எனில், ஆயிரம் பாட்டிலும் கூறப்படும் ஒன்றான திரண்ட கருத்து—அதாவது தத்துவம் யாது?

பிறவிக்குக் காரணமான அஞ்ஞானத்தைப் போக்குவதான மதி நலத்தை—ஞான நிறைவை—அருளிய இறைவனது காரணமற்ற அருளாலேயே இறைவனை அடைதலாகிய மோக்ஷம் பெறுதலும் உண்டாகும் என்று தெளிவித்தலே **'மயர்வற'** என்று தொடங்கி **'வீடுபெற்ற'** என்று முடியும் பிரபந்தத்தின் ஒன்றான திரண்ட கருத்தாகும், 'எந்த இறையருள் ஞானத்தை அருள்கின்றதோ, அதுவே வீட்டையும் அருளவல்லது' என்பது இங்கு விளங்கும் தெளிபொருள் என்பதாயிற்று.

பூங்கொடி பதிப்பகம்

மயிலாப்பூர்-சென்னை 600 004.

wrapper printed by :
prabhu printing house, madras-600017.